
# களத்தில்

நாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் 30-12-1994

அன்பளிப்பு 40P


24

காந்தரூபன் அறிவுச்சோலை
**முதலாண்டு நிறைவு நாள்**
**(1994 கார்த்திகை 01)**
சிறப்புக் கட்டுரை
நடுப்பக்கத்தில்...



## காந்தரூபன் அறிவுச்சோலை மழலைகளுடன் எங்கள் காவிய நாயகன்

பூவோடு பூவாகித் தாயாகினான் - தலைவன்
புலர்கின்ற பொழுதோடு விளையாடுகிறான்
"ஆவேசப்புய"லிங்கு சிரிக்கின்றது - எங்கள்
"அறிவுச்சோலை" மலர்களெல்லாம் விரிகின்றது.

# எமது மக்களின் கஸ்டங்களை நீக்குவதே எமது முதல் விடயம்

**2ம் கட்டப் பேச்சுவார்த்தை விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகள் பகிரங்க அறிவிப்பு**

**"விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்கும் இடையே நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது, எமது மக்களின் நாளாந்தக் கஸ்டங்களை நீக்குதல் குறித்த விடயங்களுக்கே நாம் முன்னுரிமை கொடுப்போம்; அதன் பின்னரே அரசியல் தீர்வு குறித்து பேச்சு நடத்தப்படவேண்டும். முதலில் எமது மக்களின் கஸ்டங்களை நீக்குவதே பிரதானமான விடயம். எமது பகுதிகளுக்கான உணவு வழங்கல்களை சீராக்குதல், எமது மக்களின் போக்குவரத்துக்கான பாதைகளைத் திறத்தல், எமது பிரதேசம் மீதான பொருண்மியத் தடைகளை நீக்குதல் போன்ற மக்களின் நாளாந்த வாழ்வுக்கான விடயங்களே பேச்சுவார்த்தையின் போது முதலில் இடம் பெறவேண்டும்"**

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் புலிகளின் குரல் வானொலி மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

அவர் மேலும் "பேச்சுவார்த்தைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசாங்கமும் எட்டுக் கடிதங்களைப் பரிமாறிக் கொண்டுள்ளனர்; ஆயினும் உடன்பாடு ஏற்படவில்லை. கடைசியாக மார்கழி 22 ஆம் நாள் வியாழக்கிழமை தலைவர் பிரபாகரன் கடிதமொன்றை சிறீலங்கா அரசுக்கு அனுப்பிவைத்துள்ளார். இதில் எமது நிலைப்பாடு பற்றி விபரமாக விளக்கியுள்ளார். இதற்கான சிறீலங்கா அரசின் பதில் குறித்தே எமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஆரம்பமாகும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளின் முழுவிபரமும் மக்களுக்குத் தெளிவுபடுத்தப்படும்" எனக் கூறியுள்ளதாக புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது. ■

## போர்நிறுத்தம் எமது மக்களும் வட கிழக்கு மக்களும் விரும்புகின்ற நிரந்தரமான அமைதியின் முதற்படியாகவேண்டும்

**□ சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா செவ்வி**

"போர் நிறுத்தம் வெறும் போர் நிறுத்தமாக மட்டும் அமையாது, எமது மக்களும் வட -கிழக்கு மக்களும் விரும்பும் நிரந்தர சமாதானத்தை அடையும் அரசியல் தீர்வுக்கான முயற்சியில் இறங்குவதற்கான முதற்படியாக அமையவேண்டும்"

இவ்வாறு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா சிறீலங்காவின் அரச தொலைக்காட்சி நிறுவனமான ரூபவாகினிக்கு எனஅளித்த செவ்வியின்போது, லூசியன் கருணாநாயக்கவின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில் கூறினார்.

லூசியன் கருணாநாயக்க, செவ்வியின்போது கேட்ட கேள்விக்கு, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அளித்த பதில் வருமாறு:-

**கேள்வி:** "தங்களது அரசு ஆட்சிக்கு வந்தால் சமாதானத்தை மீண்டும் ஏற்படுத்துவதாக வலியுறுத்தி வந்தீர்கள்; இதன் அடிப்படையில், தென் மாகாணசபைத் தேர்தல், பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், ஆகிய மூன்று தேர்தல்களிலும் பொது சன முன்னணிக்கு மக்களின் அங்கீகாரம் கிடைத்தது. தாங்கள் பேச்சுவார்த்தையை தொடங்கினீர்கள். பேச்சுவார்த்தை சில காரணங்களால் இடைநிறுத்தப்பட்டது. இப்பொழுது எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி வடக்கிலுள்ள மக்களின் மனங்களில், இந்த அரசு சமாதான முயற்சியைக் கைவிடுமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இவ் அரசாங்கம் போர் முறையிலான

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

## புத்தாண்டு நாள் முதல் மோதல் தவிர்ப்பு உடன்பாடு

**சிறீலங்கா தரப்பில் தகவல்**

சிறீலங்கா தரப்புச் செய்திகளின்படி புதுவருடத்திற்கு முன்னர், சிறீலங்கா அரச பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளுடன் 2 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தையை தொடங்கவுள்ளதாகத் தெரியவருகின்றது. 2 ஆம் கட்ட பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி நடைபெறுமானால் புதுவருடத்துடன், 'மோதல் தவிர்ப்பு' அமுலுக்கு வரலாம் எனவும் சிறீலங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 ஆம் கட்டப்பேச்சுவார்த்தை பெரும்பாலும் இன்று (வெள்ளிக் கிழமை) நடைபெறும் என, இச் செய்தித்தாள் அச்சுக்குப் போகும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

## தஞ்சாவூர் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு யாழ். பல்கலைக்கழக அறிஞர்கள் புறக்கணிப்பு

தஞ்சாவூரில் எதிர்வரும் தைத் திங்களில் நடைபெறவுள்ள தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட சுமார் அறுபத்தைந்து ஆய்வுக் கட்டுரைகள் தமிழாராய்ச்சி மகாநாட்டு அமைப்பாளர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தமிழீழத்திலிருந்து பேராளர்களாகவும், பார்வையாளர்களாகவும் கலந்து கொள்வதற்காக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானவர்களுக்கு, தஞ்சாவூரில் அறுபது கோடி ரூபா செலவில் நடாத்தப்படவுள்ள இத்தமிழாராய்ச்சி மகாநாடு வெறும் வேடிக்கை, வினோத காட்சியாக மாறிவருகின்றதென அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

உண்மையான தமிழாராய்ச்சிக்கோ அல்லது தமிழ் அறிஞர்களுக்கோ முக்கியத்துவம் கொடுக்காது தமிழ் தேசியத்தின் சாயங்கூட வெளியே தெரியாத வகையில் மகாநாட்டை நடாத்தி முடிப்பதற்கு தமிழ் நாடு அரசு உறுதிபூண்டு நிற்கின்றது.

இம்மகாநாட்டுக்கு சிறீலங்கா அரசின் பிரதிநிதிகளாக திரு. தொண்டமான், திரு. ஜோசப் பரராசசிங்கம், திரு. மொகைதீன் ஆகியோர் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவினால் அனுப்பப்படுகின்றனர். ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# இனவாத சக்திகளுக்கு தகுந்த பாடத்தை நாட்டு மக்கள் கற்பித்துள்ளார்கள்

- அருட்திரு டி.ஜே. கனகரத்தினம்

"ஜனாதிபதித் தேர்தலில் வகுப்புவாதம் இனவாதம் என்பவற்றைக் கட்டவிழ்த்து விடுவதற்காகப் பெருமுயற்சிகளை மேற்கொண்ட சக்திகளுக்குத் தகுந்த பாடத்தை இந்த நாட்டு மக்கள் கற்பித்துள்ளனர்". இவ்வாறு அங்கிலிக்கன் திருச்சபையின் வடமாகாண முதன்மைக் குரு அருட்திரு டி. ஜே. கனகரத்தினம் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

"வெறும் அனுதாப உணர்வைத் தமது அரசியல் இலாபங்களுக்குப் பயன்படுத்த முடியாது என்பதை, மக்கள் இந்தத் தேர்தலின் மூலம் அரசியல்வாதிகளுக்கு உணர்த்தியுள்ளதுடன், வகுப்புவாத -இனத்துவேசப் பிரச்சாரங்களுக்கு கடந்த ஐம்பதுகளிலும் எண்பதுகளிலும் எடுபட்டு, இரையாகிப்போனதைப்போல இரையாகமாட்டோம் என்பதையும் அவர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள்" எனக்குறிப்பிட்டுள்ளார். ■

# நாகர்கோவில் பகுதியில் சேது நாணயம் கண்டெடுப்பு

வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலை அண்மித்த 'குடாரப்பு' என்னும் கிராமத்தில் சேது நாணயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நாகர்கோவில் பகுதியில் இந்துப் பண்பாடு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டுவரும் ஆசிரியர் திரு. வி. கனகராசா அவர்களால் இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் வசிக்கும் திரு. ம. தியாகராசா என்பவரே இதனை அடையாளம் காட்டினார். இவரது வீட்டுக்கு அண்மையில் சிறுகுழியொன்றை வெட்டியபோது, நொருங்கிய நிலையில் உள்ள மட்பாத்திரம் ஒன்றினுள் ஒருதொகை நாணயங்கள் கிடைக்கப்பெற்றன.

இச்சேது நாணயமானது பொதுவாக ஒழுங்கான வட்டமாக இல்லாத செம்பு உலோகத்தில் செய்யப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தின் முகப்பில் கம்பீரமான தோற்றத்துடன் அரசன் ஒருவன் காணப்படுகின்றான். அவனது இருபக்கமும் இரண்டு குத்துவிளக்குகள் காணப்படுகின்றன. சூலம் ஒன்றும் மலர்த்தட்டம் ஒன்றும் இடது பக்கத்தில் காணப்படுகின்றன.

நாணயத்தின் பின்புறத்தில் அழகிய, திமில்பருத்த எருது ஒன்றும் படுத்துள்ளது. அதற்குமேல் 'சேது' என்றும் தமிழில் எழுதப்பட்டுள்ளதுடன், இளம்பிறைச் சந்திரனும் காணப்பட்டது.

இந்த நாணயங்கள் கி. பி. 13 -17 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில், நல்லூரைத் தலைமையகமாகக்கொண்டு ஆட்சிசெய்த, ஆரியச் சக்கரவர்த்திகளினால் வெளியிடப்பட்டவை எனத்தெரியவருகின்றது. இக்காலத்தில் பொன், வெள்ளி, செம்பினால் நாணயங்கள் வெளியிடப்பட்டு இருந்ததாக அறியப்படுகின்றது.

இத்தகைய சேது அடைமொழி இராமேசுவரத்துடன் தொடர்புடையது எனத்தெரியவருகின்றது.

இந்நாணயங்கள் நல்லூர், திருநெல்வேலி, கோப்பாய், புத்தூர், வல்லிபுரம், நாரந்தனை, மாங்குளம், மாந்தைப் பகுதிகளில் கிடைத்துள்ளதாகக் கூறுகின்றார்கள். ஆயினும் நாகர்கோவில் பகுதியில் தற்போது கிடைத்துள்ளவை, அப்பகுதியின் வரலாற்றுச் சிறப்பினை மேலும் வலுவூட்டுகின்றது எனலாம். இந்த நாணயங்கள் அரசியல், பொருண்மியம், இவர்களது தொழிற்சாலையில் வேலைசெய்த வினைத்திறன்மிக்க தொழிலாளர் பற்றியும் குறிப்பிடப்படுகின்றது. ■

# சிறீலங்காவின் கால இழுத்தடிப்பினால் தொடரும் மோதல்களும், நம்பிக்கை இழப்புக்களும்

சிறீலங்கா அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வில் கால இழுத்தடிப்புச் செய்துவருவதனால் போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை, சமாதானம் என்பன தொடர்பாக புதிய அரசு மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையைச் சிறிது சிறிதாக இழந்து வருகின்றனர் என தமிழீழத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

சந்திரிகாவின் புதிய அரசு முற்போக்கான சிந்தனையுடன், தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமென ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மக்கள், தற்போதைய கால இழுத்தடிப்பினால் இன்றைய அரசின் மீதும் தமது நம்பிக்கையை இழந்து வருகின்றனர் என அறியமுடிகின்றது. விடுதலைப் புலிகள் காட்டிய நல்லெண்ண அறிகுறிகளும், பதிலுக்கு சந்திரிகா அரசு ஆரம்பத்தில் காட்டிய நல்லெண்ண செயற்பாடுகளும் அமைதியை விரும்பும் சகல தரப்பினராலும் வரவேற்கப்பட்டதுடன், அமைதி தோன்றும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. படையினரின் தொடர்ச்சியான சமாதான விரோதச் செயற்பாடுகளும் அரசின் அதனைக் கண்டுகொள்ளாத் தன்மையும், விடுதலைப் புலிகளையும் தமிழ் மக்களையும் சந்திரிகா அரசு மீது அதிருப்தி கொள்ள வைத்துள்ளது. எனினும் திறந்த மனதுடன் மேற்கொள்ளப்படும் பேச்சுவார்த்தை மூலமான, நீதியான சமாதானத் தீர்வை, விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் எதிர்பார்த்தவண்ணமே உள்ளனர் எனவும் மேலும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இக்கால இழுத்தடிப்பினால் வடக்கு-கிழக்கில் மோதல்களும் தொடர்ந்தவண்ணமே உள்ளன. அரசின் கால இழுத்தடிப்பைப் பயன்படுத்தி சிறீலங்காப் படையினர் தமது ஆளணிகளையும் ஆயுத தளபாடங்களையும் அதிகரித்து வருகின்றனர். குறிப்பாக தென்தமிழீழத்தில் சிறீலங்காப் படையினரின் தமிழ் மக்கள் மீதான சுற்றிவளைப்புக்களும், கைதுகளும், சிறைப்படுத்தலும், சித்திரவதைகளும், பாலியல் வன்முறைகளும் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளன. மட்டக்களப்பில் வாகரைப் பகுதியில் படையினரின் இவ் வன்முறைகள் மிக மோசமாக இடம்பெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. . 24-12-94 இல் வாகரைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடியில் இராணுவத்தினரின் பஸ் வண்டி சிக்கி முற்றாகச் சேதமடைந்தமைக்கும், 7 இராணுவத்தினர் இறந்து 23 இராணுவத்தினர் வரை படுகாயமடைந்தமைக்கும் சிறீலங்காப் படையினரின் தென்தமிழீழத்தின் மீதான அண்மைக்கால இன அழிப்பு நடவடிக்கைகளே காரணமென அவதானிகள் கருதுகின்றனர். ■

# தீவுப்பகுதி வீடுகளை ஈ.பி.டி.பியினர் தேர்தலின் பின் தீவைத்து எரித்தனர்

"சுமார் 36 மாதங்களாக வெளி உலகத்தொடர்புகள் ஏதுமின்றி, 'கிணற்றுத் தவளைகளாக', தனிமை சூழ்ந்த அவல வாழ்வு வாழ்ந்தோம். சிறீலங்காப் படையினரோ அல்லது ஈ. பி. டி. பியினரோ எம்மிடம் ஏதாவது கேட்பார்கள். எமக்குக் காது சரியாகக் கேளாததனால் திரும்பத் திரும்ப நாம் கேட்கவே அலுத்துப்போய் அவர்கள் போய் விடுவார்கள்.

91 ஆம் ஆண்டு இராணுவம் தரையிறங்கிய ஆரம்பகாலத்தில் வீடுகளை விட்டுமக்களை ஓரிடத்தில் கூடுமாறு பணித்தபின், அனைத்து வீடுகளையும் 'துடைத்து வழித்து' விட்டுள்ளனர். கல்வீடுகள் பெரும்பாலனவை பாழடைந்து போயுள்ளன. இருந்த ஓலைக்குடிசைகளோ அண்மையில் சிறீலங்காவில் நடந்த பொதுத்தேர்தலின் பின்னர் ஈ. பி. டி. பியினரால் தீயிட்டுக் கொழுத்தப்பட்டுவிட்டன. சாம்பல் மேடுகளே தற்பொழுது குடிசைகள் இருந்த இடங்களில் காணப்படுகின்றன.

ஒரு சிலர் படையினரால் கொல்லப்பட்டும், ஒரு சிலர் காணாமற்போயுமுள்ளனர். எமது பிள்ளைகளின் பெருமுயற்சியினால் நாம் இப்போதாவது யாழ். வந்து சேரமுடிந்தது" இவ்வாறு இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் தீவகப் பிரதேசத்தில் இருந்து பலத்த சிரமங்களின் மத்தியில் யாழ். வந்து சேர்ந்த நாரந்தனையைச் சேர்ந்த சுவாம் பிலிப் (வயது 84) என்ற வயோதிபர் எமது செய்தியாளரிடம் கூறினார்.

அரியாலை மணியரசன் குடியிருப்பில் தங்கியுள்ள இவ்வயோதிபர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "வாரத்தில் ஒரு தடவை தேவாலயத்திற்குச் செல்வோம். அங்கு தலையில்லாத, கையில்லாத, காலில்லாத சுருபங்களைத்தான் வழிபடுவோம். சிறீலங்காப் படையினர், ஈ. பி. டி. பியினரின் 'சொறித்'தனமான செயல்களே இதற்குக் காரணம். போகும் போதும் வரும்போதும் மேற்படி சுருபங்களைத் தட்டி ஏதோ ஒன்றை உடைத்துவிட்டுத் தான் போவார்கள்.

இதேபோன்ற செயல்கள் சைவக் கோவில்களில் உள்ள விக்கிரகங்கள், வாகனங்கள் என்பவற்றிலும் நடந்துள்ளன. காடுபோல் காட்சியளிக்கும் எமது பகுதியில் ஒரே வீட்டில் என்னுடன் இரண்டு பெண்களும் மற்றொரு வயோதிபரும் தங்கியிருந்தனர். நாங்கள் நால்வரும் வயோதிபர்கள் ஆகையால், பிள்ளைகளின் முயற்சியினால் அங்கிருந்து வெளியேறக்கூடியதாக இருந்தது" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். ■

## இராணுவ முகாம்களில் கடமையின் போது

# காணமற்போன சிற்றூழியர்கள் விபரம் வெளியிட அரசு பின்னடிப்பு

படையினரின் (இராணுவத்தினரின்) நடவடிக்கையின்போது, காணாமல்போகும் மற்றும் இறக்கும் படையினரினதும் காவலர்களினதும் விபரங்களை வெளியிடும் அரசு, படை -காவல் முகாம்களில் பணிபுரிந்து காணாமல்போகும் சிற்றூழியர்களின் விபரங்களை வெளியிட மறுப்பதாக, அரச சேவை தொழிற்சங்க சம்மேளனம் குற்றம்சாட்டியுள்ளது.

இதுபற்றித் தெரியவருவதாவது, வடக்கு -கிழக்கு மகாணங்களில் படை -காவல் முகாம்களில் பணிபுரிந்த சிற்றூழியர்கள் பலர், படையினரின் நடவடிக்கையின் போது காணாமல் போயுள்ளனர். இவர்கள் இறந்துள்ளார்களா அல்லது இவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய விபரங்களை வெளியிடுவதில், அரசு தயக்கம் காட்டுவதாக அரசாங்க சேவை தொழிற்சங்க சம்மேளனம் அரசுமீது குற்றஞ்சாட்டுவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அச்சங்கம் யாழ். கோட்டை மற்றும் காவல் நிலையங்களில் பணிபுரிந்து, காணாமல்போயுள்ளதாகக் கருதப்படும் ஆறு சிற்றூழியர்களின் விபரங்களை அறிவதற்காக அரச பொதுச்சேவைச் சங்க யாழ். கிளையின் உதவியை நாடியுள்ளதாகத் தெரியவருகின்றது. ■

# பாதைத் திறப்பு விவகாரம்

போக்குவரத்திற்கு ஆனையிறவுப் பாதையைத் திறப்பதற்கு சிறீலங்கா இராணுவமும், சிறீலங்கா அரசும் கடுமையாக முயற்சித்தபோதிலும் தமிழீழ மக்களின் பாதுகாப்பைக் கருதி, அப்பாதையினை போக்குவரத்திற்கு அனுமதிக்க முடியாது என விடுதலைப் புலிகள் உறுதியாகத் தெரிவித்துள்ளனர்.

அதற்கு மாற்றாக பூநகரி -சங்குப்பிட்டிப் பாதையைப் போக்குவரத்திற்குத் திறக்கலாம் என விடுதலைப் புலிகள் மாற்று ஆலோசனையை முன்வைத்தனர். கொழும்பிலிருந்து கிடைக்கும் உத்தியோகபூர்வமற்ற செய்தித்தாள் செய்திகளின்படி, பூநகரி -சங்குப்பிட்டிப் பாதையைத் திறப்பதற்கு சிறீலங்கா அரசும் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, தமிழீழப் பிரதேசத்தில் சிறீலங்காப் பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டுள்ள இடங்களை அண்மித்த பகுதிகளை இராணுவ சூனியப்பிரதேசமாக மாற்றுவதுபற்றி விடுதலைப்புலிகளுடன் சிறீலங்கா அரச பிரதிநிதிகள் பேசக்கூடுமென சொல்லப்படுகின்றது. இதன் நோக்கம் இந்தச் சூனியப் பிரதேசங்களில் எவரும் ஆயுதங்களுடன் நடமாடுவதைத் தடுப்பதற்கே என கருதப்படுகின்றது. மேலும் போர் நிறுத்தம் ஏற்பட்டால் அது கடைப்பிடிக்கப்படுவதை அவதானிப்பதற்கு கண்காணிப்புக் குழுக்களை அமைப்பது பற்றியும் விடுதலைப்புலிகளுடன் சிறீலங்கா அரசு ஆலோசிக்கவுள்ளதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன. ■

# திருமலையில் படையினரின் கெடுபிடி தொடர்கின்றது

திருகோணமலை மாவட்டத்தில் மக்களின் பயன்பாட்டுப் (பாவனை) பொருட்கள்மீது சிறீலங்காப் படையினர் தொடர்ந்தும் கட்டுப்பாடுகளை விதித்துவருகின்றனர். குறிப்பாகக் கிராமப்புறங்களில் இக்கட்டுப்பாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அத்தியாவசிய உணவுப்பொருட்கள் தொடக்கம் கட்டடப் பொருட்கள், எரிபொருட்கள் மீதும் கட்டுப்பாடுகள் தொடர்கின்றன.

பயன்பாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள், இதற்காக தத்தமது பகுதிகளில் உள்ள படை (இராணுவ) அதிகாரிகளிடம் அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். இதனால் மக்கள் அனுமதி பெறுவதற்காக காலையில் இருந்து நண்பகல் வரை கூடக் காத்திருக்கவேண்டியுள்ளது.

அத்துடன் கிராமப்புறங்களுக்கு மருந்துப் பொருட்களை அனுப்புவதிலும் சிறீலங்காப் படையினர் தொடர்ந்தும் கட்டுப்பாடுகளை விதித்துவருகின்றனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ■

# அதிகபுள்ளி பெற்றுள்ள மாணவர்கள் தெரிவு

கடந்த ஆண்டு நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில், அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கல்வி உயர்கல்வி அமைச்சு தெரிவுசெய்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 18 பேரும், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து தலா 6 மாணவர்களும் உச்சபுள்ளிகளைப் பெற்றுள்ளனர். ■

குண்டு விழுந்தாலென்ன குழி தோண்டிப்
- புதைத்தாலென்ன
கல்வியை விடாது காப்போம்.
- தமிழீழ மாணவர்கள்

# புத்தாண்டில் அமைதி

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான முன்னெடுப்புக்கள், சிறீலங்காவின் "கால இழுத்தடிப்பு" க்குள் சிக்கிக் கொண்டுள்ள நேரத்தில் 1994 ஆம் ஆண்டு பிரியாவிடை பெறுகின்றது.

94 இல் ஏற்பட்ட சிறீலங்காவின் ஆட்சி மாற்றமானது, இலங்கைத்தீவின் உண்மையான அரசியல் யதார்த்தத்தினை அங்கீகரித்து அதற்கேற்ப தேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாட்டிற்கு அரசியல் தீர்வினை ஏற்படுத்துமென எதிர்பார்த்த நெஞ்சங்களுக்கு "கால இழுத்தடிப்பினை"யே 94 பரிசாக வழங்கியுள்ளது.

இருந்தபோதிலும் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா அமெரிக்க "டைம்" (Time) இதழுக்கும், ரூபவாகினிக்கும் அளித்துள்ள இந்த மாதத்துச் செவ்விகள் சில உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன. ரூபவாகினிக்கு அவர் அளித்த செவ்வியில், "எமது மக்களும், வட-கிழக்கு மக்களும் விரும்பும் விதத்தில் போரை நிறுத்தி, நிரந்தரமான சமாதானத்தை அடையும் அரசியல் தீர்வுக்கான முயற்சியின் முதற்படியாக எதிர்பார்க்கப்படும் போர் நிறுத்தம் அமைய வேண்டும்" எனக்கூறியுள்ளார்.

இதில் முதற் தடவையாக, இலங்கைத்தீவில் எமது மக்களும் (சிங்கள மக்கள்) வட-கிழக்கு மக்களும் (தமிழீழ மக்கள்) இரு தனியான மக்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளார். இந்தவகையில் அவர், 'இரு நாட்டினங்கள்' (Two Nations) இலங்கைத்தீவில் வாழ்கின்றனர் என்பதை தன்னளவிலாவது ஏற்றுக் கொண்டுள்ளமை தெளிவாகிறது.

அவ்வாறாயின் சிங்களத் தேசியமானது, தமிழ்த் தேசியத்தின் முழுமையான இருக்கையினையும் வேறுபாட்டுத் தன்மையினையும் (National entity of Tamil Nation) ஏற்று, தமிழ்த் தேசியத்தின் முழுமையை -முழு உரிமைகளை நோக்கிய வளர்ச்சியினைத் தடை செய்யாமல் அவற்றிற்குரிய அரசியல் அமைப்பு ரீதியான கட்டமைப்பையும், சட்டவலுவையும் ஏற்படுத்த வேண்டும். இதை ஏற்படுத்தும் பொறுப்பு சந்திரிகாவுக்கே உண்டு. அவ்வாறு ஏற்படுத்துவதன் மூலமே, முழுமையான தேசிய சுதந்திரத்தையும், வளர்ச்சியையும் சிங்களத் தேசியம் சிங்களப் பிரதேசத்திலும், தமிழ்த் தேசியம் தமிழ்ப் பிரதேசத்திலும் அனுபவிக்க வழி பிறக்கும். இதன் அடிப்படையிலேயே இலங்கைத்தீவில் அமைதி மீண்டும் நிலைபெற வாய்ப்பு ஏற்படும்.

சந்திரிகா "டைம்" இதழில் அளித்த செவ்வியில், "விடுதலைப் புலிகள் தமது நோக்கை அடைவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது" எனக் கூறியதன் மூலம், "விடுதலைப் புலிகள் என்பது தடுக்கமுடியாது வளரும் தமிழ்த் தேசியத்தின் உன்னதமான செயல் வடிவம்" என்பதை உறுதிப்படுத்தியுள்ளார். அவருடைய இக்கருத்தின் மூலம், இந்தத் தேசிய முரண்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய பங்காளர்களாக (Parties of the Conflict) சிறீலங்காவும், தமிழீழ விடுதலைப் புலிகளும்தான் உள்ளனர் என்பதும் தெளிவாகிறது. தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படுவதற்கு முன்னர் இதய சுத்தியான பேச்சுவார்த்தை ஏற்படுவதற்கு, சிங்கள இனவாதத்தாலும் இராணுவவாதிகளாலும் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்விற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்குதல்கள் அகற்றப்படுதல் அவசியம். இதனையே கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் அவர்கள், "எமது மக்களின் நாளாந்தக் கஸ்டங்களை நீக்குவதே இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான எமது முதல் விடயமாக இருக்கும்" என்று குறிப்பிட்டதன் மூலம் தெளிவு படுத்தியுள்ளார்.

இந்த உண்மைகளின் பின்னணியில் இரு தேசியத்தினதும் 'மக்களுக்கு' நிரந்தரமானதும் உறுதியானதுமான அமைதி இலங்கைத்தீவில் ஏற்படுவதற்கு 1995 புத்தாண்டு உதவட்டும். "வாழு, வாழ விடு" என்பதே, புத்தாண்டு இலங்கைத் தீவின் இரு தேசிய இனங்களுக்கும் விடுக்கும் செய்தியாக உள்ளது. இதற்கு சிங்கள இனவாதிகளும் இராணுவ வாதிகளும் தடையிடத் துடிப்பார்கள் என்பது நாளாந்த அனுபவங்கள் காட்டும் உண்மை. ஆயினும், தலைவர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ அரசு நோக்கிய அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளின் 'தேசிய பாதுகாப்பு' (National Security) வழங்கும் இராணுவ ஆற்றலும் உள்ளவரை சந்திரிகா கூறியுள்ளது போல, "தமிழீழ மக்கள் தமது நோக்கை அடைவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது."

இந்தப் பலத்தின் பின்னணியிலேயே தமிழீழத் தேசிய இனம், இலங்கைத்தீவின் மற்றைய தேசிய இனமான சிங்களத் தேசிய இனத்துக்கு சமாதானத்திற்கான கைகளை நீட்டுகிறது. 1995 இல் இலங்கைத்தீவுக்கு அமைதி பிறக்கட்டும். ■

# காலம் வந்து கதவைத் தட்டி தந்த விளக்கே தலைவர் பிரபா

"நீண்ட காலத்திற்குப் பிறகு காலம் வந்து கதவைத்தட்டி, கைவிளக்கைத் தந்திருக்கிறது; அந்த விளக்கு தலைவர் பிரபாகரனே. பாலத்தீனத்திலும் ஆப்கானித்தானிலும் நடைபெற்ற போராட்டம் பேச்சுவார்த்தையில் முடிவடைந்தது என்பது பிழை. அப்போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் சரணடைந்ததில் போராட்டங்கள் முற்றுப்பெற்றன. இதுதான் உண்மை. இந்த மண் பணியாமலும் குனியாமலும் இருப்பதற்குக் காரணம் எமக்கொரு தலைவன் கிடைத்திருப்பதே" இவ்வாறு, அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெற்ற அ. கி. ஏரம்பு மூர்த்தி அவர்களின், உதயகீதங்கள் என்ற கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பேசும்போது விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை அவர்கள் தெரிவித்தார்.

"வேறொரு நாடாக இருந்தால் பணிந்திருக்கும்; குனிந்திருக்கும். எமது போராளிகளுடைய தளராத உறுதியும் தலைவரின் நேரான வழிகாட்டலும் இருக்கும் வரை இந்த மண் பணியாது.

இந்த நூலில் விடுதலை, சுதந்திரம் பற்றியே கவிதை படைக்கப்பட்டுள்ளது. கவிஞருக்கு வேறு பொருளே கிடைக்கவில்லை. காலத்தின் தேவையை உணர்ந்து இலக்கியம் படைத்துள்ளார்" என மேலும் தெரிவித்தார்.

இவ்விழாவில் தமிழீழ அரசியற்றுறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் கலந்துகொண்டு நூலை வெளியிட்டுவைத்தார்.

திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முன்னதாக மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. இன்பனும், சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. புஸ்பா கணேசலிங்கமும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

கலை, பண்பாட்டுக் கழக துணைப்பொறுப்பாளர் திரு. இ. ம. அன்பரசன் வரவேற்புரை நிகழ்த்தினார். இறுதியில் மதிப்பீட்டுரை இடம்பெற்றது. ■

# சமாதான முயற்சிக்கு உதவ பிரித்தானிய அரசு தயாராகவுள்ளது

**- பிரித்தானியப் பாராளுமன்றத்தில் வெளிவிவகாரத் துணை அமைச்சர்**

பிரித்தானியப் பாராளுமன்றத்தில் கார்த்திகை 29 ஆம் நாள் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், இலங்கைப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்புத் தரும்படி கேட்டால், பிரித்தானிய அரசு உதவத் தயாராக இருப்பதாக, அதன் வெளிவிவகாரத்துணை அமைச்சர் (தென்னாசிய விவகாரங்களுக்குரியவர்) ரோனி வோல்டி கூறியுள்ளார். இவர் கடந்த மாதத்தில் இலங்கைக்கு நேரடிப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய வெளிவிவகாரத் துணை அமைச்சர் இவ்விதம் கூறியதன் மூலம், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பங்காளர்களாக் (Parties of the Conflict) விடுதலைப் புலிகளையும் சிறீலங்கா அரசையுமே அமைச்சர் குறிப்பிட்டுள்ளார் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். தமிழீழ அரசு நோக்கிய அரசிற்கு, அனைத்துலக சமூகத்தில் ஆதரவும் அந்தஸ்தும் வளரத் தொடங்கியுள்ளதை, சமீபத்தில் ஐரோப்பிய அரசியல்வாதிகள் கையாளும் சொற்பதங்கள் வெளிப்படுத்துகின்றன எனவும் அவதானிகளால் கருதப்படுகின்றது.

இலங்கைக்குச் செல்வதற்குமுன் பிரித்தானிய வெளிவிவகாரத் துணை அமைச்சர், பங்களா தேசத்தில் இருந்து பி. பி. சி. செய்தியாளருக்கு அளித்த செவ்வியில், "இலங்கையின் சமாதான நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்வது சிறீலங்கா அரசுக்கும் அதில் சம்பந்தப்பட்டுள்ள மக்களுக்கும் இடையே உள்ள விடயம்; இலங்கை மக்கள் தங்களுடைய விவகாரங்களை எப்படிக் கையாள வேண்டும், தங்கள் சிக்கல்களை எப்படித் தீர்க்கவேண்டும் என பிரித்தானியா அரசு எந்த வகையில் கூறமுற்பட்டாலும், பிரித்தானியா திமிரான போக்குடையது -அவர்கள் மேலாண்மை செய்யப்பார்க்கிறார்கள் என இலங்கை மக்கள் கருதுவர்" எனவும் குறிப்பிட்டிருந்தார். அதனால், சம்பந்தப்பட்டவர்கள் தான் பிரச்சினைக்கான தீர்வினை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்பதையே பிரித்தானியா விரும்புகின்றது எனவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

முன்பு, இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவராக இருந்தவர், தமிழ் மக்களின் மருத்துவ நலன்களில் அக்கறை காட்டியமையை உள்நோக்காக வைத்து, "இலங்கையின் தேர்தல் விவகாரங்களில் தலையிடுகின்றார்" என்ற குற்றச்சாட்டின்பேரில் சிறீலங்காவால் வெளியேற்றப்பட்டமையையும், அதனால் சிறிதுகாலம் சிறீலங்கா -பிரித்தானிய இராசதந்திர உறவுகள் சீர்கெட்டிருந்தமையையும் குறிப்பிட்டுக்காட்டியிருந்த அவதானிகள், இச்சம்பவத்தை மனதில்கொண்டே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கலாம் எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்குப் பயணமாவதற்கு முன்னர் அளித்த செவ்வியில் துணை அமைச்சர் மேலும், "வடக்கு-கிழக்கின் புனர்வாழ்வு, புனரமைப்புப் போன்ற விடயங்களில் எம்மாலான உதவிகளைச் செய்யவேண்டிய கடமை பிரித்தானியாவுக்குண்டு; நான் அங்குள்ள அரச உறுப்பினர்களைச் சந்தித்து அவர்கள் சமாதான முயற்சியை எப்படிக் காண்கின்றார்கள் என அறிய விரும்புகின்றேன். அவர்களுக்கு என்னவிதத்தில் உதவலாம் எனவும் பார்க்க விரும்புகின்றேன்" எனவும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ■

# சமாதான முயற்சிகளுக்கு ஐரோப்பிய சமூகம் ஆதரவு

இலங்கையில் நிலவும் இனச்சிக்கலுக்கு சமாதான வழியில் தீர்வுகாண, புதிய அரசு எடுக்கும் முயற்சிகளை ஊக்குவிப்பதற்கென, ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதென, சில ஐரோப்பிய சமூகநாடுகள் முடிவுசெய்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பல ஆண்டுகளாக இலங்கையில் நிலவிவரும் இனச்சிக்கலுக்கு விரைவில் தீர்வு ஒன்று காணப்படல் வேண்டுமென ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த யேர்மனி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து போன்ற நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன.

இவை இலங்கையில் இனச்சிக்கலுக்குத் தீர்வு காணும்வகையில்தனித்தனியாக அழுத்தம் கொடுப்பது ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதாக உலகின் கருத்து நிலவுவதால், இம்மூன்று நாடுகளும் இணைந்து இலங்கையின் இனச்சிக்கலுக்குத் தீர்வுகாண்பதற்கு புதிய அரசு எடுக்கும் அனைத்து ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கும் தமது முழுநிறைவான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளன.

இது குறித்து, இம்மூன்று நாடுகளும் ஐரோப்பியப் பாராளுமன்றத்தில் கூட்டாகப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவரத் தீர்மானித்தன.

யேர்மன் நாட்டின் வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர், இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "சிறீலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் எடுக்கும் முயற்சிகளை, நாம் கூட்டாக ஊக்குவிக்கத் திட்டமிட்டிருக்கின்றோம்; அரசின் முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். அத்துடன் தேவையான உதவிகளையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம்" என்றார். ■

## 1995 ஆம் ஆண்டுக்கான விடுமுறை நாட்கள்

தமிழீழத்தில் விடுமுறை நாட்கள் தொடர்பான பிரகடனம், தமிழீழ நிர்வாக சேவைப் பகுதியினரால் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழீழத்தில் நாட்காட்டி வெளியிடும் அனைத்து நிறுவனங்களும் 1995 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டியில் கீழ்வரும் நாட்களை மட்டுமே விடுமுறை நாட்களாக வெளியிடுமாறு நிர்வாகசேவைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

நிர்வாக சேவைப் பகுதியினரால் **பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விடுமுறை** நாட்கள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| சனவரி 15 ஞாயிறு | - பொங்கல் திருநாள். |
| பெப்ரவரி 27 திங்கள் | - மாசிவராத்திரி. |
| மார்ச் 3 வெள்ளி | - றம்ழான். |
| ஏப்பிரல் 14 வெள்ளி | - பெரியவெள்ளி. |
| | - புத்தாண்டுப் பிறப்பு. |
| ஏப்பிரல் 15 சனி | - சித்திரைப் பௌர்ணமி. |
| ஏப்பிரல் 19 புதன் | - அன்னை பூபதி நினைவு நாள். |
| மே 1 திங்கள் | - அனைத்துலக உழைப்பாளர் நாள். |
| மே 10 புதன் | - கஜ்யுப் பெருநாள். |
| யூன் 30 வெள்ளி | - சிறப்பு வைப்பக (வங்கி) விடுமுறை. |
| யூலை 5 புதன் | - கரும்புலிகள் நாள். |
| யூலை 27 வியாழன் | - ஆடி, அமாவாசை. |
| செப்டம்பர் 26 செவ்வாய் | - தியாகி திலீபன் நினைவு நாள். |
| அக்டோபர் 10 செவ்வாய் | - மாலதி நினைவு நாள். |
| நவம்பர் 6 திங்கள் | - தீபாவளி. |
| நவம்பர் 27 திங்கள் | - மாவீரர் நாள். |
| டிசம்பர் 25 திங்கள் | - நத்தார். |

# வடபகுதி போரை தொடர்வதற்கு பாதுகாப்புச் செலவு அதிகரிப்பு

வடக்கு - கிழக்குப் போர் காரணமாக சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவீனம் 27 விழுக்காட்டால் அதிகரித்துள்ளதெனவும், இதற்கான அங்கீகாரத்தை சிறீலங்கா நாடாளுமன்றம் அண்மையில் வழங்கியுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வங்கீகாரத்துக்கு அமைய வடபகுதிக்கு அனுப்பப்படுவதற்காக போர்த் தாங்கிகள், போர் விமானங்கள் ஆகியன கொள்முதல் செய்யப்படவுள்ளன. மேலும், இதன் முதல் நடவடிக்கையாக 3 மிக் -17 உலங்குவானூர்திகள் கொள்முதல் செய்யப்படும்.

பாதுகாப்பு சம்பந்தமாக எழுப்பப்பட்ட மேலும் பல வினாக்களுக்கு, பாதுகாப்புச் செயலாளர் கமில்டன் வனசிங்கா பதிலளிக்க மறுத்துவிட்டதாக, பிரான்ஸ் வானொலியை மேற்கோள்காட்டி 'வெரித்தாஸ்' தனது சிங்களச் சேவையில் செய்தி வெளியிட்டுள்ளது. ■

# போர் நிறுத்தத்துக்கு உத்தரவிட ஜனாதிபதி சந்திரிகாவுக்கு சந்தர்ப்பம்

- இலண்டன் கார்டியன் செய்தித்தாள் கருத்து

விடுதலைப் புலிகளுடன் பேசுவது, வேலையற்ற விரயமான விசயமாகக் கருதிய படை (இராணுவ) ஜெனரல்களுக்குக் கூட உடனடியாக போர் நிறுத்தத்தை ஏற்படுத்துங்கள் என்று உத்தரவிட, திருமதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு சந்தர்ப்பம் வந்துள்ளது. இவ்வாறு இலண்டன் கார்டியன் செய்தித்தாள் கருத்து வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட திருமதி திசாநாயக்கா சமாதானப் பேச்சுவார்த்தைக்கு எவ்விதத்திலும் உதவாத நிபந்தனைகளை விதித்தது தவறு எனவும் குறிப்பிட்டுள்ளது அச்செய்தித்தாள். மேலும் காமினி திசாநாயக்கா குழு -ரணில் விக்கிரமசிங்கா குழு என இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட முரண்பாடே, ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்குக் காரணமாகும் எனக்குறிப்பிட்டுள்ளது. ■

# சந்திரிகா அரசிடம் தீர்வு இல்லாமையே கால இழுத்தடிப்பின் காரணம்

□ ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில்

அமைதிப் பேச்சுவார்த்தைகளை பின்போட்டு கால இழுத்தடிப்புச் செய்யும் சந்திரிகாவின் செயல் குறித்து, சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் சிறீலங்காப் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவும் கருத்து வெளியிட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான திடமான கொள்கையோ, வழிமுறைகளோ சந்திரிகா அரசிடம் இல்லாமையே, பேச்சுவார்த்தைக்கான கால இழுத்தடிப்புக்குரிய காரணம் என தான் கருதுவதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். ■

# சிறீலங்கா தெரிவு அத்தாட்சி அதிகாரி மூலம் தமிழீழ அரசின் இறைமை வெளிப்பாடு

சிறீலங்காவின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், சிறீலங்காவின் பாராளுமன்றத் தேர்தல் ஆட்சேபமனு விசாரணையின் பொழுது, சாட்சியமளித்த, யாழ். மாவட்டத்திற்கான சிறீலங்காவின் தெரிவு அத்தாட்சி அதிகாரியாகப் பணியாற்றிய பெரேரா, தமிழீழ அரசின் இறைமையை வெளிப்படுத்தினார். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் தேர்தல் நடக்கவில்லை என அவர் பகிரங்கமாக சாட்சியமளித்தார். "யாழ். தேர்தல் மாவட்டம் பூராவும் தேர்தல் நடாத்த முயற்சிகள் எடுத்தபோதிலும், அப்போதைய சூழ்நிலையின் பின்னணியில் நடத்த முடியவில்லை; தேர்தல் கடமைகளுக்கு அங்கு ஆட்களை அனுப்பமுடியவில்லை; புலிகள் அனுமதித்திருந்தால், நடத்தியிருக்கலாம்" என அவர் மேலும் கூறினார்.

சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள ஆனையிறவில் ஒரேயொரு வாக்காளர் மட்டுமே இருந்தார் எனவும் அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்தார்.

இதன்மூலம் மக்கள் நடமாட்டமற்ற சூனியப் பிரதேசங்களே பெருமளவில் சிறீலங்காப் படையினரிடம் உள்ளன என்ற உண்மையையும் அவர் ஏற்றுக்கொண்டார். யாழ். மாவட்டத்திற்கான 445 வாக்களிப்பு நிலையங்களில் 82 வாக்களிப்பு நிலையங்களிலே வாக்குகள் பதிவாகின. இவ்வாக்களிப்பு நிலையங்கள் அப்பிரதேசங்களில் அமைக்கப்படாது, கொத்தணிமுறையில் சிறீலங்காப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்தன எனவும் அவர் தெரிவித்தார். அத்துடன் 1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர், வாக்காளர்பட்டியல் திருத்தப்படவில்லை எனவும் யாழ். மாவட்டத்தில் தேர்தல் வாக்காளர் அட்டை விநியோகிக்கப்பட்டதா எனத்தெரியாது எனவும் இவ்வழக்கில் தெரிவிக்கப்பட்டது.

இவற்றின் மூலம் சிறீலங்காவின் இறைமை, தமிழீழத்தின் மீட்கப்பட்ட பிரதேசங்களில் முற்றாகச் செயலிழந்து, தமிழீழ அரசின் இறைமை தோன்றிவிட்டமை உலகுக்குத் தெளிவாக நிரூபணமாவதாக, அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ■

## அயல் நாட்டுச் செய்திகள்

# போர் நிறுத்தம் ஏற்படாதவரை புலிகள் தாக்குவதில் தவறில்லை

- நியூட்டன் செனவிரட்ணா

"போர் நிறுத்தம் ஒன்று இன்றுவரை ஏற்படாத நிலையில், விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவருகின்றனர். இதுதான் அண்மையில் வெற்றிலைக்கேணியில் நடந்தது" என, 'ராவய' செய்தித்தாளின் செய்தி ஆசிரியர் நியூட்டன் செனவிரட்ணா தெரிவித்துள்ளார்.

இலண்டன் பி. பி. சியின் சிங்களச் சேவைக்கு செய்மதி ஊடாக அவர் வழங்கிய செவ்வியில் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறுகையில், "போர் நிறுத்தம் ஏற்படாத நிலையில், புலிகள் செய்வதை பிழை என்று கூறமுடியாது; சில தாக்குதல்களை படையினர்கூட (இராணுவத்தினர்) செய்துள்ளனர். ஆனால் இவ்வாறான தாக்குதல்கள் சமாதானப் பேச்சுக்களை எந்தவிதத்திலும் பாதிக்கப்போவதில்லை என்பது மட்டும் உறுதி" என்றார். ■

# ஒரு மயக்கம் தெளிந்த...

எண்டு சட்டம் வரப்போதாம்; அதுக்குமுந்தி வாங்குவோம் எண்டுதான்".

"38, 40 தாண்டினதை லட்சம் குடுத்து எண்டாலும் கரை ஏத்திப்போடலாம்; சட்டம் வந்தால் அதுகளை என்ன செய்கிறது".

"உந்தச் சீதனக்கொடுமை இல்லாட்டி, ஏன் நரைதட்டும் மட்டும் கிடக்குதுகள் என்ன... விதியே?"

அங்கேவந்த காரின் ஒலி எல்லோர் கவனத்தையும் திசை திருப்பியது.

"அக்கா... அக்கா" ஓடிவந்தாள் சாந்தி.

பூரணி நீண்டவகிடு எடுத்து, தலையை அள்ளி முடிந்தாள். ஒரு பூவினைக் கரையில் சொருகினாள்.

"பொம்பிளையைக் கூட்டி வாங்கோ".
"என்ன எழுத்தோ, கலியாணமோ?"
"இரண்டும் தானாம்".
"அதார் சாட்சிபோட நிற்கிறது".
இப்படிப் பல குரல்கள்.
"எங்கை சொல்லுங்கோ" - றெஜிஸ்ரார்.
"சிறிமான் வினாயகம்பிள்ளை ஆகிய நான், இப்பெண் பூரணியை சட்டரீதியாக மனைவியாக்கிக்கொள்கிறேன்; இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கு எடுத்துக்கொள்வேன்; இது சத்தியம்.
"எங்கை நீங்கள் சொல்லுங்கோ".
"சிறிமதி பூரணி ஆகிய நான்..."
"சொல்லன் பிள்ளை".
"அவாவுக்கு வெட்கமாய் கிடக்குபோலை;" ஏளனமான ஒரு குரல்.
"வெட்கப்படுகிற வயதுதானே".
"சொல்லன் பிள்ளை".
"சிறிமதி பூரணி ஆகிய நான் இச்சபையில் கூறுவதாவது, சீதனப் பேய்பிடித்து, மூன்று லட்சம் பணத்திற்காகவும் வீட்டிற்காகவும் திருமணம்புரியவந்த இவரை, இச்சபையோர் சாட்சியாக நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதுமட்டுமல்ல, இன்று தொடக்கம் நான், இந்த மண்ணின் விடிவிற்காக தங்கள் உயிரையும் மதிக்காமல் போராடி, தங்கள் உடல்களில், வீரமறப்புண்களை ஏந்தி அல்லல்படும் போராளிகளுக்குத் தொண்டுசெய்யவும் அவர்களைப் பராமரிக்கவும் என் வாழ்நாளைச் செலவுசெய்வேன்; இது உறுதி".

கணீரென்று ஒலித்த அவள் குரல் அனைவரையும் திகைக்கவைத்தது. அவர்களுக்கு மயக்கம் தெளிந்தபோது, அவள் நிதானமாக நடந்துசெல்வது தெரிந்தது. ■

# குழந்தைகளைக் குடும்பச்...

கிடைக்கின்றது. உடனடி மருத்துவம் தேவைப்படின், நோய்க்குட்பட்டவர்களை மருத்துவமனைக்கு உடன் எடுத்துச்செல்லும் மருத்துவப்பணியும் உண்டு.

அறிவுச்சோலை வாழ்வதிவிடங்களின் சுற்றாடலில் வாழும் பறவைகளும் உயிரிகளும் (பிராணிகளும்) பிள்ளைகளைக் களிப்புடனும் ஜீவ காருண்யத்துடனும், உயிர்களிடத்தில் அன்பு செலுத்திவாழ உதவுகின்றன. வீடுகளுக்கிடையே ஒதுக்கப்பட்ட முற்றங்களில் கூடுகள் அமைத்து முயல், மயில், பல இனக்கோழிகள், காதல் குருவிகள் மற்றும் மீன் தொட்டிகள் வைத்துப் பிள்ளைகளைக் "காக்கைக் குருவி எங்கள் சாதி", "நீள்கடலும் அலையும் எங்கள் கூட்டம்" எனும் உணர்வு ஏற்பட அறிவுச்சோலை வாய்ப்பளித்துள்ளது. பள்ளிநேரம் தவிர்ந்த ஏனைய வீட்டு வாழ்க்கைநேரம் மாணவர்களை விரைவாகவும், ஊக்கத்துடனும் தொழிற்படத் தூண்டுகின்றது. 8 அகவைக்குக் (வயது) கீழ்ப்பட்டோர் தவிர, ஏனையோர் காலை ஆறு மணிமுதல் இருபது மணித்துளிகள் (நிமிடம்) விளையாட்டுத்திடலில் ஓட்டப்பயிற்சியில் ஈடுபடுவர். அடுத்த 20 மணித்துளிகள் உடற்பயிற்சி நடைபெறும். தொடர்ந்து இல்லச் சூழல், தூய்மை, தாம் வளர்க்கும் செடி கொடிகளுக்கு நீர் பாய்ச்சுதல் இடம்பெறும். இல்ல மாணவர்களில் இருவர் விரும்பிக்கேட்டு, ஆடு ஒன்றினையும் குட்டிகளையும் வளர்த்து வருகின்றனர். இவர்களின் பேணுகையில் உள்ள ஆட்டினத்தை ஏனையோர் பார்த்து மகிழ்வதும் உண்டு. காலை ஏழு மணிக்கு குளிக்கச்செல்லும் மாணவர், மணி 7.50 இற்குள் தாய்மார் எடுத்துவைக்கும் ஆடைகளை அணிந்துகொண்டு, உணவருந்தியதும் பாடசாலைக்குச்செல்ல, தத்தமது வீடுகளின்முன் பத்துப் பத்துப் பிள்ளைகளாக நிரைப்பட்டு நிற்பர். பள்ளி மணியோசை எழுந்ததும் பள்ளிக்குச் செல்வர்.

திங்கள், புதன், வெள்ளி இருநேரப் பள்ளிநாட்கள். இந்நாட்களில் பள்ளி முடிய, இல்லத்திற்கு வந்ததும் தேநீர் அருந்திவிட்டு, விளையாட்டுத்திடலில் பயிற்சிக்கு அணியணியாகச் செல்வர். ஞாயிறு தவிர்ந்த ஏனைய அரைநேரப் பள்ளியால் வந்ததும் மாலை மூன்று மணிவரை ஓய்வு. சிலர் தூங்குவர்; ஒருசிலர் படித்துக்கொண்டிருப்பர்; வேறுசிலர் மாஞ்சோலையில் ஓடிப்பிடித்து விளையாடிக் களிப்பர். ஓய்வு முடிந்ததும், ஒன்றரை மணிநேர நுண்கலைப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வாய்ப்பாடு, நரம்புக்கருவி, தோற்கருவி இசையில் மாணவர்கள் விருப்புக்கேற்ப பயிற்றப்படுகின்றனர். இசைப்பயிற்சி முடிவில் மாலை தேனீர் நேரம். பின்னர் விளையாட்டுத்திடலில் பெரு விளையாட்டுக்களில் பங்கேற்பர். ஆறு மணிக்கு வீட்டுக்குவரும் மாணவர்கள், தம்மைத் தூய்மைப்படுத்திக்கொண்டு, மாலை 6.30 இற்குத் தொடங்கும் யோகாசனப் பயிற்சிக்கு மிகப்பௌலியமாகச் செல்வர். 45 மணித்துளிகள் ஆசனப் பயிற்சியின்பின், இல்லத்திற்கு மீளும் பிள்ளைகள் தாமாகக் கற்றல் முயற்சியில் இரவு 9 மணிவரை ஈடுபடுத்தப்படுகின்றனர். பள்ளியில் தரப்படும் வீட்டுப்பணிகளை நிறைவுசெய்வதோடு, பள்ளியில் படித்தவற்றை மீட்கவும்செய்வர். இல்லத்துறையும் ஆசிரியர்கள், மாலைநேரக் கற்றலுக்கு உடனிருந்து உதவுகின்றனர். பின்பு இரவு உணவு எடுக்கின்றனர். பற்தூய்மை பேணியதும் இரவு 9.30 மணிக்குப் படுக்கைக்குச் செல்வது வழக்கம்.

பள்ளிச் செயற்பாடுகளுக்குப் புறம்பாக, அறிவுச்சோலை இல்லப் பொறுப்பாள்கை, மாணவரின் பொழுதுபோக்கினை அறிவுசார்ந்ததாக அமைத்திருக்கிறார்கள். வளர்ந்த சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஒளியிசையூடாக (வீடியோ) விஞ்ஞானக் கருவூலங்களையும் மற்றும் அறிவியற் பாடங்களையும் காட்டுகின்றனர். சிறுவர் கேலிச்சித்திரத் தொகுப்புப் படக்காட்சிகளும் பார்க்கக் கிடைக்கிறது. 5 அகவைக்குட்பட்டோருக்கு ஏழலில் மூன்று நாட்கள் கேலிச்சித்திரப்படங்கள் காட்டப்படுவதனைப் பிள்ளைகள் சுவைத்து, இரசித்துப் பார்க்கின்றனர். சமூக இசைவாக்கம் பெறப் பிள்ளைகள் போட்டி விளையாட்டுக்கள், சுற்றுலாக் கண்காட்சி, சிறப்புநாள் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வாய்ப்புக்கள் செய்யப்பட்டு வருகின்றது. அறிவுச்சோலைப் பிள்ளைகளின் உலகம் தனித்தன்மையானது; அவர்களின் குடும்ப வாழ்க்கை இனிமையானது; நிலையான செயற்பாடுகள் புதுமையானவை. ஆர்வமும் துடிப்பும் நிறைந்த எமது தேசநிர்மாணிகளாகவும் அறிவாளர்களாகவும் இவர்கள் உருப்பெற, அறிவுச்சோலை ஆனதைச் செய்துவருகின்றது. திக்கற்றநிலைபோக்கி இச்சிறுவர்களை அறிவுச்சோலை தாயின் பாசமும், தக்கபேணுகையும்கொண்ட தனித்தன்மையான குடும்பச் சூழலில் வளர்த்து வருகின்றது.

இவர்கள் எதிர்காலச் சிற்பிகளாகும்போது, அறிவுச்சோலை திடமான ஒரு சிற்றூராகவும் இவர்கள் பயிலும்பள்ளி தமிழீழத் தேசியப்பள்ளியாகவும் மிளிரும் என்பது துணிபு. ■

# கரும்புலிகளின் வாழ்வில்...

அவனுக்கருகில் இருந்து அவன் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தார் தலைவர்.

"என்னைப்போல எத்தனையோ பொடியள் இந்நாட்டில் அநாதைகளாக வாழுறாங்கள்... அப்பா அம்மா இல்லாம சொந்தக்காரரின் ஆதரவில்லாம அலைஞ்சு திரியிறாங்கள். வாழ இடமில்லாம, படிக்க வசதி இல்லாம, எவ்வளவோ ஏக்கங்களோடையும் துன்பங்களோடையும் அவங்கள் இருப்பாங்கள் என்கிறதை, நான் அனுபவத்தில் கண்டனான் அண்ணை..."

"நீங்கள் என்னை அன்போட கவனிச்சு பார்த்ததைப்போல அவங்களையும் கவனிக்கவேணும்; அவங்கள் எந்தக் குறையுமில்லாம வளரவும் நன்றாகப் படிக்கவும் வசதிசெய்து கொடுங்கோ; அவர்களுக்கெண்டு ஒரு இடத்தை அமைச்சு, தங்கவைச்சு அவர்களையெல்லாம் வளர்த்தெடுத்து -அவர்களுக்கு ஒரு -ஒளிமயமான எதிர்காலத்தைக் குடுத்துவிடுங்கோ அண்ணை..."

தலைவரின் இதயத்தை இது தொட்டது. அப்படியான ஒன்றின் தேவைபற்றி எண்ணியிருந்த தலைவருக்கு காந்தரூபனின் வேண்டுகோள் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அவ்வாறான இல்லமொன்றைத் தொடங்கி, காந்தரூபனின் நினைவாக, அதனை அவனது பெயரிலேயே செயற்படுத்தத்தான் எண்ணியுள்ளதாகத் தலைவர் கூறுகின்றார்.

அதற்குரிய ஏற்பாடுகளிலும் தலைவர் ஈடுபட்டுள்ளார். ■

நன்றி: 'விடுதலைப் புலிகள்'

# அனுமதிப்பத்திரமுறை (பாஸ்) ஏன் அமுல்நடாத்தப்படுகிறது?

சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், சங்குப்பிட்டியில் நீண்டிருந்த மக்கள் வெள்ளத்தில் ஒருவராக நடுத்தரவயது மதிக்கத்தக்க ஒருவரும் நின்றார். இருமிக்கொண்டு குளிரில் நடுங்கியபடி நின்ற அந்த நோயாளி மனிதரைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

மருத்துவ சிகிச்சைக்காக கொழும்பு செல்லும் அந்த நோயாளி, யாழ்ப்பாணத்தில் இருந்தால் மருத்துவ வசதியின்றிச் சில நாட்களில் இறந்து போய் விடலாம்.

வழியிலும், வள்ளத்தில் ஏறும் போதும், இறங்கும் போதும் ஒழுங்குபடுத்துவதற்கு நின்ற இளைஞர்கள் அந்நோயாளிக்கு அனுதாபத்துடன் உதவி செய்தனர்.

தாண்டிக்குளம் காவலரணையும் கடந்து வவுனியா நகருக்குள் அவர் செல்கின்றார்.

இதுவரை நிமிர்ந்து சென்ற தமிழர்கள் தலை குனிந்து நடந்தனர். ஆனால் அந்த நோயாளி நிமிர்ந்து நெஞ்சை நிமிர்த்தி நடந்தார். அவரின் நோயாளித் தோற்றம் மறைந்தது.

நகரத்துக் கடையொன்றில். வைத்துத் தேசவிரோதக்கும்பலைச் சேர்ந்த ஒருவனைச் சந்தித்தவுடன் அவர் கையோடு கொண்டு சென்ற மருந்துப் போத்தலை எடுக்கின்றார். அதற்குள் சுருட்டி வைத்தபடி வரைபடம் ஒன்று இருந்தது. இருவரும் சிரித்தமுகத்துடன் சிங்களப் படை முகாமிற்குள் நுழைந்தனர்.

இரண்டு நாட்களின் பின், தமிழீழச் செய்தித்தாள்களில் செய்திகள் வெளிவந்தன. "விமானங்கள் மூன்று இடங்களில் அகோரக் குண்டு வீச்சு" "இரண்டு புலிகளும், பத்துப் பொதுமக்களும் பலி"

இது கற்பனையில் வடிக்கப்பட்ட கதையல்ல. இப்படிப்பல நிகழ்ச்சிகள் இந்த மண்ணில் தொடர்ந்தும் நிகழ்கின்றன.

இந்தத் துரோகங்கள் எப்படி நிகழ்கின்றன.

இவற்றைத் தடுக்க வழியில்லையா? என்ற கேள்விகளுக்கு விடைகாணும்போது அனுமதிப்பத்திரத்தின் தேவையும் -அவசியமும் உணரப்படமுடியும்.

இன்று வடதமிழீழம் எமது நிருவாகத்திற்குள் இருக்கின்றது. இங்கே சிங்கள இனத்தைச் சேர்ந்த உளவாளி ஒருவன் எமது தெருக்களில் நடமாடித் தகவல்களைச் சேர்க்க முடியாது. ஆகவே எமது இனத்தைச் சேர்ந்த துரோகி ஒருவரிடமிருந்துதான் எதிரிக்கு தகவல்கள் செல்கின்றன.

> **த**மிழீழத்தில் பின்பற்றப்படும் அனுமதிப்பத்திர முறை, சொத்துக்களைக் கையேற்றல் ஆகிய விடயங்கள் தொடர்பான தெளிவின்மை, வெளிநாட்டில் வதியும் தமிழீழ மக்கள் மத்தியில் இன்னும் காணப்படுகின்றது. இவ்விரு நடைமுறைகளும் தமிழீழ தேசத்தினதும் மக்களினதும் நன்மை கருதியே பின்பற்றப்படுகின்றன என்பதை எம்மக்கள் தெளிவுற அறியவேண்டுமென்பதற்காக அவை மீண்டும் வெளியிடப்படுகின்றன.

எமது நிருவாகப் பகுதிகளிலிருந்தபடி துரோகி ஒருவன் வோக்கி-டோக்கி போன்ற தொலைத்தொடர்புக் கருவிகளுக்கூடாக எதிரிக்குத் தகவல்களை வழங்கமுடியாது.

அதேசமயம் இந்தப்பகுதிகளில் இருக்கும் இராணுவ முகாம்களுக்கு நேரடியாகச் சென்று கொடுக்கவும் முடியாது, ஏனெனில் அந்த முகாம்கள் எமது முற்றுகைக்குள்ளேயே இருக்கின்றன.

இந்த நிலையில் உளவாளிகளின் தக்வல்கள் வவுனியாவிற்கான பிரயாணப்பாதையூடாகத்தான் பரிமாறப்படுகின்றன.

வடதமிழீழத்தை விட்டு அப்பாற் செல்ல விரும்பும் ஒருவர் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக் கொண்டுதான் செல்கின்றார். அவ்விதமே உளவாளியும் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டுதான் செல்கின்றான். இவன் தன்னை உளவாளி எனப் பிரகடனப்படுத்தமாட்டான்.

அப்படியாயின், உளவாளிகளையும் சந்தேகத்திற்கு இடமானவர்களையும் எவ்விதம் நாம் அடையாளம் காண்பது?

அனுமதிப்பத்திர முற்றை இதற்கு உதவும்.

**அனுமதிப்பத்திர முறையானது உலகில் புதியதொன்றல்ல. இது வெவ்வேறு பெயர்களில் உலகநாடுகள் அனைத்திலுமுண்டு. தனது நாட்டிற்குள் வருவோர் -போவோர் தொடர்பாக ஒரு கட்டுப்பாட்டையும் கண்காணிப்பையும் வைத்திருக்க வேண்டியது ஒவ்வொரு அரசினதும் கடமையாகும். அனுமதிப்பத்திர நடைமுறையூடாக இவைகள் செயற்படுத்தப்படுகின்றன.**

**தமிழீழத்தைப் பொறுத்தளவில் உளவாளிகளும், நாசகாரசக்திகளும் நச்சுக்காய்களாக இருக்கின்றார்கள். இவர்களைக் கண்காணிக்க உதவுவதுடன் போதைப்பொருள் வருகையையும், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பியோடிவிடாதபடியும் அனுமதிப்பத்திரமுறை தடுத்து வைத்திருக்கின்றது.**

அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்குச் சில ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்த ஒழுங்கு முறைகள் துரோகங்கள் நடப்பதைத் தடுப்பதுடன், ஒரு உளவாளி உருவாவதற்குரிய சூழலையும் இல்லாமல் செய்கின்றது.

இந்த அனுமதிப்பத்திர முறைக்கூடாகப் பல உளவாளிகளையும், தப்பியோட முயன்ற சில குற்றவாளிகளையும், சமூகச்சீர்கேடுகளில் ஈடுபட்டுவந்த சில நபர்களையும் கைது செய்துள்ளோம்.

அப்படியாயின், எதற்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு முன் மண்மீட்புநிதி செலுத்தப்படவேண்டும் எனக் கேட்கப்படுகின்றது?

**மண்மீட்புநிதி செலுத்தப்பட்டிருந்தால் மட்டுமே அனுமதிப்பத்திரம் கிடைக்கும் என்பது தவறானது. மண்மீட்புநிதியை வழங்க உண்மையாகவே வசதி இல்லாதவர்கள், வெளியே செல்வதற்கு உரிய தகுந்த காரணங்கள் காட்டப்பட்டால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.**

**இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது மக்கள் போராட்டம். மக்களுக்கான போராட்டம். மண்மீட்புநிதி என்பது எமது போராட்டத்திற்குத் தேவையான நிதியைத் திரட்டும் ஒரு வழிமுறை. இந்த நிதியைத் தமிழீழ மக்கள்தான் வழங்க வேண்டும். அன்னியர்கள் அதை வழங்குவார்கள் என எதிர்பார்க்கக்கூடாது. அவ்விதம் எதிர்பார்ப்பது, தேசாபிமானம் அற்ற, இன கௌரவம் அற்ற ஒரு துரோகச்செயல் ஆகும்.**

இன்று, தேசாபிமானம்மிக்க மக்கள், எது நடந்தாலும் இந்தத் தேசத்திலேயே இருக்கப் போகின்றவர்கள். மண்மீட்புநிதியைச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள். பலர் தங்களை வருத்தியும், தங்களுடைய தேவையைச் சுருக்கியும் தேசாபிமான உணர்வோடு அதை வழங்குகின்றனர்.

இதேசமயம் மண்ணைவிட்டோடும் மனநிலையில் இருப்பவர்களும் , சுயநலமிகளும் பல்வேறு காரணங்களைக் காட்டி மண்மீட்புநிதி செலுத்துவதைத் தட்டிக்கழித்துவருகின்றனர். இவர்கள் வசதியின்மையைத் தான் காரணம் காட்டுகின்றனர்.

**ஆனால், இவர்கள் அனுமதிப்பத்திரம் பெறமுனைவது வெளிநாடுகளுக்குச் செல்வதற்கும், கொழும்பில் நீண்ட காலம் தங்கியிருந்து சுகபோக வாழ்வு வாழ்வதற்காகவுமே.**

**இத்தகையவர்களிடம் மண்மீட்புநிதியைச் செலுத்திவிட்டு** அனுமதிப்பத்திரம் **பெறுங்கள் என்று கேட்பதில் தப்பில்லைத் தானே!**

இவ்விதமாகத் தமிழீழதேசத்தின் நலனைக் கருத்திற்கொண்டு, அனுமதிப்பத்திர முறையை அமுல்படுத்துகின்றோம். ■

"வருமுன் காப்போம்"

## வெளிநாடு சென்ற குடும்பங்களின் சொத்துக்களை கையேற்கின்றோம்

# இது சுவீகரிப்பல்ல

குடும்ப அங்கத்தவர்கள் முழுமையாகவே வெளிநாடு சென்றிருந்தால் அவர்களின் அசையும், அசையா சொத்துக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுவீகரிக்கப்பட்டு விட்டது என்றோர் தப்பபிப்பிராயம் நிலவுகிறது. **சொத்துக்களின் மேல் உள்ள சொத்துடைமை உரிமை முற்றாக பறிக்கப்படுவதும் இவ்விதம் பறிக்கப்பட்ட உரிமை பறித்தவனின் கைகளுக்குப் போய்ச் சேர்தலுமே சுவீகரிப்பு எனப்படும். இங்கு நடப்பது, நடக்கவிருப்பதுவும் அதுவல்ல. குடும்பம் முழுமையாக வெளிநாடு சென்றவர்களின் அசையும், அசையா சொத்துக்கள் எதுவித குத்தகையோ, வாடகையோ இன்றி விடுதலைப் புலிகளின் ஆட்சியுரிமையாக மாறும். விடுதலைப் புலிகள் அவ் உடைமைகளை பறித்தெடுத்துக் கொள்ளமாட்டார்கள். சொத்துடைமையாளர் திரும்பவும் வந்து அதைக்கோருவதற்கான உரிமை உடையவர். விடுதலைப் புலிகளும் அச்சொத்துக்களை திரும்பவும் கையளிக்கக் கடமைப்பட்டவர்கள்.**

ஏன் இந்தச் சட்டம்? குடும்பமாக வெளிநாட்டுக்குப் போனதற்காக அவர்களுக்கு வழங்கும் தண்டனையா? அல்லது குடும்பமாய் வெளிநாடு செல்வதைத் தடுப்பதற்கானதொரு பயமுறுத்தலா? இரண்டுமேயில்லை. குடும்பமாய் வெளிநாடு செல்வது, 'ஒரு தேசாபிமானம் அற்ற செயல்தான்' என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

வெளிநாட்டிற்குப் போகவென்று தீர்மானித்தவர்களை, பயமுறுத்துவதன் மூலம் தடுத்து நிறுத்த முடியாது. அப்படி நிறுத்தினாலும் கூட அவர்கள் தமிழீழத்திற்கு தொல்லை தரும் வேண்டா மனிதர்களாகவே இருப்பார்கள். நாமாகவே எமக்கு தொல்லையைத் தேடிக் கொள்ள விரும்பமாட்டோம்.

போர்க் காலகட்ட தேவையே இச்சட்டத்திற்கான பிரதான காரணமாகும். எமது போராளிகள் தங்குவதற்கான பாசறைகள் எமக்கு நிறையத் தேவை. இதற்கென்று வைத்தியசாலைகள் தேவை. உணவுப்பொருட்கள், தளபாடங்கள், வாகனங்கள் ஆகியன களஞ்சியப்படுத்தும் நிலையங்கள் தேவை. இவை போருடன் தொடர்புபட்டன. இவை தவிர குடிசார் (சிவில்) நிருவாகத்தை நடாத்துவதற்கான நிலையங்கள் ஏராளமாகத் தேவை. வாகனங்கள் தேவை. இவற்றை மக்களிடமிருந்து அல்லது மக்களின் நிதியிலிருந்துதான் பெற்றுக் கொள்ளமுடியும். இவற்றை எமக்குத் தருவதனால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை எவ்வளவிற்கு குறைக்க முடியுமோ, அவ்வளவிற்கு குறைக்க முற்படுகின்றோம். வெளிநாடுகளுக்கு போனவர்களின் வீட்டை எடுப்பது யாருக்குமே தொல்லையில்லாத ஒரு விடயமல்லவா?

> இது வீட்டின் நலனையும், இடம்பெயர்ந்தவர்கள் நலனையும், எமது இயக்கத்தின் தேவையையும் மனதில்கொண்டு ஆக்கப்பட்ட ஒரு சட்டமே தவிர, இது ஒரு சுவீகரிப்புச் சட்டம் அல்ல.

அடுத்த விடயம் இடம்பெயர்ந்தவர்கள் பற்றியதாகும். அதிலும் குறிப்பாகத் தென் தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் பற்றியதாகும். போர் எத்தனை ஆண்டு நீடிக்குமோ சொல்லமுடியாது. அந்தளவு காலமும் இவ் மக்கள் பாடசாலைகளிலும், கோயில்களிலும் தான் தங்க வேண்டுமா? மின்சாரமில்லை, மோட்டார் ஊர்திகள் இல்லை, பாடசாலை வசதிகள் இல்லை, மின்னடுப்புகள் இல்லை, உலர் உணவுகள் இல்லை என்ற காரணங்களுக்காக தமது ஊரை விட்டே குடும்பமாக வெளியேறி வெளிநாடு போபவர்கள், சொந்தமென்று சொல்லிக் கொள்ள ஊருமில்லை, குந்தியிருக்க வீடும் இல்லை என்ற நிலையில் இருக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கு தமது வீடுகளைக் குடியிருக்கக் கொடுத்துச் சென்றால் ஏதேனும் குறைந்து விடுமா என்ன? தாமாகவே செய்யவேண்டிய இச் சேவையினை தாமாகவே செய்யாமல், நாமாகச் செய்தால் அது தவறாகுமா?

மூன்றாவது விடயம் ஆள் இல்லாத வீட்டையும், வளவையும் சண்டித்தனம் மிக்கவர்களும், கபடதாரிகளும் பலவழிகளைப் பிரயோகித்து தமதாக்க முற்படுவார்கள் என்பது சகலரும் அறிந்ததே. இக்காரணத்தையொட்டி சண்டைகளும் எழும். கபடதாரிகள் இதை நன்றாகக் குழப்பியடித்து தீர்வுக்கு சிரமமானதொன்றாக்கிவிடுவார்கள். அப்புறம் அதைத் தீர்க்க வேண்டியபொறுப்பும் எம்தலையில்தான் கட்டியடிக்கப்படும். வெள்ளம் வருமுன்பே அணைகட்டுவது ஒன்றும் தவறில்லையே. ஆள் இல்லாத் வீட்டையொட்டி எழும் சண்டைகளுக்கு முற்றுப்புள்ளியிடப்படும். வீடில்லா ஆட்களின் பிரச்சினையும் சுமுகமாகத் தீர்க்கப்படும். வீட்டை விட்டுச் சென்ற ஆட்கள் திரும்பி வருவார்களேயானால், அவர்கள் தமது வீட்டைப் பெறுவதில் ஏற்படக்கூடிய சிக்கலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பங்களும் இல்லாமற் செய்யப்படும்.

ஆகவே இது வீட்டின் நலனையும், இடம்பெயர்ந்தவர்கள் நலனையும், எமது இயக்கத்தின் தேவையையும் மனதில் கொண்டு ஆக்கப்பட்ட ஒரு சட்டமே தவிர இது ஒரு சுவீகரிப்புச் சட்டமல்ல. ■

# நினைவிலே பதிதல்

**இளையவன்**

**"இதைக் கண்டுபிடிச்சவன் ஆரெண்டு தெரிஞ்சால், அவனுக்கு ஒரு கோயிலே கட்டிக் கும்பிடலாம்".**

**"இல்லையடா, இதை இங்கை முதலில் கொண்டுவந்து அறிமுகப்படுத்தினது ஆரெண்டு தெரிஞ்சாலே, அவனுக்கு ஒரு பாராட்டு வைபவமே நடத்தலாம்".** யாழ்ப்பாணத்துத் தெரு ஒன்றில் அருகருகாகப் போய்க் கொண்டிருந்த இரண்டு சைக்கிற்காரர்களைப் பார்த்து, "தம்பியவை உப்பிடி சமாந்தரமாய் போனால், மற்றவையள் றோட்டில போறயில்லையோ" எனக் கேட்கவேணும் என்ற உந்துதலுடன் சென்றபோது, இந்த உரையாடல் செவிகளில் விழுந்தது. இவர்கள் எதைப்பற்றி இவ்வளவு பிரமாதமாகப் பேசுகின்றனர் என்ற எண்ணம் பிறந்தது.

"ஒரு சதமும் செலவில்லாமல் நினைச்ச இடத்துக்கு நம்பிக் கையாய் போய்ச்சேருறதுக்கு இப்ப இதைவிட்டால், வேற வாகனம் ஏது" என்ற கேள்வி பிறந்ததும் சைக்கிள் பற்றித்தான் இந்த உரையாடல் நடக்கிறது என்பது புரிந்துபோயிற்று.

சைக்கிள் என்ன மாதிரி ஒரு அற்புதமான வாக்னம். குடும்ப உறுப்பினர் அனைவரையும் ஒன்றாகச் சுமந்து செல்லும் சக்தி படைத்தது. நம்பிக்கைக்குரிய வாகனம். வீதியோர அரசமர நிழல் ஒன்றின் கீழ் மோட்டார் சைக்கிளின் பிளக்கை கழற்றி சுத்தம் செய்தபடி, "இதை நம்பி வெளிக்கிட்டால், இப்பிடித்தான் அடிக்கடி நிற்கவேண்டியதாய்க் கிடக்கு" எனப் புறுபுறுத்துக்கொண்டிருந்த ஒருவரின் செய்கை இதை உறுதிப்படுத்தியது. சிற்றூர்தியின் வரவை எதிர்பார்த்துப் பொறுமையிழந்த கைக்குழந்தையுடன் நின்ற இளம்பெண், 'தான் சைக்கிள் ஓடக் கற்றுக் கொள்ளவில்லையே' என்று கவலையுடன் வெளியிட்ட பெருமூச்சு சைக்கிளின் மகத்துவத்திற்கு தக்க சான்று. "ரயரும் வருகுது இல்லை, ரியூப் அடிக்கடி ஒட்டினாலும் காத்துப் போகுது. என்ன அண்ணை செய்யிறது" என முணுமுணுத்தபடி, சிற்றூர்தியின் சில்லு ஒன்றைக் கழற்றிய சாரதியின் குரல் சைக்கிளின் சிறப்பை மேலும் எடுத்துக்காட்டியது. எந்த நிலையிலும் தன்னை நம்பிப் பயணம் செய்யத் தொடங்குவோரின் நம்பிக்கையைக் குலைப்பதில்லை என்பதே சைக்கிளின் மிக நல்ல குணமாகும். ஆகக் கூடுதலாக அச்சு உடைந்து போனாலோ அல்லது ரயர், ரியூப் வெடிச்சுப் போனாலோகூட மிகச் சுலபமாக உருட்டிக்கொண்டு போய்விடலாம்தானே.

**ஆக இப்படிப்பட்ட சைக்கிளைப் பற்றி இன்றைய நிலையில் ஒரு புராணம் அளவுக்குச் சொல்லாமல்விட்டால், நாங்களும் நன்றி மறந்த மனிதர் என்றெல்லே அது நினைக்கும். இன்றைய சூழல் இந்த வாகனத்தின் முக்கியத்துவத்தை வானம் அளவுக்கு உயர்த்தி வைத்திருக்கிறது. கால் இல்லாமற் போனாலும் சீவிக்கலாம், ஆனால் வீட்டுக்கு ஒரு சைக்கிளாவது இல்லாமல்விட்டால், யாழ்ப்பாணத்தில இப்ப சீவிக்க ஏலாது எண்டால் பார்த்துக்கொள்ளுங்கோவன்.. ஒவ்வொருத்தருக்கும் ஒரு சைக்கிள் இருந்தால்தான் வீட்டில் சர்ச்சை இருக்காது.**

அந்த நாளையில, அதாவது ஒரு இருபது வருசத்துக்கு முந்தி 764 ஆம் இலக்கப் பாதையில பதினைந்து நிமிடத்துக்கு ஒன்றும், 750, 751 இலக்கப் பாதைகளில ஐந்து நிமிடத்துக்கு ஒன்றுமாக இ. போ. ச. ஓடிக்கொண்டிருந்த காலத்தில சைக்கிள் அத்தியாவசியமில்லாத ஆடம்பரப்பொருள் போலதான் அநேகமானோருக்கு இருந்தது. சும்மா ஊருக்குள்ள சுத்தித்திரியிறதுக்கும், சந்தைக்கும் -கடைக்குப் போய் வரவும்தான் இது பெரும்பாலும் பயன்பட்டது உண்மையே. இன்னும் விடலைப் பையன்களின் வாலிப சேட்டைகளுக்கு உரிய வாகனமாகவும், மைனர்களாயிருக்கும் 'டீன் ஏஜ்' காரர்கள் தம் சாகசங்களைப் புலப்படுத்தும் இனமாகவும் இது இருந்தது உண்மைதான். ஐந்து நிமிசத்துக்கு ஒன்றாக ஓடிய இ. போ. சவில் இடம்பிடிக்க, ஒரு மணி நேரத்துக்கும் மேலாக காவல் நின்று அலுத்துச் சலித்துப்போனாலும் சைக்கிளை எடுத்துக்கொண்டு தூரப் பயணம் போக அநேகமாக ஒருத்தருக்கும் மனம் வாறதில்லை அப்ப. யாழ்ப்பாணத்தில இருந்து பருத்தித்துறைக்கு சைக்கிளில போறது எண்டால் ஏதோ பெரிய சாதனை மாதிரிக் கருதுவோர் ஒருபுறமும், 'பஸ்சுக்கு காசில்லையாக்கும், அதுதான் இவர் சைக்கிளில வந்தவராக்கும்' என்ற ஏளனப் பார்வை மறுபுறமும் கட்டாயம் சூழ்ந்து இருக்கும். ஆனால் இப்பவெல்லாம் அப்படியில்ல. இதெல்லாம் சர்வசாதாரணம். பருத்தித்துறையிலிருந்து காலைத் தேநீருடன் புறப்பட்டு மதியச் சாப்பாட்டிற்கு வட்டுக்கோட்டைக்குப் போய், பிற்பகல் தேநீர் யாழ்ப்பாணத்தில குடித்துவிட்டு, கொடிகாமத்தில் மாலை நேரச் சந்திப்பை முடித்துக்கொண்டு இரவுக்கு மீண்டும் பருத்தித்துறைக்குப் போய்ச் சேர்ந்துவிடுவது இப்ப அப்படி ஒன்றும் பெரிய விடயமாக இல்லை. அது மட்டுமல்ல சைக்கிள் ஒன்று இல்லாவிட்டால், இப்படிச்செய்வது சாத்தியமாகப் போவதும் இல்லை.

இன்னும் பாருங்கோ. இப்ப சைக்கிளில போறதைக் கௌரவக் குறைச்சலா ஒருத்தரும் பார்க்கிறதில்ல. **பல்கலைக்கழகத் துணைவேந்தர் முதல் மாவட்ட அரசாங்க அதிபர் வரையிலும், வைத்திய கலாநிதிகள் முதல் சிற்றூழியர்வரை அனைவருக்கும் கைகொடுக்கும் ஒரே வாகனம் சைக்கிள்தான். இந்தியன் ஆமி இருந்த காலத்தில துவக்கையும் தூக்கிக்கொண்டு சைக்கிளில ஓட என்ன மாதிரிக் கஸ்டப்பட்டினம். இப்ப பாருங்கோ எங்கட போராளியள் எவ்வளவு லாவகமாய் துவக்குகளோடை சைக்கிளில இப்படியும் அப்படியுமாய் போய் வருகினம். இன்னும் எந்தத் தரத்தில் என்ன தொழிலைச் செய்தாலும், சைக்கிள் தவிர்க்க முடியாதபடி அத்தியாவசியமான வாகனமாக இருக்கிறது.** விறகுவெட்டி விற்போர் முதல், பலருக்கு சைக்கிள் ஒரு மூலதனம்.

வீசும் காற்றை எதிர்த்து சைக்கிளை உதைக்கும் ஒவ்வொருவரும் போக்குவரத்து பிரச்சினையை எதிர்த்து சமாளிப்பதில் வெற்றிகொள்கின்றனர். சுமார் அறுபது முதல் எண்பது கிலோ வரையிலான விறகை வெட்டி சைக்கிளில் கட்டிக்கொண்டு, நாவற்குழிப் பாலத்தில் காற்றை எதிர்த்து சைக்கிளை மிதிக்கும் சிவலிங்கம் இரண்டாம் ஈழப் போர் தொடங்கும் வரையில் ஒரு கட்டிடத் தொழிலாளி. சீமெந்துத் தொழிற்சாலை இராணுவ ஆக்கிரமிப்பினுள் போக -தடைவிதிக்கப்பட்ட பொருட்களின் பட்டியலில் சீமெந்தும் இடம்பிடித்துவிட்டது. தினசரி கட்டிடங்கள் இடிபடும்போதும், மீளக்கட்டுவோரின்றிப் போனதால், அவன் இப்போது ஒரு விறகுவெட்டி. ஆனையிறவின் உப்பளத்தில் வேலைபார்த்து வாழ்க்கையை ஓட்டிய வசந்தகுமாரனின் வாழ்வின் வசந்தம், சிறீலங்கா அரசால் பறிக்கப்பட்டுவிட, அவன் இப்போது சிறுவியாபாரி. பளை, கொடிகாமம் பகுதியில் தேங்காய், பொச்சுமட்டை கொள்வனவு செய்து சங்கானை, சண்டிலிப்பாய் பக்கம் கொண்டுபோய் விற்பனை செய்வது அவன் தொழில். இந்தத் தூரத்தைக் கடக்க சைக்கிள் அவனுக்குப் பிரதான கருவி. **உடல் உழைப்பால் சிறீலங்கா அரசை எதிர்த்து, சவால்விட்டு வாழ்க்கையை ஓட்டும் தன்னம்பிக்கையின் சின்னமாக அவர்கள். இங்கே இருப்பது இனப்பிரச்சினையா இல்லையா என்பது பற்றி எந்தப் பட்டிமன்றமும் நடத்திக் கொண்டிருக்காமல், யுத்தத்தின் சத்தங்களை ஆமோதிக்கும் துணிவுக்கு எடுத்துக்காட்டு. முயற்சியும் நம்பிக்கையும் இருக்கும் வரையில், இந்தப் போரில் வெற்றி எங்கள் பக்கமே என முரசறையும் வாழ்வின் பிரதிபலிப்புக்கள் அவர்கள். என்றோ ஒரு நாளில் இப்போர் வெல்லப்படும் -இடிந்த கட்டிடங்கள் மீளக் கட்டி எழுப்பப் படும். ஆனையிறவு உப்பளத்தின் விளைச்சல், எங்களுக்கு உரியதாகும். கீரிமலைக் கேணியில் நீராடி மாவைக் கந்தனை மனமகிழக் கும்பிடும் காலம்வரும். மறந்து போயிருக்கும் பாலைதீவு -கச்சதீவு பயணங்கள் மீண்டும் நடக்கும். அப்போது எங்கள் எதிர்காலமும் ஒளிமயமாகும் என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள்.**

எட! சைக்கிள் பற்றிச் சொல்ல வெளிக்கிட்ட நான், அதை விட்டிட்டு, எங்கேயோ போயிட்டன் எண்டே நினைக்கிறியள். அப்படியில்லை. சைக்கிளோட்டியைப் பற்றியும் சொல்லத்தானே வேணும். அது போகட்டும். இப்ப ஒரு இருபது, முப்பது வருசத்துக்கு முந்தி எங்கட தாத்தா நூற்றிநாற்பது ரூபாவுக்கு வாங்கின றலி சைக்கிள் இன்னும் வீட்டில நிற்குது. நேற்றோ முந்தநாளோ வீட்டை வந்த ஒருத்தர் இப்ப விற்கிறதெண்டால் சொல்லும், இருபதாயிரம் ரூபா தாறன் எண்டார். மஞ்சள் லையினிங், இன்னும் அழியாத கறுப்பு பெயின்ற் -மில்லர் டைனமோ கெற்றும் பூட்டி, வீநைண்டி சீற் போட்ட அந்தச் சைக்கிளுக்கு இப்பவும் அப்படி ஒரு மவுசு. அந்த நாளையில பதினாறுபவுணுக்கு வாங்கினது. இப்ப பதினாறுபவுண் என்ன விலை? அவ்வளவு தாறதெண்டால், விற்கிறதைப் பற்றி யோசிக்கலாம் என்று இறுமாப்புடன் சொல்லி, அவரை அனுப்பியாச்சு. முன் மட்காட்டில பூட்டியிருந்த வெள்ளிக்குதிரையை மாமா இதென்னத்துக்கு 'விளக்குமாத்துக்கு குஞ்சம் கட்டின மாதிரி' எண்டுசொல்லிக் கழட்டி எறிஞ்சுபோட்டார். அதையும் எடுத்துப் பூட்டிவைக்கவேணும் எண்டு தேடிக்கொண்டிருக்கிறன். இப்ப எத்தனை விதமான சைக்கிள்கள் வந்திட்டுது.

ஏசியா பைக், பிளயிங் பிக்கன், கீரோ, ஈஸ்டன் அது இது எண்டு, எண்டாலும் அந்தக் காலத்து றலிக்கும் றட்யுக்கும் இன்னும் மதிப்புக் குறையேல்லை.

**சைக்கிள் போக்குவரத்து வாகனம் மட்டுமல்ல. டைனமோவைச் சுற்றி றேடியோ கேக்கிறதுக்கும் அதுதான். முந்தி கறண்ட் வரமுன்னமும் றேடியோ கேட்டதுதான். ஆனா அப்ப பற்றறி இருந்தது. இப்ப பற்றறி வரவிடமாட்டன் எண்டு அரசாங்கம் சொன்னாப் பிறகுதானே டைனமோவைச் சுத்தி றேடியோ கேக்கப் பழகின நாங்கள், இப்ப றேடியோவும் கேக்கவேணும். இல்லாட்டால் ஊரடங்கு எப்ப போடுகினம் எண்டு என்னெண்டு தெரியும். ஊரடங்கு எப்ப போட்டால் என்ன, எப்பவும் ஒரு மாதிரித்தானே. இந்த டைனமோ சுத்தி றேடியோ கேட்க "எடேய்.... நீ என்னத்தை தடை விதிச்சா என்ன அதுக்குள்ளேயும் எங்களால 'வாழமுடியுமடா" எண்டு அது சொல்லுறது மாதிரி தான் எனக்குள்ள ஒரு நினைவு.**

மரங்களில கடைச்சல் வேலை செய்யிற ஒரு பட்டறை. படிப்படியாய் உழைச்சு கையால செய்த கடைச்சல் வேலைகளுக்கு ஒரு மோட்டரை எடுத்துப் பொருத்தியிருந்தவர் சிங்கார வேலர். -அச்சு இயந்திரத்தை மூலதனமாக்கி தொழில் நடத்தி வந்த மரியதாஸ். கறண்ட் இல்லை எண்டு இவை சோர்ந்து போகயில்லை. பழைய -பார் உடைந்து போன சைக்கிள்களைப் பயன்படுத்தி தமது தொழிலை நடத்த இவர்கள் கற்றுக்கொண்டு விட்டனர் எண்டால் சைக்கிளை, 'செத்தும் கொடுத்தான் சீதக்காதி' எண்டது போல புகழாமல் இருக்க முடியுமோ?

இப்பிடி சைக்கிள் எங்களுக்கு உதவுது எண்டு தெரிஞ்சுதானாக்கும், போல்ஸ் தொடக்கம் எல்லா பாட்சும் கொண்டு வர விடாமை தாண்டிக்குளத்தில மறிக்கினம். இவை இப்படி மறிச்சாப்போல என்ன சாமான்கள் வராமலே கிடக்கு. மறிக்கிறவைதான் வேற வேலையில்லாமை ஒவ்வொண்டாய் கிளறிக்கொண்டு நிக்கினம். அது போகட்டும்.

கிறீச் கிறீச் எண்ட சத்தத்தோட ஒரு பழம் சைக்கிளில நசனல் சேட்டுப் போட்ட ஒருத்தர், ஒரு மனிசியையும் ஏத்திக் கொண்டு என்னை விலத்திப் போறார். இந்த வயதான காலத்திலயும் இந்தான் என்னை முந்திக் கொண்டு போகுதே எண்டு ஒரு நினைப்பு வர இறுக்கி மதிக்கிறன். "இன்னும் ஒரு சொட்டு நேரத்தில வைத்தியரிட்டைப் போயிடலாம்" என்ற குரல் அவரது அவசரத்தை உணர்த்த திரும்பிப் பார்க்கிறேன். "இந்தச் சைக்கிள் இல்லாட்டி இப்ப எவ்வளவு கஸ்டம்" என்றேன். ஒருவித ஆவேசத்துடன், ஒருவித முறைப்புடன் என்னைப் பார்த்தார் அவர். "தமிழ் என்ன மாதிரிக் கெட்டுப் போச்சு. தான் பேசுகிற மொழி என்ன எண்டு தெரியாமல், தமிழன் தடுமாறுகிறான்" என்றார் அவர் கோபத்துடன்.

'என்ன ஐயா?' என்றேன் பவ்வியமாக.


"சைக்கில் தமிழ்ச் சொல் இல்லை"

"அப்ப துவிச்சக்கர வண்டி எண்டு சொல்லலாமோ"

"அதுவும் தமிழ்ச் சொல் இல்லை. துவி, சக்கரம் எல்லாம் சமஸ்கிருத சொற்கள்"

**தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...**

விறகையும் சுமக்கும்! விரும்பும் இடமெங்கும்
பறந்து செல்லும்! பாதை எதுவானாலும்
எரிபொருளும் செலவின்றி ஓடும் வாகனமாம்
ஈருருளி என்றே அறி!



**"எடேய்...நீ என்னத்தை தடை விதிச்சா என்ன அதுக்குள்ளேயும் எங்களால் வாழமுடியுமடா"**

# பெண்ணினம் சிக்கல்களிலிருந்து விடுபட தன்னைத் தயார்ப்படுத்த வேண்டும்

எமது தேசநிர்மாணிப்பில் தமிழீழ நீதிமன்றங்களின் தோற்றமும் வளர்ச்சியும் ஒரு தனி அத்தியாயமாக விளங்குகின்றன. இவை மக்களின் பிரச்சினைகளை அணுகி, ஆராய்ந்து, நியாயமான தீர்ப்புகளை வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்டு, எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் நிர்மாணிக்கப்பட்டு எமது சமுதாயத்தின் வளர்ச்சியின் உயிர் நாடியாய் விளங்கும், இந்த நீதிமன்றங்களின் தோற்றமானது, எமது சமூகத்தில் புரையோடிப்போன பல சிக்கல்களைத் தீர்த்து வைத்துள்ளது. தற்போது உள்ள நெருக்கடியான நிலைக்கு ஏற்புடைய நிர்வாக ஒழுங்குகளும், சட்டங்களும் உருவாக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

இந் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகள் அனைத்தும், ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியினுள்ளே தீர்த்து வைக்கப்படுகின்றன. வழக்குகள் இழுபறி நிலையில் காலம் தாழ்த்தப்படுவதில்லை. இந்த ரீதியில் இந் நீதிமன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு இந்த ஒரு வருடத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை முப்பத்தொன்பதாயிரத்து அறுபத்தி மூன்று. இதில் தீர்க்கப்பட்ட வழக்குகள் ஆயிரத்து அறுநூற்றுப் பதின்மூன்று. இவற்றுள்ளும் மேன்முறையீடு செய்யப்பட்ட நாற்பத்தி ஏழு வழக்குகளில் முப்பது வழக்குகள் தீர்க்கப்பட்டன. இவ் வழக்குகளில் முன்னூற்று அறுபத்தைந்து வழக்குகள் பெண்கள் சம்பந்தப் பட்டவை. இங்கு நாம் குறிப்பிட முனைகின்ற விடயம், பெண்கள் தொடர்பான வழக்குகள் பற்றியவையாகும்.

எமது போராட்டம் இந்த மண்ணின் விடுதலையை வென்றெடுக்கின்ற அதேநேரம், சமுதாய விடுதலையையும் வென்றெடுக்க வேண்டும் என்பதே தலைவரின் கனவு. இந்த சமூக விடுதலையின் முக்கிய ஓர் அங்கமாக பெண்விடுதலை அமைகிறது. பெண்கள் விடுதலை பெற்றால் மாத்திரமே, ஒரு இனத்தின் முழுமையான விடுதலையைக் காணமுடியும். எமது சமுதாய அமைப்பில் நிலவிவரும் ஒடுக்குமுறை அழுத்தங்களிலிருந்து பெண்ணினம் விடுதலை வேண்டி நிற்கிறது. முதலில் பெண்கள் தமக்கு எதிராக தலையெடுத்து நிற்கும் ஒடுக்குமுறையின் தன்மைகளைப் புரிந்து கொள்ளவேண்டும். தனது சீரழிந்த வாழ்க்கை நிலையைச் சீரமைத்துக் கொண்டு பெண்ணினம் விழிப்புக் கொள்ளவேண்டும். தனக்கு விதிக்கப்பட்ட விதி என்றும், கர்மவினை என்றும் தங்கள் துன்பத்தை மன ஆழத்துக்குள் புதைத்து வைப்பதனால் துன்பங்கள் தீரப்போவதில்லை.

எனவே விடுதலைக்காகப் போராடும் எம் இனத்தின், பெண்களின் வளர்ச்சி நோக்கிய பார்வை முக்கியமானது. இந்த வகையில் பெண்களின் சிக்கல்களை நுணுகி ஆராய்ந்து அவற்றுக்கான காரணிகளைக் கண்டறிந்து களையமுற்படுவது புதிய புரட்சிகரமான சமுதாயப் பிறப்புக்கு வழிவகுக்கும்.

நீதிமன்றங்கள் ஆரம்பித்த நாள் தொடக்கம் இன்றுவரை வந்த, பெண்கள் சம்பந்தமான வழக்குகளினை ஆராயுமிடத்து அவை பெரும்பாலும் குற்றவியல் தொடர்பான வழக்குகளாகக் காணப்பட்டன. இந்த வழக்குகள் எத்தனையோ பெண்களின் கண்ணீர் வாழ்க்கையையும், ஆழமான சோகங்களையும் தாங்கி நிற்கின்றன. குடும்ப வாழ்க்கையில் பரஸ்பரம் புரிந்துணர்வற்ற நிலையும், வறுமையும், சமூக வளர்ப்புச் சூழ்நிலையும் எல்லாவற்றுக்கும் மேலாக ஆணாதிக்க சமுதாயமும் அநேக பெண்களின் வாழ்வில் துன்பங்களைச் சேர்த்திருக்கின்றது. இந்த வழக்குகளை ஆராயும்போது நாம் ஒன்றைமட்டும் தெளிவாகப் பார்க்கலாம். அதாவது அறியாமை இருளும், போதிய கல்வியறிவற்ற நிலையும் இன்றும் பெண்களை இருட்டில் வாழ வழிவகை செய்திருக்கிறது-பெண்களை சிக்கல்களுக்கு முகங் கொடுக்கக்கூடிய தன்மையோ, தன்னம்பிக்கையோ அற்ற நிலையில் வளர்த்த விதம், எவ்வளவு தூரம் அவளது வாழ்க்கையைப் பாதிப்படைய வைத்திருக்கிறது என்பது ஆழமான சமுதாய நோக்கோடு ஆராயப் பட வேண்டிய ஒன்று. நகர்ப்புறச் சூழ்நிலையில் பெண்களின் கல்வியறிவு வீதாசாரம் ஓரளவு உயர்ந்த நிலையிலேயே உள்ளது என்று கூறிக்கொண்டாலும், இன்றும் கிராமத்து மூலைகளில் பெண்களின் அழுகுரல்கள் கேட்ட வண்ணமே இருக்கின்றன.

இங்கு நாம் ஆராய்ந்த இக்குற்றவியல் பிரிவில் தாபரிப்பு வழக்குகள், காதலித்துப் பெண் கைவிடப்பட்ட வழக்குகள்,



தலைவருடன் தமிழீழத்தின் பெண் நீதியாளர்கள்

பெண்ணைத் தாய்மை அடையச் செய்து கைவிட்ட வழக்குகள், சமுதாயச் சீர்கேட்டு வழக்குகள், மணமுறிவு வழக்குகள் மற்றும் பாலியல் வல்லுறவு வழக்குகள் என்பன அடங்கியிருக்கின்றன. இத்தகைய வழக்குகளில் அநேகமானவை தாபரிப்புக் கோரும் வழக்குகளும், காதலித்துப் பெண்ணைக் கைவிட்ட வழக்குகளுமாகும். யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில்

**தமிழீழத்திலிருந்து**
**கொற்றவை**

பதிவு செய்யப்பட்ட பெண்கள் தொடர்பான வழக்குகளில் பெரும்பாலான வழக்குகள் இத்தகையவையாகும். அவற்றுள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பெண்கள் தொடர்பான வழக்குகளில், திருமணம் செய்து பெண்ணைக் கைவிட்டநிலையில், அப் பெண் ஆணிடமிருந்து தாபரிப்புக் கோரும் வழக்குகள் கூடுதலானவை.

சமூகச்சீர்கேட்டு நடவடிக்கை தொடர்பான வழக்குகள் பெரும்பாலும் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் தங்ககங்களை ஒட்டிய பகுதிகளிலிருந்து தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இங்கு தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் வழக்குகளில் ஒப்பீட்டு ரீதியில் ஆண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விட பெண்கள் சம்பந்தப்பட்ட வழக்குகள் அதிகம். இந்த வழக்குகள் எத்தனையோ பெண்களின் மன உடைவுகளையும், மன உளைச்சல்களையும் தாங்கி நிற்கின்றன. ஆணை மனப்பூர்வமாக விரும்பி, அவனால் ஏமாற்றப்பட்ட பெண்களின் கண்ணீர் கதை ஒருபுறம், தனது பிள்ளைகளின் எதிர்காலம் என்ன என்று, கணவனால் தள்ளப்பட்ட தாய்மாரின் சோகங்கள் மறுபுறமாக பெண்களின் துயரங்கள் பரந்து காணப்படுகின்றன. இன்றும் தங்களுடைய துன்பங்களை வெளியிலே சொல்ல முடியாதவர்களாக, வெளியிலே தெரிந்தால் சமூகம் தன்னை மாறுபட்ட கண்ணோட்டத்தில் பார்க்குமே என்று ஒதுங்கி, மூலையிலே கண்ணீர் வடிக்கும் பெண்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய நிலையில் தங்கள் துயரங்கள் வெளியில் கொண்டுவரப்பட்டால் சமுதாயம் திருந்தும். தமக்கு நீதி கிடைக்கும் என்று பெண்ணினம் எழுந்து விட்ட நிலையும் வந்துவிட்டது. அதற்கு நீதிமன்றங்களிற் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சான்றுகளாக இருக்கின்றன.

அண்மையில் ஒரு வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பிறப்பில் வாய் பேசாத ஊமைப்பெண் அவள் கையில் இரட்டைக் குழந்தையுடன் பாதிக்கப்பட்டவளாக வந்தாள். அப் பெண்ணை விரும்பி ஏமாற்றியவன், அவளை இரட்டைக் குழந்தைகளுக்குத் தாயாக்கி விட்டு வேறு திருமணம் செய்துவிட்டான். தற்போது அவன் குழந்தைகளுக்கு தான் தந்தை இல்லை என்றும், தான் அப் பெண்ணை விரும்பவில்லை என்றும் கூறியுள்ளான். பெண் தரப்பில் சாட்சிகள் அற்றநிலை. வாய் பேசமுடியாத பெண் என்றமையால் இதற்கான மொழி பெயர்ப்பாளரை வைத்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்படி காதலித்தவனால் ஏமாற்றப்பட்ட பெண்கள் தொடர்பான வழக்குகள் பல வந்திருக்கின்றன.

இவற்றைப் பொறுத்தவரை, எமது சமூக அமைப்பு மரபுகள் பெண்ணை மட்டும் ஒழுக்கம் கடைப்பிடிக்க வேண்டியவளாகப் பார்க்கிறது. அவள் தவறுதலாகவோ அன்றி சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாகவோ தவறிழைத்தால் சமூகம் அவளை முற்றுமுழுதாகவே புறக்கணித்து, ஆண் குற்றவாளியாக இருப்பினும் கூட பெண்ணின் நடத்தையே சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகிறது. சமூகத்தில் **"ஆண் தவறிழைத்தால் சம்பவமாகவும், பெண் தவறிழைத்தால் சரித்திரமாகவும் பேசப் படும்"** மரபே உள்ளது. காலங் காலமாக இருள் படிந்துபோன எமது சமுதாயம், பெண் என்பவள் முள்ளின் மேல் நடக்கவேண்டும் என்றே எதிர் பார்க்கிறது. பெண்கள் படிக்கிறார்கள், எல்லா உத்தியோகத்திலும் இருக்கிறார்கள் என்பதால் எமது சமூகம் முன்னேறிவிட்டது என்று கூறினாலும், இன்றும் நாலு சுவருக்குள் தங்கள் துன்பங்களை ஆழத்துள் புதைத்துக் கொண்டு மௌனியாக இருக்கும் பெண்கள் ஏராளம்.

"எனது பிரச்சினை என்னோடு, எனக்கு இது தான் விதிக்கப்பட்டது" என்று நாளும் பொழுதும் கண்ணீர் சிந்தும் பெண்கள் அனேகம். அதைவிட பாதிக்கப்பட்ட பெண்கள், நீதிமன்றங்கள் ஏறுவதை ஏதோ செய்யக் கூடாத செயல் என்று ஒதுங்கிப் போவதும் நாம் வாழ்க்கையில் காணும் ஒன்று. தங்களது பிரச்சினைகள் பெரிதாக உருவெடுத்த பின்னும் "தாம் செத்தாலும் பரவாயில்லை, ஆனால் நீதிமன்ற வாசற்படியில் ஏற மாட்டோம்" என்று பிடிவாதமாக நிற்கும் பெண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதைவிட நீதிமன்றங்களுக்கு நாங்கள் போகமுடியாது என்று அறியாமையில் உள்ளவர்களும் இருக்கிறார்கள்.

அதற்கு பழைய தேசவழமை தான் காரணம். முன்னைய ஒல்லாந்தர் காலத் தேசவழமையில் ஒரு பெண் கணவனின் அனுமதியின்றி வழக்குத் தாக்கல் செய்யவோ, ஒரு சாட்சியாக நிற்கவோ முடியாது. இதன் காரணமாக அநேக பெண்கள் தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாது மனமுடைந்த நிலையிலுள்ளனர். ஆனால் தமிழீழ தேசவழமைச் சட்டம்


தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...



தலைவருடன் தமிழீழத்தின் பெண் சட்டவாளர்கள்

# குழந்தைகளைக் குடும்பச் சூழலில்

ஈழப்போரின் கொடுமைகளினால் குடும்பங்கள
இழந்து பேணுகையற்ற நிலையில் தவித்து நின்
நீக்கி, அவர்களை முழு மனிதர்களாக உரு
குடும்ப அமைப்பினுள் வளர்த்தெடுக்
தலைமைத்துவத்தினால் வடிவமைக்கப்ப
ஆகும்.(இதற்கு முன்பாக, இதே நோக
உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.) க
செல்வதற்கு முன்பாகத் தேசியத் தலை
ஏதிலிகளாகவுள்ள குழந்தைகளை வளர்
எதிர்காலத்தைக் கொடுத்துவிடுங்கள்" எனக்
தலைவர் அவர்களால் வடிவமைக்கப
அறிவுச்சோலையானது. 01.11.1993 இல் திறந்து
முதலாண்டு நிறைவு நாளை, தேசியத் த
நினைவுகூர்ந்தது; முதலாண்டு நிறைவு
நோக்கங்களுக்காக அனைத்துலகிலும் பரந்து
கிடைக்குமாயின், காந்தரூபன் அறிவுச்சே
உருவாக்கி, ஏதிலிகளாக்கப்பட்ட அனைத்து
நம்பிக்கையை ஊட்டுவதற்காகவே அம்மலரி
வெளியிட



"யாருமற்றவர்களாக எவருமில்லை! இவர்கள் அனைவரும் தமிழன்னையின் புதல்வர்கள்". காந்தருபன் அறிவுச்சோலைத் திறப்பு விழாவில் எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் 01. 11. 1993 இல் அதனைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டது இன்றும் எதிரொலிக்கின்றது. "இனவெறிக் கொடுமைகளால், பேணுகையின்றி ஏதிலிகளாக விடப்பட்ட அனைவரும் ஈழத்தமிழ் அன்னையின் புதல்வர்களே, தனிக்குடும்ப உறவுகளுக்கப்பால், 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பரந்த வாழ்வையும், உறவையும் எதிர்காலத்தில் எட்டத் தோற்றுவிக்கப்பட்ட குருகுலச் சோலையே, காந்தருபன் அறிவுச்சோலை.

இரண்டாவது ஈழப்போரின் கொடுமைகளினால் சிறுவர்கள் குடும்பங்களைப் பிரிந்து, பேணுகையற்ற நிலையில் தவித்து நின்றனர். அச்சிறுவர்கள்மேல் பற்றுக்கொண்ட தலைமைத்துவம், அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த கறைகளை நீக்கி, அவர்களை முழுமனிதர்களாக உருவாக்க, அச்சிறுவர்களை பள்ளியோடு சேர்ந்த ஒரு குடும்ப அமைப்பினுள் வளர்த்தெடுக்க வடிவமைத்த நிறுவனமே அறிவுச்சோலை.

அறிவுச்சோலை யாழ் நகரிலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அப்பால் இராச வீதியில் அமைந்துள்ளது. கதிரவ ஒளியும், தூய்மையான காற்றும், நல்ல குடிநீரும், செம்பாட்டு நிலமும் நிரம்பப் பெற்ற வளமான மாஞ்சோலையில் அறிவுச்சோலை அமைக்கப்பட்டிருக்கின்றது. இராச வீதியிலிருந்து கிழக்கு நோக்கிச்செல்லும் 200 மீற்றர் கல்லொழுங்கை முடிவில் அறிவுச்சோலை நுழைவாயில் இருக்கின்றது. மூடியிருக்கும் வாயிலைத் திறந்து, அடிவைத்ததும் செப்பனிடப்பட்ட தெரு அறிவுச்சோலையை இருகூறாக்கி நீள்கின்றது. வாயிலுக்கு இருமருங்கிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட பெரு விளையாட்டுத்திடல்கள் உண்டு. "விளையாட்டுத் திடலில் கால் பதிக்காத மாணவர்கள் ஆளுமைச் சிறப்பெய்துவதில்லை" என்பதனைக் கருத்திற்கொண்டு திட்டமிடப்பட்டிருப்பது புலப்படுகின்றது.

'பிச்சை புகினும் கற்கை நன்றே'

'கேடில் விழுச் செல்வம் கல்வி'

'அறிவை வளர்த்திட வேண்டும்
மக்கள் அத்தனை பேரும் ஒன்றாய்'

## காந்தருபன் அறிவுச்சோலை மாணாக்கர்களுக்கான உறுதியுரை

காந்தருபன் அறிவுச்சோலை மாணாக்கர்களாகிய நாம்
அறிவுச்சோலையின் வழிகாட்டலில்
கல்வியறிவு, ஆற்றல், நற்பண்புகளைப் பெற்று
எமது வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்வதுடன்
இன, மொழி, நாட்டுப்பற்றோடு
தமிழீழத்தின் நற்குடி மக்களாகத் திகழ்வோமென்றும்
எம் உயர்வே தன் செயற்பாடென இயங்கும்
காந்தருபன் அறிவுச்சோலைக்கும்
அதன் நிறுவனராம் தலைவர் மாமா அவர்களுக்கும்
மதிப்பளித்து
என்றும் நன்றியுணர்வோடு செயற்படுவோமென்றும்
உறுதிகூறுகின்றோம்.



காந்தருபன் அறிவுச்சோலையில் காலை ஒன்று கூடலின் போது...

உதைபந்தாட்டத் திடலின் கிழக்கோர அலங்காரத்தெரு அறிவுச்சோலைப் பள்ளிக்கு இட்டுச்செல்கின்றது. அலங்காரத் தெருவின் முடிவில் பள்ளி அலுவலகம் அமைந்துள்ளது. அலுவலகத்தைப் பார்த்தபடி பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவாயிலிருந்து கிழக்கே நீண்டுசெல்லும் சாலைக்குத் தென்பாகத்தில் கைப்பந்தாட்டத்திடல், பூப்பந்தாட்டத்திடல் அமைந்துள்ளன. இவ்விளையாட்டுத் திடலுக்குக் கிழக்கில் அழகிய சிறுவர் பூங்கா வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.

இல்லச் சிறுவர்கள் பசுமை நிறைந்த பூங்காவில் ஆடித்திரிவர். சறுக்குத் தளமும்; ஆடும் இராட்டினமும் இங்குண்டு. சிறுவர் பூங்காவினை அடுத்தாற்போல் கிழக்கே அறிவுச்சோலைப் பொறுப்பாளர் பணியகமும் பொறுப்பாளர் இல்லமும் அமைக்கப்பட்டுள்ளன. மாஞ்சோலை முகப்பாக அமையும் இப்பகுதியில், கரும்புலி மேஜர் காந்தருபனின் நினைவாலயம் கவின்பெறக் கொலுவிருக்கின்றது.

இலக்கிய மேதை இரவீந்திரநாத் தாகூர் சோலையிலே பள்ளியமைத்துச் சாந்திநிக்கேதமாக்கினார். அப்படியே அறிவுச்சோலைத் தலைமைப் பீடம் மாஞ்சோலையில் பள்ளியையும், சிறுவர் இல்லங்களையும், பூங்காவையும், விளையாட்டுத் திடல்களையும் திட்டமிட்டபடி கட்டியெழுப்புகின்றனர். அழகிய சூழலிலே தான் கல்வியும், கலையும், தொழிலும் விளையாட்டும் நன்கு புகட்டப்படும் எனக்கருதி அறிவுச்சோலை வளவு ஒரு பசுமை நிறைந்த சோலையாக மாற்றப்படுகின்றது. பள்ளியின் பின்னால் சிறுவர் இல்லங்கள் இருக்கின்றன. கரும்புலி மேஜர் காந்தருபன் நினைவாலயத்திலிருந்து வடபால் வளைந்துசெல்லும் தெருவின் கிழக்கோரங்களில் 20 பிள்ளைகளுக்கு ஒரு இல்லமாக அறிவுச்சோலை மாணவர்களின் வாழ்விடங்கள் கட்டப்பட்டுள்ளன. மாணவர் இல்லங்கள் வாய்ப்புக்கேற்ப இருபாகங்களைக் கொண்டிருக்கின்றன. பாகத்திற்குப் பத்துப் பிள்ளைகள் குடியிருக்கின்றார்கள். 10 பிள்ளைகளைக்கொண்டது ஒரு குடும்பம். குடும்பத்துக்கு ஒரு தாய் அன்னையாக அரவணைத்து, அன்புடன் பராமரித்து வருகின்றார். 14 குடும்பங்கள் அறிவுச்சோலையில் இருக்கின்றன. குடும்பத்துக்குப் பொறுப்பான தாய்மார்கள் இந்தப் பிள்ளைகளைத்


"யாருமற்றவர்களாக எவருமில்லை;இவர்கள் அனைவரும் தமிழன்னையின் புதல்வர்கள்"
- அறிவுச்சோலை திறப்புவிழாவில் தமிழீழத் தேசியத் தலைவர்



தேனீர் இடைவேளையின்போது...

# வாழ்க்கைக்கு ஏற்றவராக்கும் அறிவுச்சோலை

பிரிந்து, பெற்றார் - உற்றார் - உறவினர்களை
றார்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த கறைகளை
க, அச்சிறார்களை பள்ளியோடு சேர்ந்த ஒரு
மிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட
நிறுவனமே 'காந்தருபன் அறிவுச்சோலை'
துடன் 'செஞ்சோலை' என்ற அமைப்பு.
லி மேஜர் காந்தருபன், தான் கரும்புலியாகச்
ரச் சந்தித்தபோது, "தன்னைப்போன்ற
தடுத்து - அவர்களுக்கு ஒரு ஒளிமயமான
டுக்கொண்டதற்கிணங்க, இவ் அறிவுச்சோலை
டது. அதனாலேயே இது காந்தருபன்
க்கப்பட்ட அறிவுச்சோலை 01.11.1994 இல் தனது
வர் அவர்களின் வாழ்த்துச்செய்தியோடு
ஒன்றும் வெளியிடப்பட்டது. இவ்வாறான
ும் எமது மக்களின் பங்களிப்பும் போதியளவில்
லயைப்போன்று பல அறிவுச்சோலைகளை
றார்களுக்கும் நல்வாழ்வு வழங்கமுடியும் என்ற
ந்து இக்கட்டுரை தேர்ந்தெடுக்கப்பட்டு, இங்கு
கின்றது.



காந்தருபன் அறிவுச்சோலைப் பிள்ளைகள் வீடுகளிலிருந்து பள்ளிக்குச் செல்லும் போது...

தமது பிள்ளைகளைப்போல் பற்றுடன் வளர்த்து வருகின்றார்கள். பிள்ளைகளும் அம்மாமாரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட்டுத் தொழிற்படுகின்றனர். தமது வீட்டில் உடன்பிறந்தாரைப்போல் வாழும் இச்சிறுவர்களின் உணவு, உடை, கல்வி போன்ற மற்றத் தேவைகளையும் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு குடும்பத்தின் 'தாயைச்' சார்ந்ததாகும். வீட்டு வசதிகள் தனியார் தூய்மைபேணும் வகையில் வழங்கப்பட்டுள்ளன. அவரவருக்குரிய படுக்கை, உண்கலன்கள், சீப்பு, சோப்பு, தூய்மைத் தேவைகள், எண்ணெய் போன்றவற்றைப் பயன்படுத்த விடுதி மாணவர்கள் பயிற்றப்பட்டுள்ளனர். குளிப்பதற்கு நீளவடிவில் தொட்டிகள் உண்டு. கூட்டாகக்கூடி நின்று குளிப்பர். குளித்தநீர் வடிகால்வழி ஓடி, வாழைத் தோட்டத்தைச்சேரும். கழிவறைகள் இரண்டு வகை. நீளமாகக் கட்டப்பட்ட பொதுக் கழிவறைகள் வேறு. இவை அனைத்திற்கும் குழாய் நீர் வாய்ப்புகள் உண்டு. கழிவறைச் சுகாதாரத்திற்குச் சவர்க்காரம் முதலியன பயன்படுத்தப்படுகின்றன.

காந்தருபன் அறிவுச்சோலைப் பிள்ளைகளின் ஊட்டத்தில், பொறுப்பாள்கை மிகுந்த அக்கறை செலுத்தி, விருப்பமான உணவுகளை அட்டவணையிட்டுக் கொடுத்து வருகின்றனர். காலை, மாலை உணவுகளாக வகை வகையான உணவுகள் மாற்றொழுங்கில் கிடைக்கின்றன. பகல் உணவுகளாக சோறும் கறியும் ஊட்ட உணவாகின்றது. உணவு அட்டவணையில் இலைக்கறி வகையுடன் மீன், இறைச்சி, மரக்கறிகள் சேர்க்கப்படும். மாஞ்சோலையில் கிடைக்கும் மாம்பழங்களும் தோட்டத்து வாழைக்கனிகளும், இடையிடையே அப்பிள், முந்திரிகைப் பழங்களும் ஊட்டமாக எடுக்கின்றார்கள். நாள்தோறும் தவறாது பாலும் முட்டையும் உணவுடன் சேர்க்கப்படும். ஏழலில் (வாரம்) இரண்டு நாள் காலை நேரத்தில் சிறப்பு உணவு கிடைக்கும். மாணவர்கள் விரும்பும் உணவு வழங்கப்படும். சாப்பிடும் மேசைகளில் சாப்பிடுகையில் மேசைப்பழக்கம் பயில்கின்றனர். குடிநீர் கண்டிப்பாகச் சுட்டாறிய நீராகும். இரவு தூங்குமுன் பல்தீட்டும் பழக்கத்தையும் அறிவுச்சோலைப் பிள்ளைகள் வழக்கமாக்கிக்கொண்டனர். சுத்தமான வாழ்க்கையும், சமமான சத்துணவும் பிள்ளைகளின் உடல்வளர்ச்சிக்குத் துணையாகின்றன. அடிக்கடி உடலமைப்பையும் நிறைவையும் குறைபாட்டினையும் அறிவுச்சோலையில் அமைக்கப்பட்டுள்ள மருத்துவமனை கண்டறிந்து வருகின்றது. பயிற்றப்பட்ட மருத்துவப்பெண் ஒருவர், மருத்துவமனைக்கும் பொறுப்பாக உள்ளார். சிறு புண்களுக்கு உடனுக்குடன் மருத்துவமளிக்கப்படுகின்றது. மருத்துவரின் ஏழற் (வாராந்த) பணி

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...



தமிழீழத் தேசியத் தலைவரிடம் பாலினிப்பு (Chocolate) வாங்கி உண்டு மகிழும்போது...

# கரும்புலிகளின் வாழ்வில்... இறுதி விருப்பம்

**1987** இன் தொடக்கம். அப்போது காந்தருபன் தொண்டைமனாறு சிங்களப்படை முகாமைச் சுற்றியிருந்த காவலரணில் கடமையில் இருந்தான்.

ஒருநாள் முகாமிலிருந்து சிங்களப்படையினர் வெளியேறிய போது, சண்டை தொடங்கியது. அச்சண்டையின் ஒரு சந்தர்ப்பத்தில், எதிரியின் கையில் உயிருடன் பிடிபட்டு விடக்கூடிய சூழ்நிலை உருவாகியபொழுது, காந்தருபன் குப்பியைக் கடித்துவிட்டான்.

ஆனால் அதிஸ்டவசமாக சக தோழர்களால் மீட்கப்பட்டு, காப்பாற்றப்பட்டான்.

இருந்தபோதும் - சயனைட் விசம் காந்தருபனின் உடலில் ஒரு உட்பாதிப்பை உண்டாக்கியிருந்தது. இந்த உட்பாதிப்புக்கான பராமரிப்பு முறைகளில் அத்தியாவசியமானதாக நிறை உணவு அருந்த வேண்டுமென, மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது.

1988, 1989 காலம். இப்போது காந்தருபன் தலைவர் அவர்களுக்குப் பக்கத்தில் மணலாற்றுக் காட்டில் நின்றான்.

காந்தருபனிற்கு இப்போதும் நிறை உணவு தேவைப்பட்டது.

ஒரு பசுமாடு இருந்தால், காந்தருபனிற்குப் பால் எடுப்பதுடன் -சுகவீனம் அடைகின்ற போராளிகளுக்கும் பால் கொடுக்க முடியும் எனக்கருதிய தலைவர், வெளியிலிருந்து பால் தரக்கூடிய நல்ல இனப் பசு ஒன்றை, காட்டுக்குள் இருந்த தளத்திற்கு கொண்டு வருமாறு சொன்னார்.

பசு வந்து சேர்ந்தது.

தலைவரின் துணைவியார், ஒரு தாயைப்போல் இருந்து, பால் காய்ச்சிக் கொடுத்தார்.

அந்தப் பொழுதுகளிலெல்லாம் காந்தருபன் நெஞ்சு நெகிழ்ந்து நிற்பான். தான் ஒரு கதியற்றவன் என்ற கவலையே அற்றுப் போகும்.



ஒருநாள் அன்பு கலந்த மரியாதையோடு, காந்தருபன் தலைவருக்குப் பக்கத்தில் வந்தான்.

பாசத்தோடு அவனை அழைத்து, அருகில் இருத்திக் கதைத்தார் தலைவர்.

"அண்ணை... என்னைக் கரும்புலிகளில சேர்த்துக்கொள்ளுங்கோ..." என்றான்.

அதோடு தனது உள்ளத்திற்குள் உறைந்துகிடந்த இன்னொரு விருப்பத்தையும் அவன் தலைவரிடம் சொன்னான்.

"உங்களுக்குத் தெரியும் அண்ணை, நானொரு 'அநாதை' அப்பா இல்லாம, அம்மா இல்லாம ஆருமே இல்லாம அலைஞ்ச என்னை... ஒரு அப்பாவும் அம்மாவும் எடுத்து, தங்கட பிள்ளையைப்போல வளத்தினம்"

... அதுக்குப் பிறகு நான் இயக்கத்திற்கு வந்தன். நீங்கள் என்னை அன்போடையும், பாசத்தோடையும் ஆதரிச்சு வளர்த்தியள். நான் வருத்தங்களால வாடேக்கை, எனக்கு வேண்டிய எல்லாத்தையும் செய்து கவனிச்சியள்..."

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

## காந்தருபனே!

வேருக்கு விழுதுகளின் அஞ்சலிகள்.
உன் நிழலில் ஆறும் வரை.
நாங்கள் உறவற்ற பறவைகள்.
க_லிலே நீ கரைந்து போகமுன்
தலைவனிடம் என்ன கேட்டாய்.
'என்னைப் போல் யாருமில்லாத
ஒரு உலகம்" கேட்டாய்
இந்தோ பார்
நாங்கள் உன் கனவுக்கு வடிவம்.
நீயும், நாங்களும் ஒரு கூட்டுக்
- கிளிகள்.

முகம் தெரியாத அண்ணனே !

உ_ன் நினைவைச் சுமந்து

வழித்தடம் பிசகாது நடப்போம்.



ஆவலுடன் கல்வி கற்கும் போது...

# அரசியலமைப்பு

## ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

## பிறேமாவை ஓரங்கட்டவும் சிறிமாவைக் களத்திலிருந்து அகற்றவும் யாப்புரீதியான ஏற்பாடுகள்

## அத்தியாயம் - 5

பதவியில் இருக்கும் ஜனாதிபதி தானாகப் பதவி விலகுமிடத்து அல்லது அவர் பதவி விலக்கப்படுமிடத்து அல்லது அவர் இறக்குமிடத்து அப்பதவியை எப்படி நிரப்புவது என்பது, இலங்கையில் மிகவும் சிக்கலான நடைமுறைகளைக் கொண்டது. ஜனாதிபதி முறைமை தோன்றிய முதலாவது நாடு அமெரிக்கா. அங்கு ஜனாதிபதிக்கு அடுத்து பதில் ஜனாதிபதியாகவும், ஜனாதிபதியாகவும் கடமை ஆற்றுவதற்கென தயார்நிலையில் உப ஜனாதிபதி இருப்பார். ஜனாதிபதிப் பதவி அங்கு வெற்றிடமாகுமிடத்து சிக்கலின்றி நேரடியாகவே அடுத்த கணத்தில் வெற்றிடம் நிரப்பப்படுகின்றது. இலங்கையில் ஏன் உப ஜனாதிபதிப் பதவி வைக்கப்படவில்லை? அதற்குப் பதிலாக ஏன் சிக்கலான ஒரு முறைமை வைக்கப்பட்டது போன்ற கேள்விகளை கலாநிதி என். எம். பெரேரா 1979 அம் ஆண்டு தான் எழுதிய நூலில் எழுப்பிவிட்டு, ஐ. தே. கவிற்குள் உள்ள பிறேமதாசா எதிர்ப்பு வாதத்தினை விபரிப்பதுடன் அதோடு பிரதம மந்திரி பதவியும் கூட ஒரு பெயரளவிலான பதவியாகச் சுருக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

இதனை விபரமாகப் பரிசீலிப்போம். அமெரிக்காவில் ஜனாதிபதியின் பதவி வெற்றிடமாகுமிடத்து, ஜனாதிபதிப் பதவிக்கு புதிதாக தேர்தல் எதுவும் நடைபெறாது. ஜனாதிபதியின் எஞ்சியுள்ள பதவிக்காலத்திற்கு உப ஜனாதிபதி, ஜனாதிபதியாய் பதவி வகிப்பார். அதாவது அமெரிக்க முறைப்படியான நான்கு ஆண்டுப் பதவிக்காலத்தில் ஜனாதிபதி ஓராண்டுதான் பதவிவகித்தார் என்று வைத்துக் கொண்டால், மிகுதியான மூன்று ஆண்டுகளுக்கும் உப ஜனாதிபதி ஜனாதிபதியாய்ப் பணியாற்றுவார்.

தமிழீழத்திலிருந்து
மு.திருநாவுக்கரசு

மேற்படி அமெரிக்காவில் ஒரு பதவிக்காலத்திற்காக நிகழ்வது போல, இலங்கையிலும் ஒரு தேர்தல்மூலம் ஒரு திட்டவட்டமான பதவிக்காலம் உருவாக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவிலும் பதவியிலிருக்கும் ஜனாதிபதி ஒருவர் இடைக்காலத்தில் பதவியை இழப்பாரானால், எஞ்சியுள்ள காலத்திற்கே இன்னொருவர் பதவி வகிக்க முடியும்.

அமெரிக்காவில் ஒவ்வொரு பதவிக்கால தொடக்கத்துக்கும் முடிவுக்குமென ஒரு நிரந்தரமான திகதியுண்டு, அதனைப் பின்பற்றியே சிறீலங்காவிலும் ஒவ்வொரு பதவிக்கால தொடக்கத்திற்குமென பெப்ருவரி 4 ஆம் திகதியென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான விடயங்கள் எல்லாமே அமெரிக்காவைப் பின்பற்றி செய்யப்பட்டிருக்கின்றபோது, ஏன் அமெரிக்காவைப் பின்பற்றி உபஜனாதிபதி முறைமை இலங்கையில் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்று கேள்வி எழுவது நியாயமே.

"ஜனாதிபதி சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறேதேனும் காரணமாக தமது பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் இயலாது இருப்பாரெனக் கருதுவாரெனில் அத்தகைய காலத்தின் போது ஜனாதிபதி என்ற பதவியில் முதலமைச்சரை ஜனாதிபதி என்ற பதவிக்குரிய தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவர் நியமிக்கலாம்..." என 37 ஆவது சரத்தின் முதலாம் பிரிவு கூறுகிறது. ஆனாலும் ஜே. ஆர் வெளிநாடுகளுக்குப் பல தடவை சென்றிருந்தபோதிலும் பிறேமதாசாவை அவர் பதில் ஜனாதிபதியாக நியமித்திருக்கவில்லை என்பதைக் காணலாம்.

பிறேமதாசாவை ஜே. ஆர் பிரதமராக நியமித்தமையானது பிறேமதாசாவுக்கு ஐ. தே. கவின் அடிமட்ட உறுப்பினர் மத்தியில் பெரும் செல்வாக்கு இருந்தமையினால்தான் என்றும், அவ்வாறு பிறேமாவை பிரதமராக நியமிப்பது ஜே. ஆருக்குத் தவிர்க்க முடியாததாய் இருந்ததென்றும் நம்பலாம்.

எனவே எந்த வகையிலும் பிறேமதாசா ஜனாதிபதிப் பீடத்தில் அமர்ந்துவிடக்கூடாது என்பதில், ஜே. ஆர் அக்கறையாக இருந்தார் என உணரமுடிகின்றது. இக்கருத்தினைப் பிற்காலச் சம்பவங்களும் உறுதிப்படுத்துவனவாய் அமைந்தன; அதனை ஆராய்வோம்.

நாடாளுமன்றத்திற்கு அப்பாலான அரசியலில் பிறேமாவைக் கட்டுப்படுத்துவது கடினம் என்பது ஜே. ஆர். இற்குத் தெரிந்திருந்தது. ஆனால் நாடாளுமன்றத்திற்குட்பட்ட அரசியலில் பிரேமாவை அடக்கி வைத்திருக்கும் வழிகளும் வல்லமைகளும் ஜே. ஆரிடம் இருந்தன. ஜே. ஆர் பதவியிலிருந்த காலத்தில் நாடாளுமன்றத்திலிருந்த ஐ.- தே. க உறுப்பினர்களில் பெரும்பாலானோர் ஜே. ஆரின் ஆதரவாளர்கள். 1977 ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட இந்த நாடாளுமன்றத்தின் விசுவாசிகள் பட்டியலைப் பேணிப்பாதுகாப்பதற்காகத்தான் ஜே. ஆர் 1982 ஆம் ஆண்டு ஒரு பொதுத் தேர்தலுக்குச் செல்லாது மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின்மூலம் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஆறு ஆண்டுகளுக்கு நீடித்தார். இதன்மூலம் தனது விசுவாசிகளால் ஜே. ஆர் தன்னை அரண் செய்து கொண்டார். 1982 ஆம் ஆண்டு நாடாளுமன்றப் பொதுப் தேர்தலை நடாத்தியிருந்தால், வேட்பாளர் பட்டியலில் பிறேமதாசாவின் ஆதரவாளர்கள் பெருமளவில் இடம்பிடிக்க நேர்ந்திருக்குமென்றும், அதனைத் தவிர்ப்பதற்காகத்தான் ஜே. ஆர் பொதுத்தேர்தலை நடத்தாது மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பை நடாத்தினாரென்றும் தனிப்பட்ட உரையாடலின்போது திரு. சிவா சுப்பிரமணியம் தெரிவித்தார்.

பொதுத்தேர்தல் நடத்தாது, மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பால் நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு ஜே. ஆர் கூறிய காரணம், பொதுத் தேர்தல் நடாத்தினால் "நக்ஸலைட்டுக்கள்" நாடாளுமன்றத்துள் பிரதிநிதித்துவம் பெற்றுவிடுவார்கள். அதனைத் தடுப்பதற்கே இந்த மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு என்றார். ஜே. ஆர் கூறிய "நக்ஸலைட்டுக்கள்" பிறேமாவின் ஆதரவாளர்கள்தான் என்று சிவா சுப்பிரமணியம் மிகவும் சுவாரசியமாகக் கூறினார்.

பொதுத் தேர்தலை நடத்தியிருந்திருந்தால் சாதாரண பெரும்பான்மை ஆசனங்களைத்தான் ஐ. தே. க நாடாளுமன்றத்தில் கைப்பற்றியிருக்க முடியும் என்பதையே, மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பில் கிடைத்த வாக்கு விகிதம் காட்டுகின்றது. இந்தச் சாதாரண பெரும்பான்மை ஆசனங்களில் பிறேமாவின் ஆதரவாளர்களும் கணிசமானளவு இடம்பிடித்திருப்பார்களேயானால் ஜே. ஆரின் நிலை நெருக்கடிமிக்கதாய்த்தான் இருந்திருக்கும். எனவே மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பின் மூலம் நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடித்ததனால் ஜே. ஆர் ஒரே நேரத்தில் இரண்டு வெற்றிகளைப் பெற்றார். ஒன்று, சுமாராக 53 வீத வாக்குகளினால் நாடாளுமன்றத்தின் 83 வீத ஆசனங்களைப் பேணியமை. இரண்டு, பிறேமாவை ஓரங்கட்டியமை.



ஜே. ஆர். யாரையும் நம்பாத ஒருவர். தனது விசுவாசிகளாக ஐ. தே. க நாடாளுமன்ற உறுப்பினர்களிற் பெரும்பாலானோர் காணப்பட்டாலும், இவர்கள் பக்கம் மாறவோ அன்றி இவர்கள் பிறேமாவால் வென்றெடுக்கப்படவோ கூடும் என அச்சம் கொண்டிருக்கலாம். ஆதலினால் நாளிடப்படாத பணிவிலகல் கடிதங்களை இவர் தனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வாங்கி வைத்திருந்ததன்மூலம் தன்னைப் பாதுகாக்க முற்பட்டார் என்று எண்ணமுடிகின்றது. அதாவது, கட்சி தாவாத் தடைச்சட்டம் நடைமுறையில் இருந்ததால் ஐ. தே. க உறுப்பினர் எவரும் இலகுவிற் கட்சி மாறிவிட முடியாது. எனவே தனது உறுப்பினர்கள் ஐ. தே. கவிற்கு எதிராகக் கட்சி மாற நேருமென ஜே. ஆர். அஞ்சவேண்டியதில்லை. ஆனால் இவர்கள் கட்சி மாறாமல் ஐ. தே. கவிற்குள் இருந்துகொண்டு பிறேமாவின் பக்கம் சார்ந்துவிடக்கூடும் என்ற அச்சத்தினாலேதான், அதனைத் தடுப்பதற்காக நாளிடப்படாத பணிவிலகல் கடிதங்களை வாங்கி இருக்கலாம் என்று, நம்ப இடமுண்டு.

நாடாளுமன்றத்தினுள் ஜே. ஆர் இத்துணை பெரிய வரம்புகளைப் பிறேமாவிற்கு எதிராக எழுப்பித் தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டபோதிலும், நாடாளுமன்றத்திற்கு வெளியே பிறேமாவிற்கு ஜே. ஆர் பெரிதும் அஞ்சினார். நாடாளுமன்றத்திற்குப் புறம்பான அரசியலில், அதாவது தடி அடி, மிரட்டல்களைச் செய்வதில் பிறேமாவிற்கென ஒரு பெரும் கூட்டமும் பலமும் இருந்தது. வேறு நோக்கங்கள் இருப்பினும் பிறேமாவைக் கட்டுப்படுத்துவதையும் ஒரு நோக்கமாகக் கொண்டு சிறில் மத்தியூ தலைமையில் ஒரு தடி அடிக் கூட்டத்தை ஜே. ஆர் வளர்த்தார். பின்பு அதனையும் விடச் சற்று முன்னேறி தனது மகன் றவி ஜெயவர்த்தனா தலைமையில், ஒரு மேல்வர்க்க இராணுவத் தட்டொன்றை உருவாக்கினார். இது எஸ். ரீ. எவ் என்ற பெயரில் தமிழ்மக்கள் மீது தனது பயிற்சிகளை மேற்கொண்டது. றவி ஜெயவர்த்தனா தலைமையிலான இப்படியான இராணுவ அணி ஒன்றின் வளர்ச்சியானது பிறேமாவை அவரது சண்டித்தனப் பாதையில் இருந்து சற்றுப் பின்தள்ளியது.

அடுத்து, தனக்குப்பின்னான அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பிறேமாதான் என்பது ஜே. ஆர். நிலைப்பாடாய் இருக்கவில்லை. மூன்றாவது தடவையும் பதவிக்கு வருவது அல்லது தனது வாரிசுகளான காமினி திசாநாயக்காவையோ அன்றி லலித் அத்துலத்முதலியையோ வேட்பாளராக்குவது என்ற எண்ணத்துடனேயே காணப்பட்டார். ஆனால் இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தென்னிலங்கையில் ஏற்பட்ட கொந்தளிப்புக் காரணமாகவும், அந்தக் கொந்தளிப்பை பிறேமா தனக்காகப் போதியளவு பயன்படுத்தியதாலும், ஜே. ஆரும் அவரது வாரிசுகளும் மேற்படி தேர்தற் களத்திலிருந்து ஒதுங்க நேர்ந்தது. மொத்தத்தில் ஜே. ஆர் தனது பன்னிரண்டு ஆண்டு கால ஆட்சிக் காலத்திலும் பிறேமாவை எதிர்நிலையில் வைத்துத்தான் அணுகியுள்ளார் எனத் தெரிகின்றது. பிறேமாவும், ஜே. ஆருக்கு எதிராக நீண்டகாலமாக நிலைப்பாட்டை கொண்டிருந்த ஒருவர்தான். அதாவது டட்லி சேனனாயக்காவுக்கும், ஜே. ஆருக்கும் எதிராகச் செயற்பட்டவர். பின்பு சந்தர்ப்பம் கிடைத்தபோது இலங்கை -இந்திய ஒப்பந்தத்தினையும், ஜே. வி. பியின் எழுச்சியினையும் ஜே. ஆருக்கு எதிரான முதன்மைச் சாதனங்களாக பிறேமா பயன்படுத்தினார் என்பது வெளிப்படை.

எனவே இந்த அரசியல் யாப்பின் தன்மையை நிர்ணயிப்பதில் ஜே. ஆருக்கும் பிறேமாவுக்கும் இடையிலான சிக்கல்களும் ஓரங்கமாய் இருந்துள்ளன எனத் தெரிகின்றது. இவ்வாறு ஜே. ஆருக்கும் பிறேமாவுக்கும் இடையிலான சிக்கல்கள் அரசியலமைப்பை நிர்ணயிப்பதில் ஒரு பங்கு வகித்தது போலவே, ஜே. ஆருக்கும் சிறிமாவுக்கும் இடையிலான ஆதிக்கப் போட்டியும் ஒரு பங்கெடுக்கத் தவறவில்லை. அதாவது சிறிமாவைத் தேர்தல் களத்திலிருந்து அகற்றுவதற்கான ஏற்பாட்டை அரசியல் யாப்பில் மேற்கொண்டிருந்தார். சிறிமாவிற்கு எதிராக இப்படி ஒரு ஏற்பாட்டினை ஜே. ஆர் மேற்கொண்டிருந்தார் என்பதை நிரூபிப்பதன்மூலம், பிறேமாவிற்கும் எதிராக இவ்வாறாக நடந்து கொண்டார் என்பதும் உறுதியாகும்.

சிங்கள அரசியலில் குடும்ப ஆதிக்கம் ஒரு முதன்மைக் கருவியாக உள்ளநிலையில், சிறிமாவோவிற்கு என ஒரு மக்கள் கவர்ச்சி உண்டு. சுதந்திரக் கட்சியின் அடித்தளமும் சிறிமாவோதான். இந்நிலையில் 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ போட்டியிடும் போது, இந்த நேரடிப் போட்டியில் தன்னால் சிறிமாவோவிற்கு ஈடுகொடுக்க முடியாது போகும் என்பதை, ஜே. ஆர் நம்பினார். எனவே சிறிமாவோவை தேர்தற் களத்திலிருந்து அகற்றுவதற்கு ஜே. ஆர் முன்கூட்டியே திட்டமிட்டார். 1978 ஆம் ஆண்டு ஏழாம் எண் சிறப்புச்சட்டம் ஒன்றைக் கொண்டுவந்து, அதனை அரசியல் அமைப்பின் எண்பத்தோராவது சரத்தாக இணைத்தார். இதனைப் பின்னோக்கும் சட்டவாக்கம் என்ற வகைக்குள் அடக்குவர். இதன் மூலம் ஜனாதிபதிக்கு சிறப்பு நீதிமன்றங்களை அமைப்பதற்கான உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளதுடன் நடைமுறையில் உள்ள சட்டத்தின்மூலம் ஒருவர் குற்றவாளி என்று இல்லை என்றாலும், அதற்கு முன்பு ஒருவர் செய்த செயல்களை பின்பு இயற்றப்பட்ட சட்டத்தினால் குற்றத்திற்கு உரியவராகக் கணிப்பதற்கு இந்த ஏற்பாடு வசதி செய்தது, 81 ஆவது சரத்தின் முதலாம் பிரிவு பின்வருமாறு கூறுகின்றது;

"... எவரேனும் ஆள் ஒருவர் அரசியல் அமைப்புத் தொடங்குவதற்கு முன்னர் அல்லது அதன் பின்னர் ஏதேனும் செயலைச் செய்தார் அல்லது செய்யாது விட்டார் என்ற காரணத்திற்காக அவர்மீது குடியியற் தகுதியீனத்தை விதிக்க வேண்டுமென்று விதந்துரைக்குமிடத்து, நாடாளுமன்றமானது, அதன் முழு உறுப்பினர்களினதும் எண்ணிக்கையில் (சமூகமளிக்காதோர் உட்பட) மூன்றில் இரண்டுக்குக் குறையாதோர் அதற்குச் சாதகமாக வாக்களித்து நிறைவேற்றப்படும் தீர்மானத்தின் மூலம்:-

அ) ஏழாண்டுக்கு மேற்படாத காலமொன்றிற்கு அத்தகைய ஆளின் மீது குடியியற் தகுதியீனத்தை விதிக்கலாம்.

ஆ) அவர் நாடாளுமன்ற உறுப்பினராயிருப்பின் அவரை நாடாளுமன்றத்தில் இருந்து விலக்கலாம்" என்று கூறப்பட்டுள்ளது.

### சென்ற இதழ் தொடர்ச்சி

இவற்றில் பல விடயங்களைத் தெளிவாக அவதானிக்கலாம். இங்கு குற்றத்திற்குரிய தண்டனை என்னவெனில், குற்றவாளியாகக் காணப்பட்டவரை அவரது குடியுரிமையைப் பறிப்பதன் மூலம் அரசியற் களத்திலிருந்து அகற்றுவதே தவிர வேறில்லை. உண்மையில் குற்றவாளிக்கு இதனைவிடவும் சிறைபோன்ற பெரிய தண்டனைகள் பலவுண்டு. ஆனால் இங்கு ஜே. ஆரின் நோக்கம் சிறிமாவைத் தண்டிப்பதல்ல; அவரை அரசியற் களத்திலிருந்து அகற்றுவதற்கான தண்டனையை உருவாக்குவதுதான். அதாவது குடியுரிமையைப் பறிக்காத வேறேதாவது தண்டனைகள் அவர் அரசியற் களத்தில் நிற்பதை தவிர்க்காது என்பதால் இப்படி ஒரு ஏற்பாட்டை மேற்கொண்டார்.

இந்தவகையில் ஜே. ஆரை எதிர்கொள்ளவல்ல எதிர்க்கட்சித் தலைவிக்கு எதிராகவே 81 ஆவது சரத்தினை ஜே. ஆர் அரசியல் அமைப்பிற் சேர்த்திருந்தார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இவற்றின்மூலம் ஜே. ஆர் தனது எதிரிகளை வெற்றி கொள்வதற்கேற்ற ஒரு கருவியாகவே அரசியல் அமைப்பை உருவாக்கினார். ஜே. ஆரின் குறுகியகாலப் பதவி நலன்களுக்கு ஏற்ப அரசியல் அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கும் இடத்து, அதற்கு அப்பால் இந்த அரசியல் அமைப்பு எப்படி நீண்டகாலத் தேவைகளுக்கேற்ற நீண்ட ஆயுளைக் கொண்டிருப்பது சாத்தியமாகும்? ■

(தொடரும்)

# அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்



"1991 ஆம் ஆண்டு எனக்கு வயது ஒன்பது. அப்போது நான் சிறுபிள்ளை. எனக்கு இரண்டு தம்பிகள் இருந்தார்கள். என்னுடைய அப்பாவும் அம்மாவும் எங்களை மிகவும் அன்பாகவும் பாசமாகவும் வளர்த்து வந்தார்கள். ஒருநாள், எனது வீட்டின் அருகில் உள்ள மைதானத்தில் என்னுடைய நண்பர்களும் நானும் சேர்ந்து விளையாடிக் கொண்டிருந்தோம். திடீரென வானவெளியில் உலங்குவானூர்திகளின் சத்தம் கேட்டது. நான் வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தேன். வானூர்திகள் எல்லாம் கிட்ட இறங்கி விட்டன. எனக்கு பயத்தினால், கால்கள் அசையவில்லை. ஓடமுடியாமல் சுற்றும்முற்றும் பார்த்தேன். எனது நண்பர்கள் எல்லோரும் ஓடிவிட்டனர். சிறீலங்கா இராணுவம் எனது கைகள் இரண்டையும் இறுகப்பற்றியது. நான் பலத்த குரலில் அப்பா, அம்மா என்று கூக்குரலிட்டேன். எனக்குப் பயத்தினால் உடல் எல்லாம் நடுங்கியது. என்னுடைய சத்தம்கேட்டு, என்னுடைய அன்பான அப்பாவும் பாசமுள்ள அம்மாவும் மைதானத்திற்கு ஓடிவந்தார்கள். உடனே இராணுவ கூலிச்சிப்பாய்கள் என்னுடைய அப்பாவின் கைகளையும் கண்ணையும் கட்டினர். பின்னால் ஓடிவந்த அம்மாவின் கண்களும் கட்டப்பட்டன. என்னுடைய அப்பா ஏற்கனவே நோயாளி. அவர் பயத்தினால் இன்னும் பலவீனமடைந்த நிலையில் காணப்பட்டார்.

காந்தருபன் அறிவுச்சோலையைச் சேர்ந்த சிறார்கள் சிலர், தாங்கள் ஏதிலிகளாக்கப்படுவதற்குக் காரணமாகவிருந்த மறக்கமுடியாத சம்பவங்களைப் பகிர்ந்துகொண்டபோது பெற்ற விபரங்களே, 'அறிவுச்சோலையில் பூத்த நினைவுப் பூக்கள்' என்ற தலைப்பின் கீழ் வெளியிடப்படுகின்றது.

இராணுவச் சிப்பாய் ஒருவன் பாய்ந்துசென்று, அப்பாவைத் துவக்குப் பிடியால் அடித்து விட்டு கேட்டான், 'எங்கயடா கொட்டியா' என்று, அப்பா தனக்குத் தெரியாது என்று சொன்னார். திரும்பவும் அடித்தான். அடித்துவிட்டு துவக்கால் சுட்டான் அப்பா நிலத்தில் விழுந்து அரை உயிரில் துடித்துக்கொண்டிருந்தார். எங்கள் மைதானத்தைத் தொடர்ந்து காடு உள்ளது. அப்பாவைச் சுட்டதைக் கண்டதும் அம்மா என்னை காட்டுக்குள் ஓடித்தப்பு என்று சொல்லி பிடித்துத் தள்ளிவிட்டார். நான் காட்டுக்குள்ளால் எனது அம்மம்மாவின் வீட்டை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தேன்.

நீண்டதூரம் ஓடிக்களைப்படைந்துவிட்டேன். எனது நிலையைக் கண்ட புலிமாமா ஒருவர், என்னைத் தனது வாகனத்தில் ஏற்றிச்சென்று அம்மம்மாவின் வீட்டில் விட்டுவிட்டார். என்னுடைய தம்பிமாரும் அம்மம்மாவும் என்னிடம் அம்மா எங்கே என்று கேட்டார்கள். நான் அவர்கள் முன் விக்கி விக்கி அழுதேன். அழுதபடி நடந்ததைச் சொன்னேன். அடுத்தநாள் என்னை ஏற்றிவந்த புலிமாமா சொன்னார், அப்பாவினதும் அம்மாவினதும் இறந்த உடல்கள் மைதானத்தில் கிடப்பதாக. நாங்கள் எங்களுடைய அப்பாவையும் அம்மாவையும் அந்தர வெளியில் உடம்புகள் அழுக விட்டுவிட்டோமே என்று நினைத்து குமுறிக் குமுறி அழுதோம். ஆமிக்காரன் அங்கே நிற்பதால், எங்களை மைதானத்திற்குப்போக புலிமாமாக்கள் விடவில்லை. எங்களை மாமாக்கள் நாவற்குழியில் கொண்டுவந்து விட்டார்கள், நானும் அம்மம்மாவும் இரு தம்பிமாரும் அங்கே முகாம்களில் இருந்தோம். நான் அருகில் உள்ள வாசிகசாலையில் வேலைசெய்துகொண்டிருந்தேன்.

அப்போது ஒருநாள் ஆஞ்சநேயர் மாமா அங்கே வந்தார். அவர் என்னைக்கண்டு தன்னுடன் வந்தால் என்னை நன்றாகப் படிப்பித்து வளர்க்கக்கூடிய இடத்தில் சேர்த்துவிடுவதாகச் சொன்னார். நான் அம்மம்மாவிடம் கேட்டேன். அம்மம்மாவும் நீயென்றாலும் நன்றாகப் படித்து வந்து தம்பிமாரைக் காப்பாற்று; நானும் இன்னும் எத்தனை நாளைக்கு உயிர்வாழ்வேன் என்று சொல்லி, என்னை மட்டும் மாமாவுடன் அனுப்பினார். மாமா என்னைக்கொண்டுவந்து இங்கே அறிவுச்சோலையில் சேர்த்தார். இப்போது நான் இங்கே மகிழ்ச்சியாக இருக்கிறேன். என்னையும் என்போன்ற எனது சகாக்களையும் அம்மாவும், மாமாக்களும் கவனமாகப் பார்க்கிறார்கள். என்னுடைய துள்ளித்திரியும் பருவத்தின் போது, என்சிறகுகளை உடைத்த சிறீலங்கா ஆமியின் கொடுமையை என்னால் மறக்க முடியாததாக உள்ளது. புலி மாமாக்கள் இல்லாவிடில் என்னுடைய கதி நிர்க்கதியாயிருக்கும். இதுவே என்னுடைய வாழ்க்கையின் மறக்கவும் முடியாத, நினைக்கவும் முடியாத சம்பவம் ஆகும்".■

பு. அன்ரனி.

(தொடரும்)

# மகன்

'விடுதலைப் புலிகள்' செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட காந்தருபனின் கட்டுரை.

"ஒருநாள் தொழிலுக்குப் போறதற்கான ஒழுங்குகளைப் பார்க்க, நான் கடற்கரைக்குப் போனன். கரையில் ஊர்ச்சிறுவர்களோட புதுசா ஒரு பையனும் நிண்டுகொண்டிருந்தான். ஒரு கிழிஞ்ச பெனியன் போட்டுக்கொண்டு, மெலிஞ்ச உடம்போட அவன் இருந்தான். அவனைக் கூப்பிட்டு,

"நீ ஆர் தம்பி? எங்க இருந்து வாறாய்?" என்று ஆதரவோட கேட்டன்.

உடனேயே அவனுக்கு இரண்டு கண்களும் கலங்கிப்போச்சுது. "எனக்கு ஒருத்தருமில்லை... அம்மா, அப்பா எல்லாரும் செத்துப்போச்சினம்... சொந்தக்காரர் ஆருமில்லை... இப்படியே நடந்து, நடந்து இந்தக் கடற்கரைக்கு வந்துசேர்ந்தன்" என்றான்.

காந்தருபனை தனது மகனைப் போல எடுத்து, பாசத்தோட வளர்த்த அவர், அவனின் கதையைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

"கலியாணம்செய்து நீண்டகாலமாக எங்களுக்கு குழந்தை கிடைக்கேல்லைத் தம்பி... ஆரிட்டையாவது ஒரு. குழந்தையை எடுத்தாவது வளப்பம் எண்டு நாங்கள் நினைச்சுக்கொண்டிருந்தம்...

"இந்தக் கடற்கரையில இந்த இடத்திலதான் உங்களுக்கு நான் மகனானனான். இண்டைக்கு அதே இடத்தில, உங்களை விட்டுட்டுப்போறன்"

அந்த நேரத்திலதான் தம்பி எங்களிட்டை வந்தான். அவனை வீட்டுக்கு கூட்டிவந்து -சொந்தப் பிள்ளையாக வளர்த்தம்..."

"இது நடந்தது பதினைஞ்சு வருசத்துக்கு முந்தி... அதுக்குப்பிறகு காந்தருபன் வளர்ந்து பெரியவனாகி, பின் இயக்கத்துக்குப் போனான்..."

அவர் மனதைத் திறந்து கதைத்துக்கொண்டிருந்தார்.

"நான் கடற்புலியளுக்கு ஒட்டியாய் போறனான். வண்டியில நாங்கள் பொடியளையோ, சாமான்களையோ கொண்டுவாற நேரங்களில கனதரம் நேவியால கலைபட்டிருக்கிறம். இப்படி நாங்கள் போய்வாறதுகள் பற்றி தகவல் சொல்லுகிற பெரிய கப்பல் நடுக்கடலில் நிக்கும். அந்தக் கப்பல் எடுக்கிற தகவல்கள் தான் நாங்கள் கடலில் பறிகொடுத்த அத்தனை பெடியங்களின்ர சாவுக்கும் காரணம்".

"அந்தத் தாய்க்கப்பல எங்கட பொடியள் அடிக்கப்போறாங்களாம் எண்டு கேள்விப்பட்டன். அந்தக் கப்பல் அடிக்கிறதுக்கு கரும்புலிகளாகப் போற பையன்களில எங்கட காந்தருபனும் ஒரு ஆளாம் எண்டிறதையும் நான் அறிஞ்சன்".

எங்களுடைய முகத்தை ஊடுருவிப் பார்த்துவிட்டுச் சொன்னார்; "உடனே தாங்கிக்கொள்ள எனக்குக் கஸ்டமாகத்தான் இருந்தது".

அவருடைய நா தழுதழுத்தது. சோகம் தொண்டையை அடைக்க அவர் தொடர்ந்தார்.

கடைசியா அவன் கரும்புலியாய்ப் போகும்போது, நானும் கடற்கரையில நிண்டன்.

அவனை நான் எந்த இடத்தில முதன்முதலில் கண்டு தூக்கி வளர்த்தனோ அதே கடற்கரை.

படகில் ஏறப்போறதற்கு முதல் என்னட்ட ஓடி வந்தான். கட்டிப்பிடிச்சு மாறிமாறி கன்னத்தில் கொஞ்சினான்.

"அநாதையா வந்த என்னை ஆளாக்கினியள் அப்பா" எண்டான்.

"உங்களுக்கு ஒண்டு ஞாபகமிருக்கோ" எண்டான்.

"இந்தக் கடற்கரையில இந்த இடத்திலதான் உங்களுக்கு நான் மகனானனான். இண்டைக்கு அதே இடத்தில, உங்களை விட்டுட்டுப்போறன்" எண்டு சொல்லிப்போட்டுப் போனான் தம்பி .

திறந்திருந்த கதவொன்றைச் சுட்டிக்காட்டி, "அதுதான் எங்கட சாமி அறை. அந்த தெய்வத்தின்ர படத்திற்குப் பக்கத்தில தான் அவன்ர படத்தையும் வைச்சிருக்கிறம்" என்றார்.

"தன்ர சொந்த அப்பாவின்ரபேர் அவனுக்குத் தெரிஞ்சும் இயக்கத்தில விபரங்களைப் பதியேக்க, யோகராசா எண்டு என்னைத் தான் தன்னுடைய அப்பா எண்டு பதிஞ்சிட்டுப் போயிருக்கிறான்...ம்".

அவருடைய கண்கள் கலங்கிப் போயின. தனது சால்வையால் கண்களை ஒற்றிக்கொண்டார். அருகிலே நின்ற அம்மா சொன்னா.

"அன்றைக்கு முழுவதும் இவர் ஒருமாதிரி இருந்தார். நான் ஒண்டும் கேக்கேல்லை. பின்னேரம் கடலில் பொடியள் கரும்புலியாய்ப்போய் கப்பலடிக்கப் போறாங்களாம் எண்டு, பாத்திட்டு வாறனெண்டு போனார். காந்தருபனும் போகப்போறான் எண்டு இவர் சொல்லவில்லை. இரவானது எனக்கு நித்திரை வரமாட்டனெண்டிட்டுது. சத்தத்தையாவது கேப்பமெண்டு, வீட்டுவாசலில் இருந்தன். கொஞ்ச நேரத்தில் கடலதிரச் சத்தங் கேட்டது. நான் வாசலிலேயே இருந்தன். சாமம் ஒருமணியளவில், அவர் ஒருமாதிரியாகச் சோர்ந்துபோய் வந்தார்.

வீட்டுக்குள் வந்தவர் - எங்கட காந்தருபனும் கரும்புலியாகப் போனவன் என்று சொல்லிப் போட்டு அழுதார். நான் ஏங்கிப் போனன். என்னால் தாங்கிக் கொள்ளேலாம இருந்தது... நானும் சேர்ந்து அழுதேன்".

"இல்லைப் பெரியம்மா! அந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத்தான் அவரிட்டைக் கேட்டனான்... கட்டாயம் நான்தான் அந்த வேலைக்குப் போகணும்..."

யோகராசா அண்ணரும் மனைவியும் பிற்காலத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றார்கள் - அவர்கள் தங்களுக்கு நான்கு குழந்தைகள் என்று சொல்கிறார்கள். தங்களுடைய முதல் மகன் கோணேஸ்வரன் (காந்தருபன்) என்கிறார்கள்.

அவர்களுடைய மூத்த மகன் கரும்புலியாகிக் கடலிலே காவியமாகியபின், அவர்களுடைய நான்காவது மகன் பிறந்தான்.

இப்போது கைக்குழந்தையான அவனைத் தூக்கி, தோளில் சாய்த்தபடி, அந்தத் தாய் சொல்கிறாள், "காந்தருபனா நினைச்சுத்தான் இவனை நான் வளர்க்கிறன்".

இந்தத் தாயுடன்கூடவே அவரது தமக்கையாரும் இருந்தார். அதே உணர்வு. சின்ன வயது முதல் காந்தருபன்மீது அன்பு செலுத்திய இந்தப் பெரியம்மாவும் சேர்ந்து, கடந்தகாலத்தை நினைவுகூர்ந்தார்.

"சின்ன வயதில காந்தருபன் என்ர பிள்ளையளோடை சேர்ந்துதான் விளையாடித்திரிவான். படிக்கிறதெண்டா அவனுக்குச் சரியான கள்ளம். என்ர மகள் அவனைக் கூட்டிக்கொண்டு, வந்து இருத்தி எழுதக் கற்றுக் கொடுப்பாள்.

'அ' எழுதி, 'ஆ' எழுதி, 'இ' எழுதும்போது இதென்ன கனக்க சுழிபோடவேண்டியிருக்கு... எழுதுப்படுகுதில்லை எண்டு சொல்லி, கொப்பியைத் தூக்கி எறிஞ்சுபோட்டு ஓடிவிடுவான்...

அப்படிப்பட்டவன் பிறகு இயக்கத்திற்குப்போய், கொஞ்சக்காலத்தால திரும்பிவரேக்க, பெரிய அறிவாளியா இருந்தான். பெரிய அரசியல் மேதைகளைப்போல எங்களுக்கெல்லாம் விளக்கம்தருவான். அந்தளவுக்கு அவனை இயக்கம்தான் வளர்த்துவிட்டது".

பெரியம்மா தொடர்ந்து சொன்னார், "கப்பலடிக்கிறதுக்குப் போறதுக்கு ரெண்டு நாளைக்கு முன்னர், சரியான வெயிலுக்கை வீட்டுக்கு வந்தான்; தலையிடியாக் கிடக்கு, பனடோல் தாங்கோ என்றான்".

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...

# போர்நிறுத்தம் எமது...

தீர்வொன்றை விரும்பும் பாதுகாப்புப் பிரிவுகளுக்கு அடிமைப்பட்டு, சமாதான முயற்சிகளிலிருந்து விலக முயற்சி செய்வதாக விடுதலைப்புலிகள் கூறுகின்றனர்" இதில் உண்மை என்ன?

**பதில்:** "தாங்கள் கூறியதைப் போன்று சமாதானத்தை ஏற்படுத்த எமது அரசிற்கு இந்நாட்டு மக்கள் 6 மாதங்களுள் 3 தடவைகள் அங்கீகாரம் அளித்துள்ளனர்; நாம் ஆட்சிக்கு வந்து ஒரு வாரத்திற்குள் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றோம். ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் பல கஸ்டங்கள் மத்தியில் நாம் அந்த சமாதான முயற்சியைத் தொடர்ந்தோம். இதனால் தேர்தலில் போட்டியிட்ட எனக்கு சிக்கல்கள் வரலாம் எனத் தெரிந்திருந்தும் சமாதான முயற்சியை முன்னெடுத்தேன். ஆனால் அக்டோபர் மாதத்து குண்டுவெடிப்பு எமது முயற்சிகளைத் தற்காலிகமாக நிறுத்தும் நிலையை ஏற்படுத்தியது. இதுசுமார் 3 வாரங்கள் மட்டுமே நீடித்தது. நான் ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்து, ஒரு வாரத்திற்குப் பின் நாம் விடுதலைப்புலிகளுடன் சமாதான முயற்சி தொடர்பான கடிதப் பரிமாற்றங்களை தொடங்கினோம். இம்மாதத்தினுள் ஆறு, ஏழு கடிதங்கள் இரு தரப்பினருக்கும் இடையில் பரிமாறப்பட்டுள்ளன. இவற்றில் நாம் விடுதலைப்புலிகளுக்கு போர் நிறுத்தம் ஒன்றை முன்மொழிந்துள்ளோம். குறைந்தது தற்காலிக போர் நிறுத்தம் அவசியம் எனக் கூறியுள்ளோம். முதற்கட்டமாக இதனை இரண்டு வாரங்களுக்கு அனுசரிப்போம் என முன்மொழிந்துள்ளோம்.

இந்தப் போர் நிறுத்தம் வெறும் போர் நிறுத்தமாக மட்டுமல்ல - எமது மக்களும் வடகிழக்கு மக்களும் விரும்பும் விதத்தில் போரை நிறுத்தி, நிரந்தர சமாதானத்தை அடையும் அரசியல் தீர்விற்கான முயற்சியில் இறங்குவதற்கான முதற்படியாகவே நாம் இதனைக் காண்கின்றோம்.

அதாவது, போர் நிறுத்தத்தைத் தொடக்கி கொஞ்சக் காலத்திற்குள் சமாதான பேச்சுவார்த்தை தொடக்கப்பட வேண்டும் என நாம் தெளிவாக விள்க்கியுள்ளோம். விடுதலைப்புலிகளும் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். சமாதான பேச்சுவார்த்தையையும் ஏற்றுக் கொண்டதைப் போல் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

போர் நிறுத்தம் ஒன்றை மட்டும் தனித்து நாம் விரும்பவில்லை. இந்தப் போர் நிறுத்தம் செயல் முனைப் பார்வையுள்ள ஓர் அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைக்கு இட்டுச் செல்லும் என்பதை உறுதி செய்து கொள்வதையே நாம் விரும்புகின்றோம்". ■

# ஆயுத விற்பனையை நிறுத்துவதே இனச்சிக்கலைத் தீர்க்க வழி

## ஐரோப்பிய நாடுகளில் வண. பிதா இம்மானுவல் வலியுறுத்து

ஐரோப்பிய நாடுகள், சிறீலங்கா அரசிற்கு விற்பனைசெய்யும் ஆயுதங்களை நிறுத்துவதன் மூலமே இனச்சிக்கலை முடிவுக்குக்கொண்டுவர முடியுமென அருட்திரு எஸ். ஜே. இம்மானுவல் தெரிவித்தார்.

அண்மையில் ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற சிறீலங்காவின் இனச்சிக்கல் தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். அண்மையில் ஐரோப்பிய நாடுகளிற்கு வருகை ஒன்றை மேற்கொண்டு, அங்கு பல வெளியுறவு அமைச்சர்களின் அதிகாரிகளைச் சந்தித்ததுடன், ஐம்பதிற்கு மேற்பட்ட கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டு, திரும்பிய யாழ். மாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் முதன்மைக்குரு அருட்திரு எஸ். ஜே. இம்மானுவல் அண்மையில் உள்ளூர் செய்தியாளர்கள் உடனான சந்திப்பொன்றை நடாத்தினார்.

இதன்போது அவர், சிறீலங்காவில் நடப்பது இனச்சிக்கலே அன்றி, பயங்கரவாதச்சிக்கல் அல்ல; தமது சுயநிர்ணய உரிமையை நிலைநிறுத்துவதற்காக பலவிதமான அர்ப்பணிப்புக்களிற்கு மத்தியில், நடத்திவரும் தூய்மையான போராட்டத்தை சிறீலங்கா அரசு திட்டமிட்டு, பயங்கரவாதச் சிக்கலாக அதை உலகிற்கு காட்டிவருகிறது என்பதை நான் தெளிவுபடுத்தியதாகக் கூறினார்.

"சிறீலங்காவில் நடைபெறும் இனச்சிக்கலுக்கு உடனடித்தீர்வு காணமுடியுமென எண்ணுவது தவறு; நீண்டகாலமாக நடைபெற்றுவரும் இவ்வுரிமைப் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் எத்தனையோ ஈகங்களைச் செய்துள்ளனர். அதனை எளிதாக மறந்துவிட்டு, கண்களை மூடிக்கொண்டு சமாதானத்தைக் கட்டிப் பிடிக்க, தமிழ் மக்கள் தயார் இல்லை. நீண்டகாலச் சிக்கலை நிதானத்தடன் அணுகவேண்டியுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் இந்த ஆயுத விநியோகத்தை நிறுத்துமேயானால், சிறீலங்காவில் நடக்கும் இன அழிவுகளை முடிவுக்குக்கொண்டுவர முடியும்" என தான் வலியுறுத்தியதாகத் தெரிவித்தார். ■

# புத்தாண்டு நாள்...

வரை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா அமைச்சர் ஒருவர், "பேச்சுவார்த்தை நிரந்தர அமைதியை நோக்கி முன்னேறும்" என நம்பிக்கை தெரிவித்துள்ளதாகக் கொழும்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. ■

# பெண்ணினம் சிக்கல்களிலிருந்து...

இந்த நடைமுறையில் புதிய சீர்திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கின்றது. ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்க்கக்கோரி நீதிமன்றத்தில் வழக்கு. தாக்கல் செய்யலாம். இதற்கு யாருடைய அனுமதியையும் வேண்டி நிற்கத் தேவையில்லை. பெண்கள் தங்களுக்கு ஏற்படுகின்ற அநீதிகளைக் கண்டு அனுபவித்து, மனரீதியாகப் பாதிக்கப்படுகின்ற நிலைமையைத் தவிர்த்து தங்கள் பிரச்சினைகளை வெளிக்கொணர வேண்டும். அதற்கு எமது நீதிமன்றங்கள் நியாயமான தீர்ப்புக்களை வழங்கும்.

யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளிற் பல தாபரிப்பு வழக்குகளாக இருக்கின்றன. தாபரிப்பு என்னும்போது போதிய வசதிகள் படைத்த ஒருவன், தனது மனைவியைப் பராமரிக்கத் தவறினால் அல்லது சட்டப்படியான திருமணத்தின் விளைவாகவாயினும் அல்லது வேறுவிதமாகவாயினும் தனக்குப் பிறந்த பிள்ளையைப் பராமரிக்கத் தவறினால், அந்தத் தந்தையிடமிருந்து பராமரிப்புக் கோரும் உரிமை மனைவிக்கு உண்டு. இங்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் பதிவாகியுள்ள வழக்குகள் அனைத்தும் தாபரிப்பு வழக்குகளாகவே இருந்தன. கணவனாற் கைவிடப்பட்ட பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் இங்கு தாபரிப்புத் தொகை தீர்ப்பாக வழங்கப்பட்டது.

அதாவது இங்கு பெண்களைத் திருமணம் செய்து குழந்தைகள் உள்ள நிலையிலும்கூட, குடும்பப் பிணக்குகள் காரணமாகப் பிரிந்து வாழும் குடும்பங்கள் அநேகம். இதில் மனைவி இருக்க வேறொரு பெண்ணைத் திருமணம் செய்து, தமிழீழத்தை தாண்டி வெளியே சென்று குடும்ப வாழ்க்கையில் ஈடுபடும் ஆண்கள் அனேகம். பெண்கள் தொடர்பான வழக்குகளை ஆராய்ந்தபோது, ஒன்று மட்டும் அங்கு தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியவாறு இருந்தது. அதாவது இப்பிரச்சினை மிகவும் அடிமட்ட நிலையிலேயே பரவலாகக் காணக்கூடியதாக இருந்தது. ஆண்களால் ஏமாற்றப்பட்ட பெண்களின் வயதெல்லை கூடுதலாக பதினெட்டு வயதுக்குள்ளேயே காணப்பட்டன. அதாவது இவர்கள் சிறிய வயதுக்காரராகவே காணப்பட்டனர். எமது தமிழீழ தேசவழமைச் சட்டத்தின்படி, பெண்ணுக்கான சிற்றகவை வயது பதினெட்டுக்கு உட்பட்டும் மேற்றகவை வயதாக பதினெட்டுக்கு மேலும், அதேவேளை ஆணுக்கான சிற்றகவை வயது இருபத்தியொன்றுக்கு உட்பட்டும் மேற்றகவை இருபத்தியொன்றுக்கு மேற்பட்டதாகவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

காதலனால் கைவிடப்பட்ட பெண்களின் வழக்குகளில் அநேகமானவை, இந்தச் சிற்றெல்லைக்குள் உட்பட்டதாகவே காணப்பட்டன. இவை வாழ்க்கையின் அடிப்படையான தன்மைகளை அறியாத குறிக்கோளற்ற காதல்களும் அதனால் ஏற்பட்ட முறிவுகளுமாகும். ஆனால் இந்தக் காதல் முறிவுகளில் பாதிக்கப்படுபவள் பெண் என்று அறிந்தும் இத்தகைய பெண்கள் இவற்றில் மூழ்கி அமிழ்ந்து போவது ஆழமாக நோக்கப்பட வேண்டியது. சாதாரணமாக ஏற்படும் பாலினக் கவர்ச்சிகளினால் ஒருவனைப் பற்றியும் தனது எதிர்காலம் பற்றியும் தொலைநோக்கோடு சிந்திக்காத இவர்கள் விடும் தவறுகள், பெண்களையே பாதித்து நிற்கின்றது என்பது முற்றுமுழுதான உண்மை. எமது சமுதாய அமைப்பும் மரபுகளும் பெண்களினது நடத்தைகளையே உற்றுக் கவனித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஏமாற்றப்பட்ட பெண்ணுக்கு நியாயமான தீர்ப்புக்கள் வழங்கி பெண்களை விழிப்புணர்வுக்குத் தூண்டுவதற்குப் பதிலாக காலமெல்லாம் 'தவறிழைத்தவள்' என்ற தண்டனையைக் கொடுத்து விடுகின்றது. ஆண் தவறிழைத்தால் அவனது தவறுகள் சில காலங்களுக்குள் மறைந்து விடும் படியாக, 'இந்தச் சேற்றுக்குள் கால் வைத்து அந்தக் குளத்தில் கழுவி விடும்' தன்மையாக அதிலிருந்து மீட்டு விடுகிறது. ஆனால் இவ்வாறு வாழ்க்கையில் ஏமாற்றப்பட்ட பெண்களோ அவளிடம் தவறு இல்லாவிடத்திலும் கூட, வாழ்நாள் முழுவதும் ஒதுக்கப் பட்டவளாகிறாள். இதனால் எத்தனையோ பெண்கள் வாழ்வில் விரக்தியுற்று பலவிதமான உளவியல் தாக்கங்களை அனுபவிக்கிறார்கள். இவற்றிலிருந்து மீளமுடியாமல் தாங்கொணாத் துன்பங்களுக்கு தம்மை உட்படுத்துவதும், தற்கொலையில் முடிவதும் பரவலாக உள்ளது.

இதில் ஒன்றைப் பெண்கள் புரிந்து கொள்ளவேண்டும், இப்படியான பிரச்சினைகளிலிருந்து விடுபட பெண்கள் தம்மைத் தயார்ப் படுத்தவேண்டும். பெண்ணானவள் இந்தச் சமுதாயத்தின் வளர்ச்சியோடு தன்னை இறுகப்பிணைத்துத் தன்னைப் பலதுறையிலும் முன்னேற்றிக் கொள்ளவேண்டும். ஆழமான வாழ்க்கைக் கல்வி பெண்களுக்கு அவசியம். திருமணமே வாழ்க்கை என்ற நிலையை விட்டு வாழ்க்கையின் ஒரு அங்கமாக திருமணம், குடும்ப உறவுகளை வரையறுத்துக்கொண்டு குறிக்கோளோடு வாழவேண்டும். வாழ்வில் இலட்சியங்களையும், நோக்கங்களையும் வகுத்துக் கொண்டு அவற்றின் முன்னேற்றத்தில் அயராது உழைக்கவேண்டும்.

எல்லாவற்றிலும் மேலாக இனி வரும் சமுதாயத்தில் பெண் குழந்தைகளை, தன்னம்பிக்கை உடையவர்களாக சுயமான சிந்தனையாற்றல் உள்ளவர்களாக எப்பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்கின்ற தன்மையுடையவர்களாக பெற்றோர்கள் வளர்த்தெடுக்க முனைதல் அவசியமாகிறது. ■

# ஆறு பேர் கொண்ட...

பிரபாகரனும், மகேந்திரராசாவும் சோடி சேர்ந்து எடுத்த 30 ஓட்டங்கள் குறிப்பிடத்தக்கவை.

இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் முதலில் யாழ். பல்கலைக்கழக அணியினர் துடுப்பெடுத்தாடி 2/51 என ஓட்டங்களைப் பெற்றனர். ராஜிபத்மநாதன் கூடுதல் ஓட்டங்களாக 22 ஓட்டங்கள் பெற்றார். சசிகரன் மூன்று ஓட்டங்களுக்கு இரண்டு இலக்குகளைச் சிறப்பாகக் கைப்பற்றினார். பதிலளித்த KCCC திறமையாக ஆடும் என எதிர்பார்க்கப்பட்டபோதும், 42 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தனர். நவீந்திரனும், சுதாகரனும் 23, 16 என்ற ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சுதேசன், சிறீதரன் தலா இரண்டு இலக்குகளைப் பெற்றனர்.

மூன்றாவது இடத்துக்கான ஆட்டம் பற்றீசியன் -KCCC அணிகளுக்கிடையில் நடைபெற்றன. சிறப்பாக இங்கு குறிப்பிடத்தக்கது, நவீந்திரன் ஆட்டமிழக்காமல் பெற்ற 53 ஓட்டங்களாகும். இவர் தன் எண்ணிக்கைக்கு 5 ஆறுகள், 5 நான்குகள் பெற்றுக் கொண்டார். இதுவே தனிநபர் அதிகூடிய ஓட்டமுமாகும்.

KCCC அணியினர் இலக்கு இழப்பின்றி 77 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இவர்களுக்குப் பதிலளித்த பற்றீசியன் அணியினரால் இவ்வெண்ணிக்கையை எட்டிப் பிடிக்க இயலவில்லை. இலக்கு இழப்பின்றி 52 ஓட்டங்களை மட்டுமே பற்றீசியன் அணியால் பெற்றுக் கொள்ள முடிந்தது.

இறுதியாட்டம் எதிர்பார்த்த அளவு சோபிக்காமல் ஒருபக்கச் சார்பாக அமைந்துவிட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய செயலக அணியினர் 3/75 என்று பாதுகாப்பான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுகொண்டனர். இவ்வாட்டத்தில் கிருபாகரன் ஆட்டம் மிகச்சிறப்பானது. இவர் பெற்ற 49 ஓட்டங்களில் 3 ஆறுகளும், 7 நான்குகளும் அடங்கும். பதிலளித்த பல்கலைக்கழகம் 1/44 என்பதற்கு அப்பால் போக இயலவில்லை. அந்த ஒரு இலக்கை விவேகானந்தனை வீழ்த்தியதன் மூலம், பிரபாகரன் பெற்றுக் கொண்டார். இச்சுற்றுப் போட்டியின் ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதை இங்கு குறிப்பிட வேண்டும். யாருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் குறிப்பிட்ட நேர அட்டவணையைச் சிறப்பாகக் கடைப்பிடித்திருந்தனர். ■

நன்றி: 'ஈழநாதம்'

# ஐரோப்பிய பாராளுமன்றம் விடுதலைப் புலிகளிடமும் கோரிக்கை

ஐரோப்பிய பாராளுமன்றம் கடந்த கார்த்திகை மாதம் இருபத்தைந்தில் சிறீலங்கா அரசிடமும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் சமாதானத்தை முன்னெடுக்கும் படி கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைத்தீவில் நடைபெறக் கூடிய சமாதான முயற்சிகளுக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ள ஐரோப்பிய பாராளுமன்றம், தனது வேண்டுகோளில் சிறீலங்காவையும், விடுதலைப் புலிகளையும் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பங்காளர்களாக (Parties in the conflict) வெளிப் படுத்தியுள்ளது. இதன் மூலம் தமிழீழ மக்கள் ஒரு நாட்டினம் (Nation) என்கிற உரிமையும் அனைத்துலக ரீதியாகவும் உறுதியாகி வருவது தெளிவாகிறது. ■

# மகன்...

குடுத்தன், வாங்கிக் குடிச்சான்.

"நான் ஒரு முக்கியமான வேலையா வேற ஒரு இடத்திற்குப் போறன் பெரியம்மா" என்றான்.

வருத்தம் என்று சொல்லுறாயடா தம்பி... தலைவரிட்ட சொல்லிப் போட்டு, நில்லன்... இன்னொருதரம் போகலாம்தானே எண்டு ஆலோசனை சொன்னேன்.

"இல்லைப் பெரியம்மா! அந்த வேலைக்குப் போகப்போறன் எண்டு நானாத்தான் அவரிட்டைக் கேட்டனான்... கட்டாயம் நான்தான் அந்த வேலைக்குப் போகணும்..." என்றான்.

சரி தம்பி சுகமாய்ப்போய் சுகமாய் திரும்பிவா எண்டு நான் சொல்ல -அவன் திருப்பிச் சொன்னான்.

"சுகமாய் போவன் பெரியம்மா... அதில பிரச்சினையில்ல... ஆனா... திரும்பி வாறதென்கிறதான்.... சரிபாப்பம்... எண்டான்".

அதற்குமேல் பெரியம்மாவால் பேசமுடியவில்லை. மறுபக்கம் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டார். ■

# நினைவிலே...

"ஓ அப்பிடியோ... அப்ப சைக்கிளுக்கு தமிழ் என்ன ஐயா"

"ஈருருளி" என்றார் அவர்.

இதேமாதிரி எந்த எரிபொருட் செலவும் இல்லாமல் மனித சக்தியில் மட்டும் இயங்கக் கூடிய தான, பறக்கும் வாகனம் ஒன்றும் ஆராவது கண்டு பிடித்தால் எப்படியிருக்கும்? ■

நன்றி: 'வெளிச்சம்'

# தென்னாசிய அரசியலில் அனுதாப அலை

## சிறிமாவோ பண்டாரநாயக்கா முதல் சிறிமா திசாநாயக்கா வரை

அனுதாப அலை இன்று அரசியலில் அதிகம் பிரயோகிக்கப்படும் ஒரு வார்த்தை. நேர்மையான அரசியலானது கொள்கை, தெளிவு என்பவை மறைந்து, வெறுமனே உணர்ச்சியைக்காட்டி வாக்குச் சேகரிக்கும் ஒரு வித்தையாக இது இன்று வளர்ந்துள்ளது.



சிறிமாவோ பண்டாரநாயக்கா

முதன்மையாக, தென்னாசியாவில் இவ்வார்த்தைக்கு பெறுமதி மிக அதிகமாகவே காணப்படுகின்றது. இலங்கையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அனுதாப ஆதரவின்மூலம் வெற்றிபெற்ற, முதலாவது அரசியல்வாதியாகிறார். அன்று அவருக்கு கிடைத்த வெற்றி, சிறிமாவோவின் தனிப்பட்ட அரசியல் கொள்கைப் பிடிப்புக்காகவோ அல்லது அவர் சார்ந்த கட்சியின் புதுமையான சாதனைகளுக்காகவோ கிடைக்கப்பெற்றதல்ல. அவரது கணவரான எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் இறப்பு அன்று சிறீலங்காவை வெகுவாகப் பாதித்திருந்தது. இந்தநிலையில், சிறிமாவோவின்பாலேற்பட்ட மக்களின் அனுதாப நோக்கே அவருக்கு வெற்றியைத் தந்தது.

இரண்டாவது அனுதாப ஆதரவு பெற்ற அரசியல்வாதிகளாக பாகிஸ்தானின் பாத்திமா ஜின்னா, நுஸ்ரத் பூட்டோ, பெனாசீர் பூட்டோ என்றவாறு கணவன், தந்தை ஆகியோரின் இழப்புக்களின்பின், அரசியலுக்கு வந்தவர்கள் குறிப்பிடப்படுவர். இவர்களின் அரசியல் பிரவேசம், முற்றிலும் அனுதாப ஆதரவை நம்பியே இருந்தது. பாகிஸ்தானை உருவாக்கிய முகமதலி ஜின்னா, ஏற்படுத்திப் போயிருந்த அரசியல் செல்வாக்கு பாத்திமா ஜின்னாவை அரசியலுக்குள் நுழைத்தது. ஆனாலும் இஸ்லாமிய அடிப்ப



சேக் கசினா வஜீட்

டைவாதத்தின் பேரிலான பெண்களின்நிலை, அவரை ஒரு வெற்றிகரமான அரசியல்வாதியாக மாற்றவில்லை. சுல்பிகார் அலிபூட்டோ, ஜெனரல் சியா உல் கக்கினால் தூக்கிலிடப்பட்டபோது, அவரின்பால் பாகிஸ்தான் மக்களும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் கொண்டிருந்த பற்று, அவரது மனைவியான நுஸ்ரத் பூட்டோவையும் மகளான பெனாசீர் பூட்டோவையும் பாகிஸ்தான் அரசியலில் நுழையவைத்தது. ஆனால் பாத்திமா ஜின்னாவுக்கு ஏற்பட்டநிலை, இவர்களுக்கு ஏற்படவில்லை. ஏனெனில் பெனாசீர் தனியே தந்தையின் பெயரைமட்டும் பயன்படுத்தி ஆதரவைப் பெறாமல், தனது அரசியல் செயற்பாடுகளின் மூலமும் பிரபலமாகி, இன்று பாகிஸ்தானின் பிரதமராக விளங்குகின்றார்.

இதேநிலை இன்னொரு தென்னாசிய இஸ்லாமிய நாடான பங்களாதேசிலும் ஏற்பட்டது. பங்களாதேசின் நிறுவனரும் அதன் முதலாவது பிரதமருமான முஜிபுர் ரகுமானின் மகளான சேக் கசினா வஜீட் அரசியலில் நுழைந்து, தனித்து ஒரு கட்சியின் தலைவியாக உயர்ந்துள்ளதை எடுத்துக்கொண்டாலென்ன, பங்களாதேசின் முன்னாள் ஜனாதிபதியான சியா உர் ரகுமானின் விதவை மனைவியான பேகம் காலிதா சியா இன்று பிரதமராக வந்துள்ளதைக் கருதினாலென்ன, தங்க



சோனியா காந்தி

ளுக்கு நெருங்கியவர்களின் இறப்புக்களினால் ஏற்பட்ட அனுதாப ஆதரவே இவர்களையும் அரசியல்வாதிகளாக இனங்காட்டியுள்ளது. ஒரு கருத்தில் பங்களாதேசையும் பாகிஸ்தானையும் நோக்கும்போது, மத அடிப்படைவாதம் அனுதாப ஆதரவிற்கு பணிந்துகொண்ட நிலையையும் அங்கு காணமுடிவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தியாவில் இந்திராகாந்தி உச்சநிலையிலிருந்தபோது, விமானவிபத்தில் கொல்லப்பட்ட அவருடைய மகன் சஞ்சய் காந்தியின் இறப்பு, சஞ்சயின் மனைவியான பஞ்சாபிப் பெண்ணான மேனகா காந்தியை அரசியலுக்கு கொண்டுவந்தது. காலப்போக்கில் தனது மாமியாரான இந்திரா காந்தியையே எதிர்த்து, சஞ்சயின் அனுதாப ஆதரவை நம்பி, தனியே 'சஞ்சய்விகார் மஞ்ச்' என்ற கட்சியைத் தொடக்கும் அளவுக்கு மேனகா காந்தி துணிந்தமையும் கவனிக்கத்தக்கது. முதன்மையாக காங்கிரசின் இளைஞர் அணியை சஞ்சயின் பெயரைச் சொல்லியே தனது பக்கம் இழுக்கமுற்பட்ட மேனகாவின் அரசியல் துணிவு வியக்கத்தக்கது.

இந்திரா காந்தியின் இறப்புக்குப் பின்பு, ராஜீவ் காந்தி பிரதமராகத் தெரிவாகிய விடயமும், அன்று இரண்டாவது நிலையிலிருந்த நரசிம்மராவ் போன்றோரைவிட, இந்திராவின் இறப்பினால் உண்டான அனுதாப அலை, பரவி வியாபித்திருந்ததைக் காட்டுகின்றது. இந்திராவின் மகன் என்ற முத்திரை குத்தப்பட்டவராக, ஒரு விமான ஓட்டி பிரதமராக உருவாகியதற்கு பின்புலக் காரணமானதும் ஓர் இறப்பே என்பதில் தவறு



பெனாசீர் பூட்டோ

இருப்பதாகத் தெரியவில்லை. இதேநிலை ராஜீவின் இறப்புக்குப் பின்னும் தொடர்ந்தது - சோனியா காந்தியை முன்னிறுத்தி, அதன்மூலம் ராஜீவினதும் காங்கிரசினதும் வாக்கு வைப்பகத்தை (வங்கி) சிதையாமல் காப்பாற்றுவதோடு, அதற்கும் கூடுதலாக அனுதாப வாக்குகளைப்பெறத் திட்டமிடப்பட்டது -

சோனியா அந்த நிலையில் அரசியலுக்குள் நுழைய விரும்பாத காரணத்தினால் மட்டுமே, நரசிம்மராவ் பிரதமராக முடிந்தது.



சிறீமானி அத்துலத் முதலி

சோனியா அன்று ராஜீவின் இறப்பின் பின்னர், அவருக்கிருந்த அனுதாப ஆதரவைக்காட்டி பிரதமராயிருக்க முடியும் என்பதை அரசியல் அவதானிகள் இன்னும் சுட்டிக்காட்டுகின்றனர். இன்று சோனியா அரசியலுக்குள் நுழைவதற்கு வேறு பல காரணங்கள் கூறப்பட்டாலும் ராஜீவின் பெயரிலிருக்கும் அனுதாபம்



பேகம் காலிதா சியா

என்ற அடிப்படையிலேயே சோனியாவின் அரசியல் கட்டியெழுப்பப்படுவதும் குறிப்பிடத்தக்கது. அண்மையில் நடைபெற்று முடிந்த நான்கு இந்திய மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தலில், இந்திரா காங்கிரஸ் கட்சி பெற்ற படுதோல்வியைத் தொடர்ந்து, பிரதமர் நரசிம்மராவை பதவியிலிருந்து விலக்கிவிட்டு, ராஜீவின் அனுதாப அலையுடன் இன்றும் நோக்கப்பட்டுவரும் சோனியா காந்தியை, கட்சியின் தலைமைப்பீடத்திற்கு கொண்டுவந்து பிரதமராக்க ஒருசாரார் முயற்சித்துவருவதும் இன்றைய இந்திய அரசியலின் முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

இலங்கையில் சிறிமா பண்டாரநாயக்காவின் பாதையில், அவரது மகள் சந்திரிகா குமாரதுங்காவும் அரசியலில் நுழைந்தார். சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரதுங்காவுக்கு இருந்த நட்சத்திரக் கவர்ச்சியும் -கீழ் மட்ட மக்களின் பேராதரவும் - 'அரசியல் நாகரிகம் கொண்ட போக்கும் சந்திரிகா அரசியலுக்குள் நுழைவதை ஊக்கவித்தன. ஆனால் கணவரது இறப்பின் மூலமான அனுதாப ஆதரவை மட்டுமே தளமாகக்கொண்டு, சந்திரிகா அரசியலுக்குள் நுழையவில்லை என்பது,



சந்திரிகா விஜயகுமாரதுங்க

அவரை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக்காட்டுகின்றது. ஏனெனில் விஜயகுமாரதுங்காவின் அரசியல் செயற்பாடுகளுக்கும் அவரது தனிப்பட்ட அரசியல் தோற்றப்பாட்டிற்கும் சந்திரிகாவின் வலுவான ஆதரவு முன்பிருந்தே இருந்துவந்துள்ளது. அரசியலில் பட்டும்படாமலும் இருந்த சந்திரிகாவை, விஜயகுமாரதுங்காவின் இறப்பே முழுமையான அரசியலில் அவரை ஈடுபடவைத்தது வெளிப்படையானது. இந்தவகையில் சந்திரிகா பெற்றுவரும் வெற்றிகளிலும் அவரது அரசியல் தளத்திலும் விஜயகுமாரதுங்காவினது இறப்பின் மூலமான அனுதாப ஆதரவே, குறிப்பிடத்தக்க இடத்தைப்பெறுவது ஐயத்திற்கு அப்பாற்பட்டது.

இதேபோல் ஓர் ஏழல் (வாரம்) இடைவெளியில் அரசியலுக்குள் அனுதாபத்தின் வாயிலாக நுழைந்தவர்களாக சிறீமானி அத்துலத் முதலியும் கேமா பிரேமதாசாவும் குறிப்பிடப்படுகின்றனர்.. இவர்களில் சிறீமானி தகுந்த பாதையைத் தேர்ந்தெடுத்தாலும், லலித்தின் உறுதியான வாக்கு வைப்பகம் (வங்கி) ஒன்று அவருக்கு பக்கவலுவாக இருந்தமையும், சிறீமானியை இன்று குறிப்பிடத்தக்க அரசியல் வாதியாக்கியுள்ளது. அந்த நிலையில் கேமா பிரேமதாசாவின் அரசியல் நுழைவு வெறுமனே கேலிக்கூத்தாகப் போயிருக்கின்றது. பிரேமதாசாவுக்கு இருந்த ஆதரவைத் தகுந்தவகையில் அனுதாப அலையாக அவரால் திரட்ட முடியாமல் போனது. இதற்குப் பல காரணங்கள் இன்று கூறப்படுகின்றன. பிரேமதாசாவின் அரசியல் பின்னணி, கட்சிக்குள் இருந்த வேறு தலைமை தாங்கக்கூடிய சக்திகள் என்பவை அவற்றுள் சிலவாகும். இதனால் கேமாவின் அரசியல் நுழைவு பெரிதாகத் தோற்றம்பெறவில்லை.



கேமா பிரேமதாசா

அடிக்கடி தனது நிச்சயமற்ற போக்கை அவர் வெளிக்காட்டியவிதம், அவர் தனது நிலையைத் தானே தாழ்த்திக்கொண்டதை உணர்த்தியது. இருப்பினும் தனது கணவரின் அனுதாப அரசியல் அலையைப் பயன்படுத்தி, ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஓர் முக்கிய இடத்தைப் பெறுவதற்கு கேமா பிரேமதாசா தொடர்ந்தும் முயற்சித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இறுதியாக யாரும் எதிர்பார்க்காததும் -ஏன் சிறிமா திசாநாயக்காவே எதிர்பார்த்திருக்க முடியாதவகையிலும் காமினி திசாநாயக்காவின் இறப்பு அவருக்கு ஜனாதிபதி வேட்பாளர் என்ற நிலையைத் தந்தது. காமினியின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, இறுதி அம்பாக அவரது

**தமிழீழத்திலிருந்து ரகுராம்**

மனைவியை ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறக்கியது ஐக்கிய தேசியக் கட்சி. இதன் நோக்கம் அப்பட்டமான அனுதாப ஆதரவினை இயலுமான வகையில் பெறமுயலுவதைத் தவிர, வேறு வகையினதாக இருந்திருக்கமுடியாது.

எப்படியிருப்பினும் இலங்கையில் தொடங்கி இந்தியா, பங்களாதேஸ், பாகிஸ்தான் என தென்



சிறிமா திசாநாயக்கா

னாசியாவில் பரவிய இத்தேர்தல் உத்தி, சிறிலங்காவில் மீண்டும் ஒருமுறை ஐக்கிய தேசியக் கட்சியால் ஆய்வுசெய்யப்பட்டு, தோல்விகண்டமை இங்கே குறிப்பிடத்தக்கது. ■

## சிறு கதை

**ஈழநாதம் வன்னிப்பதிப்பு முதலாமாண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் மூன்றாவது பரிசுபெற்ற சிறுகதை**




வழமைக்கு மாறாக வீடு கலகலப்பாக இருந்தது. இரண்டு அறைகொண்ட அந்த சிறிய வீடும் முன்னே அமைந்த பெரிய தலைவாசலும் வெள்ளையடித்து இரண்டு நாட்கள்தான். பார்க்க அழகாகத்தான் இருந்தது.

"தம்பி அனுப்பின காசிலை வீட்டைக் கட்டியிருக்கலாம். அதுக்கிள்ளை இந்த கோதாரியிலபோற பிரச்சினை வந்திட்டுது". அம்மா தினமும் புலம்புகிற வார்த்தைகள்தான்.

அவவிற்கு வெளிநாட்டுக் காசு வந்ததும் மற்றவைபோல வீடு இல்லையே என்று ஒரே ஆதங்கம். ஆனால் பூரணிக்கு 38 வருடங்களாகப் பழகிப்போன இந்த நீண்ட தலைவாசலும் அதன் அகன்ற குந்தும் அவளுக்கு ஏதோ அனுபவங்களையும் ஆதரவையும் கொடுப்பவையாகவே இருந்தன. சோகங்களும் சுமைகளும் அவளை அழுத்தினாலும் நிலவின் தனிமையில் இந்தக் குந்தில் அமரும்போது ஏதோ ஒரு சுகம் அவளைத் தொட்டுச்செல்லும் -

சீக்காளியான அம்மா, சிடுசிடுக்கும் தந்தை, தன்குடும்பத்தோடு ஒதுங்கிக்கொண்ட அக்கா, திருமணமாகிவிட்ட இரண்டு தங்கைகள், தாட்சணியம்மிக்க தம்பி, ஓ/எல் இரண்டுதடவை தாண்டிவிட்ட குட்டியன் அனைவரினதும் சுமைதாங்கி பூரணிதான். இருபத்திநான்கு வயதில் ஆசிரியையானபோது, சந்தோசத்தில் பட்டுப்பூச்சியாய்ப் பறந்தாள் - குடும்பத்தின் வறுமை தீர்ந்துவிட்டது என்ற துடிப்பில்.

ஆனால் சுமையைத் தூக்கிநின்ற சுமைதாங்கிக் கல் என்பது அப்பொழுது புரியவில்லை.

"பிள்ளை பூரணி, கனகம் அக்கா சொல்லுறா இந்தப் பச்சைச்சீலை வேண்டாமாம்; சிவப்பை உடுத்தட்டாம். அம்மா சுறுசுறுப்பாகவே இயங்கினாள். பூரணிக்கு சிரிப்பாக வந்தது. கொஞ்சம் முதல் கனகம் அக்காவும் செல்லம் அக்காவும் கிசுகிசுத்தது அவள் காதில் ஈட்டியாகப் பாய்ந்தது.

"மெய்ய செல்லம் உவள் பெடிச்சிக்கு முப்பத்தைஞ்சிக்குமேல வரும் என்ன?"

"பின்னை என்ன, எங்கட பெடியன் பிறக்கேக்கே உவள் நடக்கிறாள். இப்ப அவன்டை பெட்டையள் இரண்டும் குமராயிட்டு".

"ஏன் உவளின்ரை தங்கைமாருக்கே நாலைஞ்சு வயதுப்பெடியள் இருக்கு".

"உந்தக் கலியாணம் ஐஞ்சு வரியத்துக்கு முந்தி வந்ததுதானே".

"அதுதான் விதி; பின்னை ஏன் இழுபடுது".

ஒரு நல்லநாளில்கூட அவள் மனது பாரமாக இறுகியது. அவர்கள் கூறியது போல அவள் வாழ்க்கைக்கு காரணம் விதியா? விதி... யா? விதி... யா? இல்லவே இல்லை. சீதனம் என்னும் பேய்தான் இந்தப் பெண்ணின் வாழ்க்கையே மாற்றி, விதி என்னும் போர்வையால் போர்த்திவிடுகின்றது.

"அக்கா நான் கொண்டை போட்டுவிடுறன்". தயங்கியபடி உள்ளே வந்தாள் சாந்தி.

"அ...ம்...மா" சிணுங்கியபடி அவள் இரண்டு வயதுக் குழந்தை சட்டையை இழுத்தது.

"வேண்டாம் சாந்தி நான் போடுவன் தானே; நீ இவனைத் தூக்கு" மறுத்தாள்.

"ஏன்...னக்...கா" அவள் தயக்கம் கண்களில் தெரிந்தது. சாந்தி மிகவும் அன்பான தங்கை. அவளின் கல்யாண நாள் நேற்றுப்போல இருக்கிறது.

"அக்கா நீங்கள் என்ன சொன்னாலும் நான் கட்டமாட்டன். நீங்கள் கட்டினபிறகுதான் எனக்கு கலியாணம். எனக்கென்ன இருபது வயதுதானே; நான் வேலை பார்க்கவேண்டும்".

"சாந்தியம்மா கடைசிலை ஒருதருமே வாழாமல் இருக்கவேண்டிவருமம்மா".

"அதுக்காக நீங்கள் எவ்வளவு நாள் கஸ்டப்படுவியள்".

"பார் சாந்தியம்மா தோட்டக்காணியோடை கொஞ்சக்காசு எண்டுதானே கேக்கினம். இப்ப எவ்வளவு சீதனம் வெளியிலை கேக்கிறான்கள்".

"ஓம் பிள்ளை அக்கா சொல்லுறதைக் கேளன்". அம்மாவிற்கு ஏதோ நடந்தால் சரிதான்.

பூரணிக்கோ ஒவ்வொரு சுமையாக இறங்கவேண்டும் என்ற துடிப்பு. ஆனால் சீதனக்காசை அவள் பிரட்டப்பட்டபாடு. அப்பொழுதான், எல்லா நகையையும் அடகுவைத்து, தம்பியை வெளிநாடு அனுப்பியிருந்தாள். உடனே சாந்தியின் திருமணம் கைகூடிவிட்டது. சாந்தியின் கூற்றில் இருந்த நியாயம் அவளுக்குப் புரியாமல் இல்லை. அவளுக்கு வயது இருபதுதான். ஆனால் யதார்த்தமாகப் பார்த்தால், இன்னுமொரு திருமணம் கைகூட எவ்வளவு நாள் ஆகுமோ.

> **"உந்த சீதனக் கொடுமை இல்லாட்டி ஏன் நரை தட்டும் மட்டும் கிடக்குதுகள் என்ன... விதியே?"**

பூரணி விதியை நம்பவில்லை. ஆனால் வழிகள் எல்லாம் அடைக்கப்பட்டுவிட்டன. தம்பி உழைக்க இரண்டு வருடமாவது எடுக்கும்; அதற்குள் வட்டி தலைக்குமேல் ஏறிவிடும்.

கொஞ்சம் வசதியான அக்காவும் மூத்த தங்கையும்கூடக் கையை விரித்துவிட்டார்கள். ஆனால் பூரணி களைக்கவில்லை. எப்படியோ திருமணம் நடந்து முடியவும் அவள் கடன்சுமை தாங்காமல் தள்ளாடவும் சரியாக இருந்தது.

"பிள்ளை கெதிப்பண்ணு"; வெளியில் மும்மரமாக ஓடினார்கள்.

"மாப்பிள்ளை வீட்டுக்காரர் கொஞ்சப்பேர் வருகினம்".

"போட்டோக்காரன் வந்திட்டானே".

"தம்பின்ர தலைப்பா எங்கை?"

நேரம் நெருங்க, நெருங்க எல்லோரும் அவசரப்பட்டார்கள்.

தலைவாசல் மூலையில், 'ரேப்' மங்கள வாத்தியம் இசைத்தது. 'ஜெனரேட்டர்'- அதை மிஞ்சி ஒலித்தது.

பூரணிக்கு இவை எதுவுமே பாதிப்பை ஏற்படுத்தவில்லை; அவள் மனமும் சிலிர்க்கவில்லை.

கண்ணாடியில் அவளைப் பார்த்தாள்; நடுவகிடு பிரித்தாள்.

> **"இஞ்சை அண்டைக்கு ஒரு லட்சம் எண்டு போனவரை, இண்டைக்கு மூண்டு லட்சம் குடுத்து தம்பிக்காரன் வாங்கிட்டான் பார்த்தியளே"**

'ஓ உச்சியில் அத்தனையும் நரைமயிர்!' ஒருகணம் ஸ்தம்பித்துப் போனாள். இத்தனை நாளும் ஏன் இது தெரியவில்லையோ; சுமையின் அழுத்தத்தில் இதைக் கவனிக்கவில்லையோ? அவசர அவசரமாக மேவி இழுத்து முடிந்தாள்; ஒருபக்கம் தலையைச் சாய்த்தாள்.

'கடவுளே காதோரம் யாவும் நரைத்துவிட்டது!'

'ஒரு இல்லறவாசி காதோரம் நரை விழுந்ததும் தன்னைத் துறவறத்திற்கு தயார்செய்கின்றான்' என்றோ ஒரு பேராசிரியர் கூறிய கருத்து மனதில் ஒலித்தது மட்டுமல்ல, வலியையும் கொடுத்தது.

துறவுநிலைக்குத் தயாராகவேண்டியவள் இல்லறத்திற்கு தயாராகின்றாளா? சீதனம் அவளைப் பார்த்துக் கைகொட்டி நகைத்தது; 'பெண்ணே இது உன் விதி என்று'.

'இல்லை... இல்...லை... இ...ல்...லை' இது விதியில்லை? மனம் ஓலமிட்டது. நினைவு சட்டென விரிந்தது. கருங்கூந்தல் காற்றில் பறக்க, மூன்று மைல் தொலைவிலுள்ள பாடசாலைக்கு சைக்கிளில் பறந்தாள் பூரணி.

'மூன்று மைல்; ஏழுநிமிடம் இருக்கிறது'. எட்டி மிதித்தாள். இரண்டு நிமிடத்தின் பின், சில்லுக்குள் சேலை மாட்டிக்கொண்டது. 87 இல் ஆமி நுழைந்தபின், வனாந்தரமாக்கப்பட்ட வீதி. கடைகளோ மனித சஞ்சாரமோ இல்லாமல், வெறிச்சோடிக் கிடந்தது.

"என்ன ரீச்சர்? நடு றோட்டிலை, சீலை சரியோ". குரல்கேட்டு நிமிர்ந்தாள்.

"கொஞ்சம் அப்படியே நில்லுங்கோ; சில்லைக் கழட்டவேணும்".

"ஐயோ இழுத்து, அறுங்கோ. நேரம் போட்டுது; ஆரும் வந்தாலும்" மனம் படபடத்தது.

'அப்ப நிறைய சேலை வைச்சிருக்கிறியள் போல'. முறுவலுடன் தொழிற்பட்டான் வினாயகம்.

பத்து நிமிடத்தில் சேலை விடுதலைபெற்றது. நன்றி சொல்ல நினைத்தாள்; நா எழவில்லை. மனம் சிலிர்த்துக்கொண்டது. சைக்கிளை வேகமாக மிதித்தாள்.

"ரீச்சர் நேற்று எவ்வளவு கஸ்டப்பட்டன்; ஒரு தாங்ஸ் சொல்லாமல் போட்டியள்".

மறுநாளும் அதே இடம். பதில் வராமல் முறுவலித்தான்; மனம் படபடவென அடித்தது. அன்று தொடங்கிய நட்பு இவ்வாறு நீண்டுசென்றது.

"உங்களுக்கு நிறைய சம்பளம்போலை; அதுதான் சீலைகளைக் கிழிக்கிறியள்"; "இல்...லை".

"எண்டாலும் உத்தியோகம் எண்டா பெருமைதானே".

"ஏன் அப்படி நினைக்கிறியள்? உழைக்கிறவன் எல்லாரும் மனிதனே? மனிசன் வாழ, பணமும் குணமும் இருந்தால் சரிதான்".

"அப்ப பணம் என்னட்டை இருக்கு; குணம் உங்களிட்டை இருக்கு. நாங்களும் வாழலாம்தானே".

அவள் சட்டென நிமிர்ந்தாள். அவன் கண்கள் பளபளத்தன. அதன்பின் அவர்கள் உறவு நாலுபேரைக் கவரும் அளவிற்கு வளர்ந்தது. அதன்பின்தான் அப்படியும் நடந்தது.

ஒருநாள் மாலை அவள் களைத்து வீடு திரும்பியபொழுது,

"பூரணி வினாயகம் வீட்டாலை குறிப்பு வந்திருக்கு" -அம்மா.

"நல்ல 'பொருத்தம்'".

"அவையள் நிறையக் கேக்கினம்போல"; திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"வீடு வேணுமாம்; அதோடை காசு ஒண்டுவரை கேக்கினம்". அம்மாவின் இயலாமை குரலில் தெரிந்தது

"பணம் என்னுடையது; குணம் உங்களிட்டை இருக்கு". நினைவில் அதிர, மனதில் வலி எடுத்தது.

"வீடும் வயல் காணியும் எண்டம்" மீண்டும் அம்மா.

"அவற்றை தேப்பன் காசு கட்டாயம் எண்டு நிக்கிறார்".

"பேசாமல் விடுங்கோ; எங்களிட்டை என்ன கிடக்கு குடுக்க; வீட்டைப் பாருங்கோ இன்னும் மேயேலை மழை வரப்போகுது".

"..." மௌனம் இப்போது அம்மாவின் முறை.

வினாயகம் - அப்பா ஒரு மாதிரி எண்டு சொன்னவர்தானே. அவரிட்டைச் சொல்லிக் கதைக்கவேணும் எனமனதில் நினைத்தாள். ஆனால் மறுநாள் அவன் அவளைக்கண்டு, மறுபுறம் திரும்பியதும் துணுக்குற்றாள்.

"ஏன் பேசாமல் போறியள்?" பூரணி.

"அப்பா ஒரு லட்சம் வேணும் எண்டாராம்".

"அவர் அப்படித்தான் சொல்லுறார்".

"அவர்தானே சொல்லுறார்; நான் நீங்களுமா எண்டுபயங்..."

அவள் முடிக்கவில்லை.

"நான் என்ன ரீச்சர் அவரை எதிர்க்கேலுமே" ரீச்சர் -பூரணியாகி, பூரணி நீயாகிவிட்ட அவர்கள் உறவு, அவன் ரீச்சர் என்றதும் அவள் சுக்குநூறாக உடைந்து போனாள்.

தமிழீழத்திலிருந்து
எஸ். எஸ். வதனி

அதுமட்டுமல்ல, அந்த உறவும் உடைந்துவிட்டது என்ற உணர்வே தோன்றியது.

அ...ப்...ப நீ...ங்...க..ள்,

"இதிலை நான் எந்த முடிவும் எடுக்கேலாது". தீர்மானமாக வந்தது பதில். சைக்கிள் வேகமாகப் பறந்தது. அதன் பின்தான்,

"வினாயகம் வெளிநாடு போட்டானாம்".

"வினாயகத்திற்கு பேச்சுக்கள் நடக்குதாம்".

"பொம்பிளை அனுப்புகினமாம்".

காலத்துக்குக் காலம் வந்த செய்திகள், அவளை உடைத்துத்தள்ளியது உண்மைதான்.

"வினாயகத்திற்கு அனுப்பின பெட்டை இடையிலை ஆரோடையோ மாறீட்டாம்".

காலம் எப்படி ஓடுகிறது. இன்று அதே வினாயகத்திற்கும் அவளுக்கும் திருமணம்.

அவள் நினைவுச்சங்கிலியை வெளியில் இருந்தவர்கள் உடைத்தார்கள்.

"இஞ்சை அண்டைக்கு ஒரு லட்சம் இல்லை எண்டுபோனவரை, இண்டைக்கு மூண்டு லட்சம் குடுத்து, தம்பிக்காரன் வாங்கீட்டான் பார்த்தியளே".

"அதோடை இந்த வீடும் நகையுமாம்".

"வீடு திருத்த ஒரு லட்சம் புறிம்பாயாம்".

"விதி ஆரைத்தான்விட்டது; அவன்தான் எண்டால் அவன்தான்".

"மாப்பிள்ளை கலியாணம் சின்னதாய் இருக்கட்டும் எண்டாராம்".

"ஏன் அவசரப்படுகினம் தெரியுமே? பெடியள், சீதனம் வாங்கக்கூடாது

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்...

### ஆறு பேர் கொண்ட துடுப்பெடுத்தாட்டப் போட்டி

# யாழ். செயலக துடுப்பெடுத்தாட்ட அணி வெற்றிக்கிண்ணத்தை தட்டிச் சென்றது

சிறந்த துடுப்பாட்ட வீரர் கிருபாகரன் (செயலகம்)
சிறந்த சகலதுறை வீரர் சுதேசன் (பல்கலைக்கழகம்)
சிறந்த பந்து வீச்சாளர் பிரபாகரன் (செயலகம்)
சிறந்த பந்துத் தடுப்பாளர் மகேந்திரராசா (செயலகம்)
இறுதியாட்ட நாயகன் – கிருபாகரன் (செயலகம்)
"93 சுற்றுப் போட்டியில் 57 ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல் பெற்றதற்கான சிறப்பு விருது – ஆகாஷ் (சென்றலைட்ஸ் புளூஸ்) (இதுவே இச்சுற்றுப் போட்டியின் அதிகூடிய தனிநபர் எண்ணிக்கையாகும்.

அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் 5 பந்துப் பரிமாற்ற சுற்றுப் போட்டியொன்று (6 A side) நடந்தேறியது. இதனை ஒழுங்குபடுத்தியிருந்தவர்கள் யாழ். மிட் ரவுண் (MID -TOWN) றோட்டரிக் கழகத்தினர் ஆவர். ரசிகர்கள் எதிர்பார்த்ததுபோலவே ஆட்டங்கள் அநேகமானவை பரபரப்பாகவே நடந்தேறின. மொத்தம் 13 கழகங்கள் கலந்துகொண்ட இச்சுற்றுப்போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை இரண்டாவது முறையும் செயலக அணி தட்டிச் சென்றது. 2 ஆம் இடத்தை யாழ். பல்கலைக்கழக அணியும் மூன்றாவது இடத்தை KCCC A அணியும் பெற்றுக்கொண்டன.

இச்சுற்றுப்போட்டியின் சில போட்டிகள் மிக விறுவிறுப்பாக அமைந்து ரசிகர்களினால் பெரிதும் பாராட்டப்பட்டது. இவற்றுள் ஒன்று ஜொலி ஸ்ரார் அணி எதிர் சப்ரா அணி ஆட்டமாகும். இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சப்ரா அணியினர் ஒரு இலக்கு இழப்பிற்கு 61 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்கள். இதில் 3 ஆறுகள், 3 நான்குகள் அடங்க கணேஸ் பெற்ற 36 ஓட்டங்கள் குறிப்பிடத்தக்கது. இந்த ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் துடுப்பெடுத்தாடத் தொடங்கியதும் சப்ராவின் வெற்றியில் சந்தேகம் இருக்கவில்லை. ஆனால் சசிசேகரன் மிகத் திறமையாக ஆடி சப்ராவின் வெற்றியைத் தட்டிப் பறித்துவிட்டார். அவர் மொத்தமாகப் பெற்ற ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல் 47. இதில் 3 ஆறுகளும், 3 நான்குகளும் அடங்கும். மேலும் ஒரு பந்துப்பரிமாற்றத்தில் 22 ஓட்டங்களையும் குவித்தார். அன்றையநாள் சசிசேகரனுக்கு உரிய நாளாயிற்று.

குறிப்பிடத்தக்க இன்னொரு ஆட்டம் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணிக்கும் பற்றீசியன் அணிக்கும் இடையில் நடைபெற்றதாகும். முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றலைட்ஸ் அணியினர் 2/60 என்றவாறு ஓட்டங்களைப் பெற்றனர். இதில் குறிப்பிடத்தக்கது, சாதாரணமான ஆட்டத்தை சுரேஸ் மாற்றியமைத்த விதமாகும். அவர், தான் பெற்ற 38 ஓட்டங்களில் 5 ஆறுகளை அடக்கிக் கொண்டார். சரியான அளவுள்ள மைதானத்திலும் கூட அவை ஆறுகளாகவே அமைந்திருக்கும். பற்றீசியன் அணினர் பதிலளித்தாடிய போது 1/61 என்றவாறு சென்றலைட்ஸ் அணியை வெற்றி கண்டனர். ஏபன் 19, எரிக் 12, அகிலன் நான்கு ஆறுகள் உட்பட 25 பெற்று வெற்றிக்கு வழிகோலினார்கள். சென்றலைட்ஸ் அணி ஜொனியன்ஸ் B அணிக்கு எதிராக ஆடிய ஆட்டமொன்றும் குறிப்பிடத்தக்கது. சென்றலைட்ஸ் இவ்வாட்டத்தில் 2/89 என்றவாறு தம் ஓட்ட எண்ணிக்கையைப் பெற்று, எதிரணியினரை 6 பந்து மாற்றங்களில் 44 ஓட்டங்களுக்குக் கட்டுப்படுத்தினர். இவ்வாட்டத்தின் சிறப்பம்சம், ஆட்டமிழக்காமல் அதிரடியாக ஆடிய சதீஸ் (39) அருணோதயம் (35) இருவரின் ஆட்டமுமாகும். இரண்டு இலக்குகள் இழந்த நிலையில், இவர்கள் இருவரும் அழுத்தத்துக்கு இடம் அளிக்காது ஆடினர்.

இன்னொரு ஆட்டம், இத்தகைய ஆட்டங்களுக்கே மாறான முறையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. யாழ். பல்கலைக்கழக அணிக்கும் ஸ்கந்தா அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டமே இதுவாகும். முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணியை குறித்த பந்து மாற்றத்தில் 3/39 என்றவாறு சாதகமற்ற ஒரு நிலைக்கு ஸ்கந்தா அணியினர் தள்ளினர். பின்னர் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினரின் வெற்றி என்பதில் பெரும் சந்தேகம் ஏதும் இருக்கவில்லை. ஆனால் ஸ்கந்தா அணியை 1/22 என்ற நிலையில் பல்கலைக்கழக அணியினர் 5 பந்து மாற்றத்தில் அற்புதமாகக் கட்டுப்படுத்தினார்கள். இதில் திலக் 1 ஓட்டத்திற்கு ஒரு இலக்கையும் கைப்பற்றிக் கொண்டார். இவ்வாண்டு ஆட்டங்களின் அற்புதமான 5 பந்து மாற்றங்கள் என்று இவற்றைக் குறிப்பிட்டாலும் பிழையில்லை.

ஆட்டங்கள் அரையிறுதி நிலைக்கு வந்தபோது முதலாவது ஆட்டம் செயலகம் -பற்றீசியன் அணிகளுக்கிடையிலும், இரண்டாம் ஆட்டம் பல்கலைக் கழகம் -KCCC அணிகளுக்கிடையிலும் இடம்பெற்றன. முதலில் துடுப்பெடுத்தாடிய செயலக அணி 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. பற்றீசியன் அணி மிகவும் பலமான அணியாக இருந்தபோதும்கூட, செயலக வீரர்கள் அரசு, கிருபாகரன், பாஸ்கரன் ஆகியோரின் அபாரமான பந்து வீச்சால் 27 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். முன்னதாக செயலக அணி வீரர்கள்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்...




# ரசிகர்களுக்கு பெருவிருந்தான இரு உதைபந்தாட்டப் போட்டிகள்

அண்மையில், யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இரு விறுவிறுப்பான உயர் தரத்திலான உதைபந்தாட்டப் போட்டிகள் ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தது. உதைபந்தாட்ட, சைக்கிள் ஓட்டப் போட்டி பரிசளிப்பு வைபவ நிகழ்ச்சியின் பொருட்டு, யாழ் றோட்டரிக் கழகத்தினர், எஸ். எம். பெனான்டோ ஸ்தாபனத்தின் ஆதரவுடன் இப்போட்டியை ஒழுங்கு செய்திருந்தனர்.

இப்போட்டியில் குறிப்பிடக்கூடிய அம்சம் யாழ். மாவட்டத்திலேயே சிறந்த முன்னணி அணியினர் பங்கு பற்றிய போட்டியாக இது இருந்தமையாகும். அதாவது முதல் போட்டியாக சென் மேரிஸ் அணியினரும், சென் அன்ரனிஸ் அணியினரும் மோதிக் கொண்டனர். இம்மோதலில் இரு அணியினரும் ஆரம்பத்தில் 'கண்காட்சி'ப் போட்டிதானே என்று விறுவிறுப்பின்றி மோதினாலும், பின்னர் சூடு பிடிக்க ஆரம்பித்தது. இரு அணியினரும் தாம் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என மிகவும் ஆக்ரோசமாக விளையாடினார்கள்.

இப்போட்டியில் சிறப்பாகக் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில், இரு அணியினரும் மேற்கொண்ட 'பாசிங்' முறையிலான விளையாட்டாகும். அதாவது குறுகியமுறையிலான 'பாசிங்' (Short passing) நீண்ட தூர பாசிங் (Long distance passing) என்று அற்புதமான ஆட்டத்தைக் காணக் கூடியதாக இருந்தது. ஆட்டநேர இடைவேளை வரை இரு அணியினரும் 'கோல்' போடுவதற்குப் பலத்த முயற்சி எடுத்தார்களாயினும் அது கைகூடவில்லை.

ஆட்ட நேர இடைவேளையின் பின்னர் சென் மேரிஸ் அணியினர் விளையாட்டில் கணிசமான முன்னேற்றம் கண்டனர் என்றே கூறலாம். இருப்பினும் சென் அன்ரனிசின் நேர்த்தியான ஆட்டம் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. இறுதியில் சென் மேரிஸ் அணியினர் அடித்த பந்தை தடுத்து நிறுத்த முற்பட்ட சென் அன்ரனிஸ் அணியினர் கையால் பந்தைத் தொட்டு 'பனால்டி கிக்' இற்கு வழிவகுத்தனர். இப் 'பனால்டி கிக்' கின் கடமையை சென் மேரிஸ் அணியின் தலைவர் பொறுப்பேற்று வெற்றிகரமாக நடாத்தி முடித்து தன் அணியின் வெற்றிக்கு வழி சமைத்தார். இதன்மூலம் இப்போட்டியில் சென் மேரிஸ் அணியினர் 1-0 என்ற கோல் அடிப்படையில் சென் அன்ரனிஸ் அணியை வென்றனர்.

இப்போட்டியில் குறிப்பிடக்கூடிய மற்றொரு அம்சம் என்னவெனில், மத்தியஸ்தர்களின் திறமையான கடமையாகும். இவர்களின் கடமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. பிரதான மத்தியஸ்தரின் பௌதீக செயற்பாடுகள் சிறப்பாக இருந்தது. மற்றும் உதவி மத்தியஸ்தர்களும் தமது கடமையைச் சிறப்பாகச் செய்து அப்போட்டிக்கு மேலும் மெருகூட்டினார்கள் என்றால் மிகையாகாது.

அடுத்ததாக நடந்த போட்டி, உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு பெருவிருந்தாக அமைந்ததொன்றாக இருந்தது. ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்ய போட்டி அமைப்பாளர்களும் யாழ் மாவட்ட முன்னனி வீரர்களைத் தெரிவு செய்து அதனை 'தெரிந்தெடுத்த குழு' (Sellected Team) அணியாக்கி அதனை சாம்பியன் கோப்பையைப் பெறப்போகும் பல்கலைக்கழக அணியுடன் மோத விட்டமை பாராட்டக்கூடிய விடயமாகும். இப்போட்டியில் பல்கலைக்கழக அணியின் தலைமையை நிலானும், தெரிந்தெடுத்த குழுவின் தலைமையை வெள்ளையும் ஏற்றிருந்தனர்.

இப்போட்டி ஆரம்பமாகிய கணத்தில் இருந்து முடியும் வரை விறுவிறுப்பாக இருந்தது, பல்கலைக்கழக அணியினர் மிகவும் உற்சாகமாக விளையாடினாலும் தெரிந்தெடுத்த குழுவின் அனுபவம், திறமை சேர்ந்து பல்கலைக்கழக அணியைத் திணறடிக்கச் செய்ததென்றே கூறலாம். இருப்பினும் தாம் எதற்கும் சளைத்தவர்கள் அல்ல என்று கூறுமளவிற்கு பல்கலைக்கழக அணியினரும் மிகவும் ஆக்ரோசமாக விளையாடினார்கள். பல்கலைக்கழக அணியின் சார்பில் அதன் கோல் காப்பாளர் 'பாபு', பல தடவைகள் எதிரணியினர் அடித்த பந்தை லாவகமாகப் பாதுகாத்தார் என்றே கூறலாம். ஏனெனில் அவரின் உயரம் மற்றும் சுறுசுறுப்பு அவருக்கு மேலும் சர்தகமாக்கியது என்றால் மிகையாகாது.

தெரிவுக் குழுவின் அணியில் வெள்ளை, ஜெயக்குமாரின் ஆட்டங்கள் குறிப்பிடக் கூடியதாக இருந்தது. இருப்பினும் தெரிவுக் குழுவின் அணியில் இடம்பெற்றவர்கள், தமக்கிடையில் புரிந்துணர்வுடன் செயற்பட்டிருந்தால் இன்னும் அந்தப் போட்டி திருப்தியாக இருந்திருக்கும். ஆட்ட நேர இடைவேளை வரை இரு அணியினரும் கோல் போடவில்லை. இடைவேளையின் பின்னர் ஜெயக்குமார் அடித்த அந்த மின்னல்வேக அடியில் பல்கலைக்கழக அணியின் கோல்காப்பாளரினால் எதுவும் செய்யமுடியவில்லை. தெரிவுக் குழு அணி 1-0 என்ற கோலில் முன்னனியில் நின்றார்கள். இதனை அடுத்து உடனடியாக பல்கலைக்கழக அணியினரும் துரிதகதியில் பந்தைக் கொண்டு சென்று கோல் ஒன்று அடித்தார்கள். அது 1-1 என்ற அடிப்படையில் சமநிலையை ஏற்படுத்தியது. போட்டியின் முடிவும் அவ்வாறே முடிந்தது. ■

நன்றி: ஈழநாதம்

### - லெப். கேணல் குணா -

# வெற்றிக் கிண்ணத்திற்கான கரபந்தாட்டப் போட்டி

## 'A' பிரிவில் நாயன்மார்கட்டு பாரதி வி.கழகம்

## 'B' பிரிவில் மட்டுவில் இந்து இளைஞர் வி.க. சாம்பியன்கள்

லெப். கேணல் குணா வெற்றிக் கேடயத்திற்காக, மட்டுவில் வடக்கு மோகனதாஸ் விளையாட்டுக்கழகம் புரட்டாதி மாதம் 5 ஆம் நாள் தொடக்கம், யாழ். மாவட்ட ரீதியில் 'A', 'B' என இரு பிரிவுகளாகப் பிரித்து நடாத்தி வந்த செற் அப் முறையிலான கரபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டங்கள், அண்மையில் மோகனதாஸ் விளையாட்டு மைதானத்தில் மின்ஒளியில் மோகனதாஸ் சனசமூக நிலையத் தலைவர் திரு. சி. சண்முகம் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

முதலில் இடம்பெற்ற 'B' பிரிவு இறுதியாட்டத்தில் மட்டுவில் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி அதனை எதிர்த்தாடிய விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை, 2:1 என்ற செற்கணக்கில் வென்று 'B' பிரிவு சாம்பியன் ஆனது.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற 'A' பிரிவு இறுதி ஆட்டத்தில், நாயன்மார்கட்டு பாரதி விளயாட்டுக்கழகம் அதனை எதிர்த்தாடிய ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை, 3:1 என்ற செற் கணக்கில் 15:06, 15:12, 13:15, 15:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் பலத்த போட்டியின் பின் வென்று 'A' பிரிவு சாம்பியன் ஆனது.


இவ்வாட்டத்தில் தொடக்கம் முதல் இறுதிவரை பாரதி அணியின் கையே ஓங்கி நின்றபோதிலும், மூன்றாவது செற்றை ஆவரங்கால் அணி இருபுள்ளிகள் வித்தியாசத்தில் வென்ற பின், 4 வது செற்றில் தமது முழு வலுவையும் திரட்டி சாதூரியமாக ஆடியதினால் அந்த செற்றை வென்றெடுப்பது பாரதி அணிக்கு அவ்வளவு இலகுவான காரியமாக இருக்கவில்லை. பாரதி அணி வீரன் சேகரின் சாமர்த்தியமான ஆட்டத்தினாலேயே வெற்றிபெற முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கது.


இவ்வாட்டத்தில் சிறந்த வீரனாக, பாரதி விளையாட்டுக்கழக அணி வீரன் செல்வன் எம். ஜெயக்குமார் தெரிவு செய்யப்பட்டார்.

மத்தியஸ்தர்களாக திரு. த. அப்புத்துரை, திரு. கே. மனோகரன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களும், சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச செயலர் திரு. சுந்தரம் பிள்ளை அவர்களும் கலந்துகொண்டனர். ■

நன்றி: 'ஈழநாதம்'





# காந்தரூபன் அறிவுச்சோலை வாழ்க!



காந்தரூபன் அறிவுச் சோலையே!
கையில் வந்த சந்தனப் பேழையே
ஏந்தும் நின்கொடி எழுகவே வானிலே
இலக்கு நோக்கியுன் பயணம் தொடர்கவே!

வாழி! வாழிய, வளமெலாம் சூழ்கவே!
வையமெங்குமுன் வாசம் பரவுக.

தாயுளத்தை நிகர்த்த தலைவனின்,
தன்னலங் கருதாததோர் அண்ணனின்,
பூவுளத்தினால் பூத்திடும் சோலையில்...
புதிய வாழ்வு புலருதல் கண்டு நாம்
காய்குலுங்கிடும் கற்பகச் சோலையை,
காந்தரூபனின் கற்பனைக் கோவிலை,
வாயெடுத்துமே பாடியே ஆடுவோம்
வளர்கவென்று அன்போடு வாழ்த்துவோம்.

அட்டதிக்குமுன் நாமம் பரவுக
அறிவும், ஆற்றலும் பெற்று விளங்குக.
தொட்ட யாவும் ஒளிர்ந்து துலங்குக.
தோழமையுணர் வென்றுமே தாங்குக.
பட்டு வெண்புறா போலப் பறந்துமே
பாரெலாம் உமைப் பாட நிமிருக
கட்டு யாவுமே அறுக!, கரும்புலி
காந்தரூபனின் நாமம் முழங்குக.

கோடியாண்டுகள் நின் வய தாகுக
கேட்கநாதிகள் அற்றவர் என்றுமே
வாடியிருப்பவர் எம்நிலத் தில்லையென்(று)
வாரி வாரியே அன்பைச் சொரிந்திடும்
நாடிது; என நாங்கள் நிமிர்ந்திட
நம் தலைவனின் கற்பனைக் காவியம்
பாடிடும்; காந்தரூபனின் சோலையே
பாரில் நின்புகழ் வானில் உயருக!

- புதுவை இரத்தினதுரை -


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
Gold Gasse-8, 7000 Chur
SWITZERLAND
Tel/Fax: 077-816609

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers,